பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# வேதபுராணம்.

இஃது

நபி முஹம்மது ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லமவர்களின் தோழர்களில்

முதன்மையாரான

அபூபக்கர் ஸித்தீக்கவர்களின்

வங்கிஷ வழியாகவந்த

காயற்பட்டணம்

## பெரிய நூஹு லெப்பை

ஆலிம் சாஹிபவர்களாலியற்றியதை


சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால்

தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை]  1948  [ரூ. 1—4—0

# வேதபுராண அட்டவணை.


| பக்கம். | படலம். | பாட்டு. |
|---|---|---|
| 6. | காப்பு ... ... ... ... | 1 |
| ,, | கடவுளர் வாழ்த்து ... ... ... | 3 |
| 7. | கலிமா முதலிய காரணப் படலம் ... ... | 19 |
| 10. | தொழுகைப் படலம் ... ... ... | 28 |
| 14. | அல்ஹம்துப் படலம் ... ... ... | 10 |
| 16. | இன்னிசைப் படலம் ... ... ... | 20 |
| 19. | குத்துபாப் படலம் ... ... ... | 18 |
| 22. | வாங்குப் படலம் ... ... ... | 15 |
| 24. | நோன்புப் படலம் ... ... ... | 8 |
| 26. | சிபாத்துப் படலம் ... ... ... | 25 |
| 30. | இல்முனிசாப் படலம் ... ... ... | 15 |
| 32. | தௌஹீதுப் படலம் ... ... ... | 32 |
| 37. | மிஃறாஜுப் படலம் ... ... ... | 30 |
| 42. | உபாத்துப் படலம் ... ... ... | 47 |
| 49. | மகுஷர்க் கேள்விப் படலம் ... ... ... | 13 |
| 51. | மூலாதாரப் படலம் ... ... ... | 25 |
| 55. | வேதவுதிப்புப் படலம் ... ... ... | 27 |
| 59. | பூரணப் படலம் ... ... ... | 15 |
| 62. | வேதப் புகழ்ச்சிப் படலம் ... ... ... | 21 |
| 65. | முச்சுடர்ப் படலம் ... ... ... | 25 |
| 69. | முஷாஹிதாப் படலம் ... ... ... | 18 |
| 72. | ஈரடிக்கொச்சகப் படலம் ... ... ... | 163 |
| 83. | இன்சான் படலம் ... ... ... | 26 |
| 87. | றுஜூம் படலம் ... ... ... | 6 |
| 88. | ஹதீதுகுதுசிப் படலம் ... ... ... | 10 |
| 90. | ஷஹாதத்துப் படலம் ... ... ... | 104 |
| 106. | முரீதுப் படலம் ... ... ... | 181 |
| 134. | யோகமூலிபுனூரு காரணைதப்படலம் ... ... | 7 |


ஆகப் படலம் 26-க்குக் காப்புள்படத் திருக்கவிதை 912.

வேதபுராண அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# அச்சிட்ட வரலாறு.

ஆசிரிய அகவற்பா.

அருளணி அருவும் அழகிய குருவும்
பொருளணி கற்பமும் பொற்பதி னரகும்
வானுங் கதிரு மதியும் கணமும்
மீனுங் கடல்புவி விண்டு மற்றுள்ள
பல்வகைத் தோற்றப் படைப்பின மெவையும்
சொல்லொன் றதனாற் றொகுத்தா சானும்
தத்துவ முளவிறை தன்னொளி யாலோர்
முத்தினை யமைத்த முஹம்மது நயினார்
கற்பூரவாடை கமழும்வாய் மொழியையும்
பொற்புறு வேதம் புறக்கா னையுமே
ஐயுற வுணர்ந்தே யவைகளுட் புதைந்தார்
மெய்பினை யறிந்தே வேற்றுமை நீக்கிப்
பகுத்தறி வாங்கிப் பண்பொடு மனுடர்
இகத்திலும் பரத்து மின்பமே கொள்ளத்
தன்னைத் தானாய் தானே தானாய்
மன்னி நின்ற மகத்துவ மறிந்தே
திருவருட் பெற்றே ஜெயம் பெற்ற காய
பொருள்களைப் புறக்கிய் புகழுறுங் காயற்
பட்டண மதனிற் பகாரு மிறசூல்
இட்ட மிகவா யிருக்கும் யார் களிலே
கற்குவ டணிந்து விண் கழுரு திருக்கும்
நற்குணத் தியலி னன்பரூ பக்கர்
கிளைவழி தோற்றிக் கெம்பீர மோங்கித்
தளர்வுறுச் செல்வத் தண்ணளி சிறந்து
மாவாழ்ந் துலாவி மதிக்கொணாப் புகழார்
பூவா றென்னும் புரத்தினி லடங்கிக்
களிப்புறுங் காரணக் கடலொலி யாகி

நூலவரும் பெரிய நூஹுலெப்பை ஆலிம்
சாஹிபவர்கள் தண்ணுறு மதுர
பாகமாய்ப் பார்போர்க் கம்பக வொளிவாய்க்
காதுக்கோ ரின்பமாய்க் கல்புக்கா னந்தமாய்
ஓதுநர்க் கென்று மூவப்பாய் நயப்பாய்
நால்வழி யினுக்குஞா னந்திறவு கோலாய்த்
தாலமீ தறிஞர் தங்கட்கோர் பொக்ஷமாய்
முக்கனி பால்தேன் மொழிகண்டு சீனி
யிக்கி னினிமையு மிடைந்திட வியற்றிய
பொற்புறு வேத புராணமென் றோதும்
அற்புத காப்பமீ ரூராயிரங் கவியாம்
அன்னதை வேண்டுந ரருமையா யெழுதினும்
பின்னர் பின்னர்கைப் பிழையுறு மாதலின்
அச்சிடி லவ்வா றுகா தென்ன
இச்சையி னனேக ரியம்புதல் பற்றியும்
அருமையிற் சிறந்தகீ ழக்கரை யூரிற்
பெருமையின் வாழும் பேரறி வாளர்
பிச்சைத் தம்பிலெப்பை பெற்றிடு குமாரர்
வச்சிர நிகர்த்த வடிவுறு மேனியன்
வர்த்தகர் குலாதிபன் மதிக்கரும் விவேக
கருத்தினன் மகுதூ முஹம்மது செய்யும்
வரத்துறு மைந்தன் மாண்புறு மீகையன்
திருத்தமுந் தெளிவுஞ் செவ்விய குணமும்
வர்த்தகப் பெருக்கும் வாய்வழா நாணயமும்
விருத்தியா யோங்கி மிகுந்திடு பொருளினன்
மூத்தியின் கிலுறு முஹம்மதென் றோதும்
பத்தியன் கேட்கும் பண்பினைப் பற்றியும்
பெரியோர் நூலைப் பேணுதல் நன்றென
வுரமதிற் கொண்ட வுவப்பதி னாலும்
கீழக் கரையினிற் கீர்த்தியு மன்பும்
ஆழக் கருத்து மழகிய குணமும்
ஈகையும் பெரியோ ரிணக்கமுங் கொண்டு
மாகையை நீக்கு மனத்தினற் சிறந்த

முஹம்ம திபுறுஹீ மன்புரி தனத்தாற்
சுகம்பெற வருசேய் சுத்தலெச தன்ய
ஞானத் தெளிவெர் நானிலு மறக்கா
மானத் தெளிவின் மதியினன் துதியினன்
இரத்தினத் தொழில்கல்ல வெழிலாய்ச் செய்வோன்
இரக்கமார் சீனி பிபுறுஹீம் சாஹிபு
பொருணனி தந்தச்சுப் போட்டுத் தாவென்ன
அருமையிற் கேட்ட வன்பின தியல்பால்
இயம்புமச் சீனி யிபுறுஹீம் சாஹிபு
நயம்பெறத் தந்த நற்கை லிகிதப்
புத்தகத் துள்ள பொறுப்பின் படியே
அர்த்தம் பிசகா தாங்காங்கு பார்த்துச்
சந்தி பொறுத்தர் தளைமோனை யெதுகை
யந்தமா ரிராகம் அவைகளை வேண்டு
முறையோ டமைத்து மொழியற பேச்சைக்
கறைந்திடு கிரந்த வச்சர மமைத்தும்
இன்பொடு மெவரு மெளிதினிற் றெளியப்
பண்பொடு மச்சுப் பதித்துக் கொடுத்தனன்
கல்வியிற் சிறந்த காதிரி யென்னுஞ்
செல்வகன் னகரிற் சிறந்த கண்ணகுமது
வரத்தினிற் பயந்த மகுதூம் பிள்ளை
திறத்தினி லென்றுஞ் செய்தவ மகவாய்
அப்துல் காதி ருண்டகை கடாட்ச
முற்றிடும் பலாபல வுயர்வதினாலே
வண்ணபா பந்தம் வழங்கும்பா சண்டவாக்கு
யெண்ணொடு மெவரு மெளிதினிற் றெளியக்
காவிய புராணங் கழறிசைக் கவிகளும்
பாவினி லுயர்ந்த பண்சித்ர கவிகளும்
இன்பொடு மனேக மெழிலச் சியற்றி
யன்பொடு வெளிரங்க மாக்கிய நிபுணன்
நன்னய வானர் நவிற்றிய புகழே
மன்மகுதூ முஹம்மதுப் புலவனே.

அச்சிட்ட வரலாறு முற்றிற்று.

---

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# வேதபுராணம்.

காப்பு-வெண்பா.

ஆதியே யுன்சுருதி யாயத்தினிற் சிலதை
யோதலா லங்காம முட்கொண்டே—வேத
புராணமெனப் பேர்கொடுத்துப் போற்றுங் கவிதைகளைத்
திராணியுற வேயருணீ செய்.

## கடவுளர் வாழ்த்து.

## தொங்கலென்று வழங்குகின்ற

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

எல்லாம் படைத்தழித் தெழிப்பவல்லாய், எங்க ளுபகா
கிருபை யுள்ளாய்-வல்லாய் றஹ்மத்தும் நிஃமத்துல்லாய், வரிசைக்
குதறத்தா பியத்து முள்ளாய்-நல்லார் நபியிறசூ லுள்ளவை, நபிகட்
காசாக வாக்கி வைத்தாய் அல்லாஹூ றப்பில் ஆலமீனே, ஆதி
றஹ்மானே காப்பு நீயே. (1)

வான மேழ்புவி மலைகடலும், வரிசைக்கல மறுஷுங் குறுசும்-
பாலும் பதுறுமீன் மலக்குகளும், பகரு மனுஜின்னு மிருகமிவை-
தானு நால்யோனி யெழுதோற்றமுஞ், சகல படைப்பின மெவைக்கு-
மூலமான லாயிலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் றசூலுல்லாஹி
காப்பே. (2)

ஆதி யபூபக்க ருமறினுக்கு, மன்பார் மருமக ரானவராம்-
நீதியுது மாணு ரலியாருக்கும், நேசமாகிய மாம னூராம்-சோதி
பசனுசைனார்க்கு மிகு, துய்ய பேரனு ரானவராம்-சாதி யப்துல்லா
திருமகனும், சாஹிபு நபி காப்புத்தானே. (3)

கடவுளர் வாழ்த்து முற்றிற்று.

# கலிமா முதலிய காரணப்படலம்.

எல்லாப் படைப்புக்கு முன்பாகவே, யேக னறுஷுக்குங் குறு சுக்கு முன்-நல்லார் பலகைக்குங் கலத்துக்குமுன், னூ மிருனுக்கு முன்னமேதான்-சொல்லா லொருசத்த முண்டாகியே, துலங்குங் கலத்திற்கன் றுவகையமதாய்-வல்லோன் கலாமுல்லா வரிப்படுத்த, வழங்கினனல்லா முழக்கமாக. (1)

முழக்கம் வரக்கேட்ட கலத்திற்கன்று, முனையிற் சக்கலை தில்லாமையாற்-பழக்கமுடன் ஹறபெழு தாதுரப், பார்த்து மறுத் துமே கோபங்கொண்டு-தழற்கனொடு கும்மென் றுறுக்கவதுங், தானேமுனையிரு பிளவவாகியே-பிளக்க முடனுதி வசனமெல்லா, மேவல் போற்கலமெழுதியே. (2)

எழுதுங் கலத்திற்குப் பேர்கொடுத்தான், யாகூ என்குத்புல் லகுலமென்று-பழுதில்லா நூறு முஹம்மதுக்குப், பதித்தா னுத் தாவைப் பார்வையிலே-தொழுது சுஜூதிலே வெளியானது, துலங்கும் பாத்திமா றாஹதிலே-பொழுது நிலவிசாப் பகலானதும், புகழு மசனுசைனுமங்கொண்டே. (3)

நாமங்கொண் டறுஷுங் குறுசும், நரகும் சொர்க்கமும் வான் புவியங்-கோமா னமருங் கூறுல்ஹூனும், குதறத் தெனுங்கடல் மனுவுஞ்ஜின்னும்-ஆம மனுவாதமுயிரெவையு, மலைக் கலைதாகப் படைப்புண்டான-தேம மெழுவகைத் தோற்றமெல்லா, மிறசூல் நபியைக் கொண்டானதுவே. (4)

ஆன முஹம்மது நபிதமக்கிங், கடியுர் தோயாது நிழலு மில்லைத்-தானமண்பூச்சுத் தொடாத வங்கஞ், சங்கையாய் மேகக் குடைமணமும்-பானர் பார்வைமுன் கண்டதூரம், பார்வை பது போலே பின்னுங்காணுங்-கோனி னறுஷுக்கு மேற்சிரசுங், குறித்த தருத்ததருக்கீழ் பாதம், (5)

பாதம் ரண்டையுங் கண்டதில்லைப், பார்வை மேற்சிறங் கண்ட தில்லைக்-கோதில் மேனியைக் கண்டதில்லைக், கூறு மலஜலங்கண்ட தில்லை-நீதத் துயிலாடை கனைந்ததில்லை, நிசமாம் நகம்ரோமம் வளர்ந்ததில்லைப்-போத மொருநாளு மறைந்ததில்லைப், புகழ் முஹம் மதா மன்னனுக்கே. (6)

அண்ண லாகிய நபியிறசூ, லறிக்கெப் போதினு மிருக்குந்தல-மெண்ணுங் கலிமாவி னடுவெழுத்தி, லேறி விறங்கிடுந் தலமதிலே-கண்ணைத் திறந்தங்கே தானிருப்பார், கருணைப்பேரொளி யாகவே தான்-பண்ணுமதுதொழிலாயிருப்பார், பாரு மாயத்துக் குரிசி யிலே. (7)

குரிசில் முஹம்மது நபிஜாப்பாவிற், கூறுமொரு வண்டை யனுப்பிவைத்தான்-பரிச முடனதின் கொடுக்கின்விஷம் பாராங் துனியாவிற் சிந்துவிட்டாற்-றுரிச முடனெங்குஞ் ஜலமாய்விடுஞ், சோதி முஹம்மதங் கெணைமறந்தா-லரிசமுடனீதான் கொட்டு கென, வந்த வண்டினுக்கல்லாசொன்ஞன். (8)

சொன்னபடிவண்டு கொட்டவில்லைத், தூதர் முஹம்மது மறக்க வில்லைப்-பொன்னூ ராஹமம் புகுந்தபின்னர், புகழ்சேரும் முனைவசுல்க் கறனைன்-மன்னுஞ் ஜாபாவி விருந்துவண்டை, மகிழ்வின லீகையிற் கொடுக்கவாங்கித்-தன்னோர் சரீரத்திற் றேய்த்துவிட்டார், தானுய்த் தேகத்தோ டானதுவே. (9)

தேகந் தனிலான புதுமைகண்டு, திரும்ப வவரோடுந் தாலிபர னூர்-ஆகமுடனேயே அகீதாவெல்லா, மவருக் கறிவித்தா ரழகாக வே-போக மிலாவுவை சுல்கருனைன், போரில் நபிபல்லு ஷஹீது கண்டு-வேகமுடனவர் பல்லதனை, விரைந்து தகர்த்தனர் மேவா மலே. (10)

மேவும் பேருக்கு முரீதினர்க்கும், விசித்த பறுலேழ் வான்னத் தீராறு-காவும் ஷருத்தெட்டு திக்றதைந்து, கருது மிருநான்கு மொழியொன்பது-பாவும் படிதேர்ந்த பீரிடத்திற், பரிவாய் முரீ தாகவேணுமென்று-கோவு தன்குறுன் குதுசியிலே, குறித்த நபி சொன்னரும் மத்துக்கே. (11)

ஒண்ணு னுலூச்செய்து றக்குஅத்திரண், டோதித் தொழுது பின்துஆவிரந்து-கண்ணுன ஷெய்கு முன்னிருந்து, கருதி குறுனைத் தோதக்கேட்டு-நண்ணுக் கைப்பற்றி நஸீஹத்தாகி, நாட்டமுடன் திக்கிர் காதில்வாங்கி-பெண்ணூர் முறுதிலே ஷெய்கைக்கண்டா, லெனைக்கண்டாரென இறசூல்சொன்ஞர்.

வலியகண் கேள்வி பேச்சுமூச்சு, மறைக்கு மிருநாலுக் கப் பாலேதான்-கலைதன் பனிரண்டும் அலியாகவே, கருணை திக் றைந்து மெட்டுக்குள்ளே-மலைமேற் ஷம்சுமின் மீன்விளையு, மதியக் கினிபயித்துல்லாவிலே-கலைத் ஜம்கூவு மூன்றுசுக்கூ, னவின்று னல்லாவுமுல் குறு ஆனிலே. (13)

மத்தா னதுநிருக் காயதுமூத், மவா யிருந்தது சுல்பானதிற், குற்று னதுக்குமே விருந்துதானே, குவ்வ மதிரண்டிற் கிடைநடு வே-சித்தா னதுவாயிற் றிறக்கமோதுந், திருவுங் கருவான ஷத்

துக்குள்ளே—யுத்தா ரமதாரச் சொன்ன னல்லா ஒஸ்ஸமாயி ஒத்தாரிக்கிலே. (14)

ஒஸ்ஸமாயிஒத் தாரிக்கிலே, யுவந்தல் லாசொன்ன னபி தமக்கு, லெஸஸ்த் துடன்மரு லூக்குகட்குள்; மேவிக் கலந் தொன்று யிரியுமென—இஸ்ஸாத் தொழமுன்னே யொருஸா அத்த, திறைஞ்சி வெளியாக்கு மென்றேதினன்-அச்சமி லாநாயன் றிருத்து தஞ-ரதுகொண்டிருந்தார் தஞ் சிபத்தானதே. (15)

தன்னை யறியாத நாளையிலே, தனர்ந்து கண்கெட்ட குருட ரெனப்-பன்னு முஷாஹிதா வானதிலே, பலரூபங் காணும் பரிசு கேளிர்-அந்நேரங்கண்ணோர் யானைதனை, யாளுங் கண்ணிலா லாளர் கண்டு பின்னர் மொழிகின்ற பரிசுபோலப், பேணித் தன்சூறத் தாகு முன்னே. (16)

ஆருமே காபக் கபுசுக்குமே, லானவஸிதுறத்துல் முந்தஹாவு-மேருமௌவத-ருவாசிலா, யிலங்கிடும் சுல்தான் சிறுவின்மேற்-பாக முடனல்ல ஹறமத்திலே, பதிவாந் தலமேவி நடுவாகவே-மோக மெனும் ஹக்கன் கற்பனையா முடுகு மக்காமஹ் மூதாகுமே. (17)

மக்காமன் மஹ்மூதென்னுந் தலத்தில், வழங்கு நாலுக்குள் வருவஸிபத்து-ஹக்காயிக் கெனும் நுகத் தாமூன்றுடல், காணுஞ் சுடர்மூன்று மொன்றாகவே-லிக்காவென் றெருமணிக் குள்ளி ருந்தே, இலாஹஉல் ஹக்கென்றுங் கற்பனையாம் ஸககாவத்தாகவே சொன்பார், தரும் அல்ஹாக்குமுத் தக்காநிறில். (18)

மிசுக்கீ னுலுநாட் பசித்திருந்த, வேளை யவனுக்கோர் காசு வந்து-பசிக்குப் புசிப்புவாங் கப்போகையிற், பாரில் விழுங்காசைத் தேடும் போதி-லசைத்த புவிமனவ் வழிபோறதை, யறியாதவ னந் தக் காசுமேலே-பிசைக்கு முறுதினைப் போலப்பாரு, மென்றே யறுவேஷறு நபி யோதினர். (19)

கலிமா முதலிய காரணப் படலம் முற்றிற்று.

படலம் 1-க்கு கடவுளர் வாழ்த்துடன் திருக்கவிதை 22.

# தொழுகைப் படலம்.

ஒருநூற்றுப்பதி னைல்ஹறுபு, ழுனைக்குங் கலிமிலை மாந்து கொண்டு-நரகே ழுதின்றலை யெழுத்துமேழு, நரகுஷைத் தான்பேர் நீங்கலாக. இருபோ திறக்குமே ழாயத்துடே, யிசுமே ழுழும் பாத் திஹறாவானதிற்-பிறகே பதினான்கு ஷத்துமுண்டு பிசகமேமென்று பங்காயோதுமே. (1)

தாயும் ஜீம்ஹேயும் ஸேயும் சீனும், லேயும் பேயிவை யெழுத் தேழென்றார்-ஆயும் துலில்ஹர்பு ஹியவ்கனவு, மறியும் கனஸ்த வுலைபி அலைக்-காயும் நரகேழின் றலைமையான, கடியஷைத் தான்கள் பேரெனவே தூயவன் றாத ராலநபி, சொன்னாரென வுலமாக்கள் சொன்னார். (2)

இன்னம் பாத்திஹா வரலாறினை, யிசைக்கக் கேளுங்கள் தீனோர்களே—பன்னுமதிலுள்ள விபரங்களும், பண்பாரதிலுள்ள இசுமுகளும் பின்னுமிருக்கின்ற ஆயத்துவும், பேணியோதாதா லுறமிடறு—மின்னுமிபாதத்துச் செய்வதுவு, மேவும் விசளங்கள் மிகுதமாமே. (3)

பாத்திஹத் தொருகுத்தா பாமென்றும், பலன் கொண்டிடு மும்மூல் கித்தபாமென்று—மேற்ற முளவும்மூல் குரு ஆனென்று, மிலங்கும் சூறத்தூர் றஹ்மானென்றும்—போற்றும் சூறத்துல் அஸாசியென்றும், புகழ்சேர் சூறத்து சிபாவாவென்றும்—சாற்றும் சௌபுலம் தானியென்றும், சௌபுல் அசுமாநன் னபியோதினார். (4)

அடவா யதிலில்லா எழுத்திலேயே, யங்கி நரகத்தின் பேரு மாகுங், கொடிய துபூறென்னும் ஜஹன்னமென்றுங், குல்தா வென்றும் சுக்கூமாகு மென்றும்—விடமாகும் சர்ப்பப் பல்ஹீ மென்றும், வெம்பியிருக்கின்ற பிரக்கியென்றும்—திடமாய் முஸ்லி மகளறியவேண்டிச், செம்மல் முஹம்மது நபியோதினார். (5)

பாத்திஹாவிலே ழாயாத்தெனப், பகர்ந்த வுலமாக்கள் மிகுத முண்டு—மாற்ற முறைக்கொண மக்கிகளும், வரிசை பெருகிய மதனியரு—மேற்றமுள சூபா நகரினரு, மிருநான் காயத்தென் றிசைத்தாரெனச்—சீர்த்திமிகவுள்ள கித்தாபுணர்ந்து, சிறந்த பெரியோர்களுரைத்தனரே. (6)

ஆத நபியவர் சுபுஹொகுத்து. மாச ரிபுரு ஹீம் லுஹ ரொகுத்தும்-நீத மூளநபி யூனூசு தாம்-நிகழ்த்தும் வரிசையார் அச ரொகுத்தும், வேத முணரீசா மக்ரிபிலும், வீர நபிமூசா இஷா வகுத்து-மேத மனுகாத றஹ்மான்றனை, யிறைஞ்சி ஞறென்று ருலமாக்களே. (7)

இபுறு ஹீம்நபி சபபியினுலே, யியம்புர் தக்பீறுண் டாச்சு தென்றும்-நவமாம்பிறைபொழு தவையைக்கண்டு, நவின்ற தொஜி ஹத்த தாகுமென்றும்-தவமா மலக்குக ளதாவோதினர், தனியோ னபிமூசா ஆதோதினர்-புவியேழ்புகழ் சுலைமானபியும், போற்றிப் பிசுமில் முன்னோதினரே. (8)

பல்கீஸு நம்பி ராட்டியார்க்கும், பறைந்து விடும்கத்தி லெழுதி னர்கள்-அல்ஹம்து லில்லா ஹீயதனை, ஆத நபி சொன்னர் சபபினு லே-சொல்ஹா றாத்துமா றாத்தானவர், ஸுபுஹான றப்பியல் அலீமெனவே-நல்குர் தவுலத்தும் மலக்கிருவர், நவின்றார் தசு பீஹில் லஇலா வென்றே. (9)

அத்த ஹிய்யாத்தென் ரேதுமஃ, தனைத்து மஹ்மதென் றோதுகின்ற-முத்தி நபியுற்ற மிகுறூஜினிலில், முதல்வர்க்கு வைத்த காணிக்கையாம்-சித்த மகிழ்கின்ற சலாமானது, சிறப்பாகிய முஹம்மதர்க் கெனவே-கத்த னுரைத்தது மாகுமிவை, கருதித் தொழுவோர் களிமா மாகுமே. (10)

இந்தத் தொழுகையில் நிலை அலிபா, மேகன் றுக்கூவுதான் ஹேயா மென்றும்-சந்தே கம்மிலா சுஜூதுமீமாம், தாபுத்த ஹிய் யாத் தாமெனவே-முந்தி யிருமூச்சைச் சொல்குவன்கேள் முதலா மலிபுதான் ஷரீ அத்தென்றே, சிந்தை யுறவாடு மிருஊமுடன், தெளிய வொரு ஹேயு முஹப்பத்தாமே. (11)

வருமே னிலை அலிப் பரமதாகம், வணங்கு ஹேறுக்கூஃ மிருக மென்று-தருமா மீமசுஜூதார் வினமாம், தாங்குர்தாலத்த ஹிய் யாத் திருபிற்-பருமா மலையாகப் படைத்தவனைப், பாங்காயறியவே வணக்கமாக்சு-சுருமா முஹம்மது நபிறசூல், சொன்ன ரதுகண்டு யானுஞ் சொன்னேன். (12)

நிலையார் தக்குபீறு மகுஷறெனும், நிறைந்த றுக்கூவுதான் தராசு நாக்கு-மலையா ஸுஜூதுதான் ஹெளலல் கவுதர், மகிழ்ந்து

மூழ்கியே முஸ்தகிமில்-அலையா தத்தஹிய் யாத்திருப்பி, லானபால முந்தான் கடந்து குலையாமற் சொர்க்கம் புகுதுவார்கள், குதுசி தனில் முஹம்மத ரோதினர். (13)

மூன்பு மணியாய்ப் பின்வருநபிக்கு, முதல்வ னுரைத்தால் வரிசை கேளீர்-அன்ப தொகுத்தினிற் றெழும்பதவி, யைந்து நேரத்திலே யாக்கினன், இன்ப முறு நன்மை யொன்று செய்தா, லிரைந்தாகவே யெழுதச் செய்தான்-துன்பப் பவமொன்றுக் கொன்றல்லாது, துணையா யெழுதிட வேண்டாமென்றான். (14

உந்த மும்மத்தோர் பிழைகள் செய்தா, லுடனே யெழுது வதில்லை யென்றான்-பிந்த இருசாமம் பார்த்திருந்து, பேணியவர் தௌபாச் செய்திலையே, லந்தப் பவமொன்று யெழுதப்படு, மவனுந் தௌபாச் செய்தார் பொறுப்பேன்-சிந்தை நினை நன்மை யெழுதியவன், செய்ய நினைபவமெழுதே னென்றான்-இந்தப் படி யல்லா சொன்னனென, இறசூல் நபியுல்லா தாமோதினர். (15)

செய்யும் பணிவிடை செய்தவனே, சிறந்த இபாதத்துப் பதினேழையும்-பையப் பழகியே தொழுது கொள்ளப், பாங்காய் நாயகனபிக்குச் சொன்னன்-மையலாய்த் தொழவேண்டு மென்று மகிழ்வாய்க் குறுஆனிற் சொன்னதாலே, வையம் புகழ்ஹபிபிறகு லல்லா, வகுத்தாரதிலுள்ள வகையைக் கேளீர். (16)

துய்ய நாயக னைந்து நேரத், தொழுகையைப் பறுலாக்கி விட்டான்-மெய்யாகச் சொன்ன னதனையென்று, மேலா நபி சொன்னருண்மையாக, ஐயமறவாதி பஜுறுனதி லருளும் றக்அத் திரண்டா மென-எய்யு மல்வல்ஹை மீமெனவு, மிசைத்தா னஃ திரண் டெழுத்தானதே. (17)

லுஹறு றக்அத்து நான்காமது, நுண்ணிதமான நான்கெழுத் துப்-பகரும் அலிபுலா மீம்றேயென்று, படைத்தோன் குறுஆனிற் சொன்னனின்னும், வகிருமசறு நால் றக்அத்துக்கும், வகுத்தான் தேஹே ஏசீனெனவே-யுகரு மக்ரிபில் அலிபுலாமீ, மோதின னல்லா வுறுதியாக. (18)

நன்றி ஷாவுக்கு நால்றக்ஆத், நாட்டின னல்லா எழுத்துநா லும்-வென்றி பெறச்சொன்ன னிப்படியே, வேண்டும் பதினேழு

எழுத்தானதும்-ஒன்று மறியாமல் வணங்கிறதை, பொருவ னிபாதத் தேயில்லையென்றான்-பண்டு பயஹாம்பர் மயிலாகவே, பணிந்து ஸுஜூதிட்டார் பண்பாகவே. (19)

கூறும் பதினேழு றக்அத்தையும், கூவி வணங்கினார் வலம்புரிக் குள்-ஆறுமூத்தாக இருந்தகாளி, லுடையோன பணிவிடை யிபா தத்தாச்சு, மீறு மைந்தான நேரமென்ன மிருக்தாகாபு-ஹே-ஏ-ஐன் ஸாது, வாரிங் கிஃதெல்லாந் தொழுகையென்றே, வைத்தான் றொழுகையில் மணிமந்திரம். (20)

பாரு மொருநாளும் பயப்படாமற், பாவி யடியார்செய் பிழை போகவே-ஆறு நூறான காரியத்தை, அல்லா தான்சொன்னான் குறு ஆனிலே-ஆரு மிவ்வகை யறியவிட்டா, வல்லா தான்சொன்னாரக மென்றே-ஆரு மிவ்வகை யறிந்துகொண்டா, லல்லாதான் சொன் ஞன் சுவர்க்கமென்றே. (21)

நிலைதான் அலிபாச்சு றுக்கூ-ஆனது, நிலைபட்டால் றுக்கூஃ ஹேயாச்சுது உலையா மீமாச்சு சுஜூதானது, முற்ற தாலாச்சு இருத்திதாலே-கலையா தருமது தானெழுந்து, காணிக்கை யாச்சு ஹக்குக்காகத், தலையை யறியாமல் வணங்கினுக்காற், றானேன் கபூலல்லவென வோதினான். (22)

ஆகையா லைந்து நேரத்தையு, மறிந்து கலாவிடா மற்றொழுதே-யேக னேவலை யெடுத்தவனு, யிசைத்த தவிர்தலை யகற்றி வைத்துத் தேக வுறுப்பாலுங் கருத்தினாலுந், செய்யும் பாவத்தின் றொடர றக்க-வாகு பெறுந்தௌபா வுடனே நல்ல, வாழ்த்தி மவுத்துன்னி நடப்பீர்களே. (23)

இனிதா கியதறா துஸ்ஸலாத்தி, னிசைத்த விபரத்தின் முறையின்படி-நினைவு தனிலொன்று மொழியிலைந்தும், செறியாம் செயலினிற் பதின்மூன்று மெய்க்-கனதி பெறுகின்ற முஷாஹி தாவுங் கத்தன்றொழுகையில் மறக்காமலே-வினவ வுடனனுய்த் தொழுது கொள்ள, விதியா யிருக்குமென் றுரைத்தனரே. (24)

அல்ஹம் தஃதைந்து ஹறுபானதி, லமைந்த லாம்வந்த வாறு கேளீர்-நல்ல பதினாலு ஹறுபானது நாட்டு முறமையில் கிணறொளி வாம்-இல்மந்த கிந்தில் லாமுங் கூட்டி, யிலங்கு முஹம்மது அல் ஹம் தான-சொல்வந்த ஆதம் சூறத்திலே, தொகுத்தே யறியுங்கா ரூலமாக்களே. (25)

அலிபு மண்ணாகும் லாம்தண்ணீராம், ஆன ஹேகாற்று மீமக்கினி மெலியா தால்வெளி யொன்றாகவே, மேவும் அல்ஹம்தி லெங்கெழுத்து மொழியாம் ஆதமி கோலத்திலே, யுவந்து முஹம்மது மவுஜூதாகக் கலிமாப் பொருளினை யறியவேண்டிக், காணப் பறுலாகும் சுன்னத்திலே. (26)

தாலாம் கால்ரண்டுங் கண்ணனதுந், தானும் ஹேமீமும் காதுக்குள்ளே-மாலா மூச்சிலே நாவலிபு, மருவித் தாலைந்தும் ஜெம்ஹாகினுற்-கோலா காலம்கல் ஆதமியிற், கோமான் சூறத்த தானதிலே-ஆல மதில்மேவு மஹ்மதிய்யா, அடங்க லாகும்அல் ஹம்துலில்லா. (27)

தன்னை யறியமுன் காபிரென்றார், தலைவ னறிந்தபின் னிசுலாமென்றார்-பின்னை யறிகுவ தறிவில்லையாற், பேசும் கமலக் கண்ணூடே-மன்னன் றஹ்மத்து ஹலறத்திலே, மணியாம் தௌசினில் வீற்றிருக்கு-மன்னை பிதாவாக முன்னனவ, ளுதிஅல்ஹம்து லில்லாஹியே. (28)

தோழுகைப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 2-க்குத் திருக்கவிதை 50.

---

# அல்ஹம்துப் படலம்.

கலிச்சந்த விருத்தம்.

மேவெழுத்துக ளாலும் வியந்து மயங்கியே
யாவி தொந்தி யுதிரத் தடைக்கிமை தானிற்போய்
மூவை முந்திரின் காவல் வழியின் முயங்கியே
அவூது பில்லாஹிமி னஷ்ஷைத்தா னிர்றஜீம். (1)

வேறு.

வசையுள்ளா ரைவராவர் வாய்வரா தான்கூர்
விசையில்லாத வின்பகுதி மேவாக ரானபேர்
நிசமில்லார் செய்பமறை நேர்மை நேர்தலே
பிசுமில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மானவா. (2)

வேறு.

இல்லில்நின் றிறைபிசைக ளெங்குமாகிய
சொல்லிநின்று நற்சுரூப தோற்றமெங்கு மாகவும்
வல்லநாயகன் னீயென்று வாழ்த்துஞ்சொல்
அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். (3)

வேறு.

சிற்றைத் தன்னும் செகப்புங் கறுப்புமாய்
துர்றத்தென் றொருமறு அத்ததின் சூத்திரம்
பிர்றத் றேவர வேண்டுதல் செய்குவாய்
அர்றஹ் மானிர்ற ஹீமென வானவா. (4)

வேறு.

தாலில் நின்று தயவெங்கு மேவிய
ஹாலி லுன்னைக் கருதி வணங்கிட
மேலு முன்னிதம் வேண்டுதல் செய்குவாய்
மாலிக் கியவு மித்தீனன் மன்னவா. (5)

வேறு.

லிய்யாக்க நிசப்பட்டதே மெய்யாகி வைத்துநீ
நிய்யாக வுவப்போடிவை நிய்யாக்கி விட்டதால்
குய்யாக்க நகைப்பற்றதைக் கொய்யாக முத்திதா
இய்யாக்க நஃபுதுவ இய்யாக்க நஸ்தஈம். (6)

வேறு.

அஹதில் நின்று மரும்பொருள் மேலவன்
பகுத்து வந்து பரிமள வாசமாய்
வகுத்துயர்ந்த வகுப்புக்கு மாகினான்
இகுதி நஸ்ஸிறாத் தல்முஸ்த கீமென்றே. (7)

வேறு.

உறுதல கோடு மெவையு மமைத்தவா
நறுதன மென்னு நடுவி லெழுந்தவா
புராதன மேன்மைப் புகழ்கள் படைத்தவா
ஸிறாத்தல்ல தீன அன்ஹம்த அலைஹிம்நீ. (8)

வேறு.

தக்கவல் பானவர்கள் தன்னிலேயை விட்டுனேயுந் தானுங்
காத்தே யொக்குமறை யோரவர்கள் தன்னிலேயி லுற்றனேயு மோம்
பலாக்க மிக்க பஃனுவான சொற்குலவு முவந்தபடி மேன்மைக்
கோர்த்த—இக்கெனுஞ்சொல் கொய்ரில்மகு லூபி அலேஹிம்மென
இசைத்தல் நீயே. (9)

வேறு.

வல்லபப் பொருள் வாஹிதாய் வந்ததிற்
சொல்லுக் தூதெனுஞ் சொல்லே யியற்றினேய்
வெல்லு மில்லல்லா வென்று வியந்தசொல்
நல்வ லல்லா அல்லீ ளுமீ னுனவா. (10)

அல்ஹம்துப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 3-க்குத் திருக்கவிதை 60.

---

# இன்னிசைப் படலம்.

அல்லா வுரையின்படி யும்முல்குறு ஆனதிலே
சொல்லால் மறைபோலே தொழுதே துஆவிரந்து
வல்லாண்மை பொய்யும் பகீலுங்கிபறும் மறந்திங்
கில்லான சொல்லதிலே யிறைஞ்சுவது நற்காலம். (1)

குல்அவூது சூறத்திலே குதாயோதி னுன்வசனம்
அல்லலனு காச்சற ஹறதுபோலே தானடங்கு
வல்லபமுங் கற்பனேயும் வந்தவிடந் தானறிந்தே
இல்லி லெழுஞ்சுடரை யிறைஞ்சுவது நற்காலம். (2)

குல்குவல்லா வானதிலே கூறினனல்லா வவாருவன்
நல்வணக்கமாம் பாத்தி ஹாவோதி நன்றிசெய்தால்
சொல்பிழை வாராதுசுப ஹானல்லா வுதவிகொண்டே
அல்லுபக லற்றவிட மறிவதுவு நற்காலம். (3)

தப்பத்திய தாசூறத் தானதிலல் லாவுரைத்தா
னெப்பொருளு மும்முல்குறு னோதி லிசைந்துவந்தாற்
செப்பமுடன் சொர்க்கமதிற் சேர்ந்துகூறுல் ஹீன்களுட
னொப்பமுடன் சேர்ந்திருந்தே யுவப்பதுவு நற்காலம். (4)

இஸாஜ அநசுறுல்லா ஹிறைசூறத் தானதிலே
மாசால ரசவாதம் வைத்திருக்கு தென்றுசொன்னான்
கோஜா நபிக்கிறைவன் கூறுகின்ற சொல்லறிந்தால்
பூசா பலன்பெறலாம் பொய்மறந்தால் நற்காலம். (5)

குல்யா ஐயுஹல்காபி றூன்குர்ஆன் சூறத்திலே
பொய்யார் குபிராறுத்து மெய்யதிலே போதங்கொண்டு
சையோகஞ் செய்யாமற் றானவனு பியத்தாகி
இல்யாக நன்னபிசொல் லெற்றிக்கொண்டால் நற்காலம். (6)

இன்னா அஃத்தைனா இறைசூறத் தானதிலே
மின்னார்க ளாண்களுக்கு வில்லிபில்லி வாராமற்
பொன்னா ரிறசூல் புகழ்சலவாத் தோதிவந்து
கன்னாசு செயல் மறந்து ஹக்கறிந்தால் நற்காலம். (7)

அருபித் தல்லதிரூ றத்திலுவர் தாஙிசொன்னான்
முருக்கபாவி லேயிருந்த முச்சுடரைத் தானறிந்தே
இருதாய் மிசுக்கீன்கட் கிரணதான மீந்துவந்து
குருணயத் தோதித்தொழுங் குணமறிந்தால் நற்காலம். (8)

லியீலா பீகுறைஷி லிறையோதினான் வசன
மாலார் மருந்நீடு வஞ்சனை தெரித்தோடும்
பாலான சிர்க்கஃபத் துல்லாவைப் பார்வைகண்டு
காலோ டமுதகனி கருதிக்கொண்டால் நற்காலம். (9)

அலம் தறக்கை பாசூறத்த திலுவந்தல் லாஹுசொன்னான்
ஜலந்தனிலே தான்குளித்துத் தசுபீஹு செய்துவந்தாற்
பலன்மிகுதி வந்தெய்தும் பாக்கியங்க ளுண்டாகும்
கலம் அறுஷில் நாட்டங்கொண்டு ஹக்கறிந்தால் நற்காலம். (10)

வைலுன்லிக் குல்லியிலே வல்லவன்மா ராயஞ்சொன்னான்
ஐனுல்ளக்கீ னனபல னைந்தொகுத்தி னுர்தொழுது
பயிரதுக்கு நீர்பாச்சும் பலனதுபோற் பார்வைகண்டு
கையூ மெனுர்தலத்திற் காத்திருந்தால் நற்காலம். (11)

ஓல்அவிரி சூறத்திலே யுவந்தோதி னானிறையோன்
நல்சபறு லாஙிறிலே நாட்டங்கொண்டு பார்க்கச்சொன்னான்
அல்சிபசு மேலாக வானபெருங் காட்சிகண்டு
சொல்சுவனஞ் சேருதற்குத் தொழுதுவந்தால் நற்காலம். (12)

அல்ஹாக்கு முத்தக்காது ருகுமந்தச் சூறத்திலே
இல்முன் எக்கீன்மாத்தி லிருந்துமயில் ரூபங்கொண்டே
இல்யா ஐனுல்எக்கீ னிருந்தகிணற் றிற்குளொளி
சொல்யா றசூலென்ற சொல்லறிந்தால் நற்காலம். (13)

அல்காரி அத்துமல் காரிஅத்து சூறத்திலே
நல்வசன மானஜெம்கில் நன்று யிருக்கச்சொன்னன்
குல்மவுன கீதங் கூவுங் கிளிமொழிந்த
சொல்பவுனமாட அம்பு தொகுத்துவந்தால் நற்காலம். (14)

ஒல்ஹாதி சூறத்ததி லுவந்தோதி ஞனிறையோன்
அல்லா இசுலா மைந்தாறு மீமான்கொண்
டில்லார் திரையறுத் தினத்துடனே சேர்ந்திருந்து
குல்லான பார்வையிலே கூடிக்கொண்டால் நற்காலம் (15)

இதாசுல்சிலத் தில்லறுலு லில்சால ஹாவதிலே
கதாவின் றியே கலிமா கமலமதிலே தெளிந்து
பிதாவான வனபயம் பேசும் பொருளறிந்து
நிதானமுட னீமா னிறைந்திருந்தால் நற்காலம் (16)

லம்யக்கூ னில்லதீனக் கபறுவெனும் சூறத்திலே
அம்அபு சம்கிணற்றி லன்பாக நீருந்தி
சம்மான நல்மஃரி பத்தினிற்கலா மொழிந்த
தம்மான கேள்வியிலே சார்ந்திருந்தால் நற்காலம். (17)

இள்ஞஅன் சல்ஞவி லேகமுத லோனுமைத்தான்
முன்ஞளோ டிந்நாள் மொழியும்பின்ஞ ளும்மறிந்து
கன்ஞ சவனேவிட்டு ஹக்குடனே சேர்ந்திருக்கச்
சொன்ஞர் முஹம்மதுற சூலேக்கண்டால் நற்காலம். (18)

இக்குறஃ பிசமிறப்பி யிறைசூலத் தானதிலே
தக்குமஃ ரிபத்தினைத் தானறிந்துணர்ந்தாக்காற்
பிக்குறும் நினைவொடிக்கிப் பேசும் பொருளேயறிந்தே
ஹக்குலா மமலதனை அறிந்திருந்தால் நற்காலம். (19)

வத்தீனி வசைத்தூனி ஒத்தூரி சூறத்திலே
பக்தியுடனெஞ்சுவந்து பாருமிசுக் குற்றறிந்து
மூத்தான துற்றத்துல்பை லாவென்னு மூவுலகிற்
சித்தான மாளிகையிற் சேர்ந்திருந்தால் நற்காலம். (20)

இன்னிசைப் படலம் முற்றிற்று.

ஆ படலம் 4-க்குத் திருக்கவிதை-80.

# குத்துபாப் படலம்.

தொங்கல்.

நட்பாம் ஜ¬ம் ஆவின் வேளையிலே, நவில்வார் துன்யாவின் பணுவானதை-அப்போதே அல்லாஹூ¬த் தஆலா, அரியமலக் கைக் கொண்டவர் தலைமேற்-கைப்பாம் லகுனத்து முசிபத்தையுங், கலக்தொன்றாகவே யிறக்கச் சொல்வான்-சப்பஹ் லில்லா ஹீபெ னவே, சாற்றும் சூரத்திற் தோற்றும் பாரே. (1)

அறுசீர்க்கழிலடி யாசிரிய விருத்தம்.

நித்தமு மைந்து நேரம் நிமாசுசெய் மூமி னானோர்
பத்தியி னற்பான் பேர்கள் பள்ளிவந் திருக்கி லப்போ
கத்திபா னவர் தானேரக் கணக்கொடு மோதப் போதும்
புத்தியின் குறானுக் குள்ளே புகன்றன னாதி நாயன். (2)

வடுவொன்று மில்லான் வேண்டு மெனவல்ல நாயன் சொன்னான்
அடிமையா யொருவருக்கு ளாகினோ னாகா தென்றுங்
கொடுமைசெய் பவருமாகாக் குணமிலாப் பலிசை வாங்குந்
தடிமைசெய் ஹ¬க்குமுள் ளோருஞ்சாற்று ஜ¬ம்ஆவிற் காகார். (3)

பெண்கொளா தவருஞ் சின்னப் பிராயத்தோர் கிழவ ரான
தங்களும் நாற்ப துக்குட் டரித்தவ ரல்லர் கேளீர்
பங்கினில் மால்மி குத்தும் பசித்தவர்க் கீயாப் பாவி
யிங்கிவர் நாற்ப தெண்ணத் திற்குளே கூட்ட லாகார். (4)

ஒற்றைக்கண் ணோடு மொற்றைக் காதுமூக் கிழியுள்ளாரும்
ஒற்றைக்கால் கையி னோடு மொருபல்லுக் கொச்சை யானோர்
மற்றிய மார்பின் மேலே படர்ந்திடுங் குறைகோ யாள
ரித்தனை பேருந் தானே யிரண்டிரு பதுபேர்க் காகார். (5)

வேறு.

அளவு முழுதுந் தெரிந்தகுறு னறிந்தே பறுலு சுன்னத்துக
ளுளமீ துணர்ந்து கலிமாவை யொருநா ளினுமாறு தினோர்
பழகுந் தீனி னிசையுடையோர் படைத்தோன் பேரிற் போாசை
யளையுங் கிருபை மூமினவ ரழகா கிடுநாற் பதுபெயரே. (6)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

குறித்தநல் மூமீ னோர் குத்துபாக் கேட்க வந்தோ
ரறிந்திட வோதும் கத்தீ பவர்மொழி செவியுறாது
பறைந்திடி லிருந்தோர் குத்து பாப்பலன் குறைவா மென்ன
நிறைந்திடுங் கருணை யாதி நிகழ்த்தினன் குறுனிற் குள்ளே. (7)

தங்களின் முஷாஹறி தாவுந் தரித்திடு முழுக்க பாவும்
பொங்கிய அறிவு தன்னாற் போற்றியே புலம்பல் தானு
மிங்கிதத் தூக்க மூர்க்க மியல்பிலாச் சோம்பல் சாய்தல்
மூங்கிய வெட்டுங் தங்கள் முறைகுத் துபாவுக் காகார். (8)

ஒருவரோ டொருவர் நக்க லொடு மொழி பேசினாலும்
அருவருத் தேப்பஞ் சத்தி யஃதொடு மசதி புத்தி
வெருவத லச்சங் கூச்சம் வேலையோன் றியற்ற லெல்லாங்
குருமொழி குத்துபாவிற் குறுதெனக் குறுனிற் சொன்னான். (9)

செவியுங் குறைவாகிச் செவி செவிடுஞ், சிறப்பின் மேனிமேற் சிரங்கும் வங்கும்-குவியுங் குரங்குபோல் மேனிகூனிக், கொஞ்சங் கீழ்த்தாடி சிரைத்த வரும்-புவிபிற் றலைபிலீர் வண்ணமாகப் பொருத்திச் சுல்பாக்கள் வைத்தவருங்-கவியு மறுக் கண்ணோர், மூகங்கறுத்தோர், கழறும் குத்பாவின் கணக்கிற்காகார். (10)

மஸ்தா னவர் தலை விரித்தோர், மருளு முடியொடுந் தாடியொடு மூஸ்தாதுகளெனச் சொல்லிப் புழுகி, யுடம்பெல்லாம் பூசுமணமிருத்தோர்-மஸ்தாய்க் கள்ளுட னரக்குமுண்டு, மருளு மிரு கண்ணுஞ் செவந்தவரும்-விஸ்தாரக் குத்துபாவுக் காகார், வேந்தன் றொழுகைக்கு மாகாரென்றார். (11)

ஒரு பக்கம் சாய்ந்த தலையுங்கண்ணு, மொருகை யொரு காலும் வளைந்தவரு-மருவும் வங்கொடு சொறி சிரங்கும், வாதக் கால் நடுக்குள்ள வரும்-பருவந் தப்பிய மூப்பினோரும், பழைய வலுப்பிடிப் பில்லாதவரும்-இருபதிருபது பெயர் கணக்கிற் கிணங்கா ரென இறசூ லோதினர். (12)

சீத்தை வடிகாதுங் கணிற்பீளையும், சிறப்பில்லா வாயுங் குஷ்ட முள்ளோர்-மாற்றக் குவரினோ டுறவுள்ளோரு, மந்திரம் பேயோ டுறவுள்ளோரும்-வேற்றுப் பாஷையாற் பலகாலமும், வீங்கிக் கூத்தாடித் திரிவோர்களும்-வார்த்தை மாறுட்ட மானவரு மனுநாற்பது பெயர்க்காகா தென்றார். (13)

சாரைப்பாவுபோல் மேனியுள்ளோர், சகலஜனங்களும் பொய்ய னென்போர்-பேரை மாறுடிப் பலகாலமும், பேயை விரும்பிய பேர் கள் கற்பி-னுரை முகநோக்கி முறையிலாம, லடித் தடித்துதான் பேசும் வீணர்-ஊரைக்கோட்டொல்லிக் கெடுத்தவரு, மொருவன் குதுபாவுக்கொண்ணுரென்றூர். (14)

கூட்டும் அலிபாச்சு அவ்வலாச்சு கோபான் லாகிறு முடிவு மாச்சு சூட்டிமறக்தாக்கால் ஹறுமாச்சுது, சொல்லையடக்கினுல் பாத்தினுச்சு-நாட்டிக் கலிமாவைப் பாராக்காக்கினுல் நாலு ஹறுபாச்சு லாகிருச்சு-மூட்டி யுறங்கினுல் மவுத்தாச்சுது, முறவாகு மிசைகளெல்லாம். (15)

நல்ல றேயதானே பீஸபீலாம், நலமானதாலே யொலியதாசுச்-அல்லலானது மிருளதாச்சு, அல்லாஹு அனு இல்லாஹுயெனும்-சொல்லுக்கடக்காத சிபாத்தானது, சொல்ல இலாஹாச்சு ஜன தாச்சு-எல்லைக் கடங்காத இறுஷாதெனும், ஈமானஃதாச்சு கபூ லாச்சுதே. (16)

மாற்ற மில்லாத அலிபானது, மன்னன் ஷீஅத்துத் தானுச் சுது-ஏற்றமாகிய நிலவதாச்சு, எங்கே யாச்சுது-றாஹானது-ஆத்து மாவான ஹபாத்தானது, அனகூவாச்சு முஹீமாச்சுது-சாற்றும் சுஜூதாச்சு மீமாச்சுது, தனியோன் தாலாச்சி இஃத்திதாலே. (17)

முந்த ஷரீ அத்து நிலையாச்சுது, முற்றும் அலிபான தக்பீறிலே-சொந்தமாகிய றுக்கூ ஆனது, துய்யோன் கேயான தரீக்கத்தாச்சு-அந்தமாகி மீமானது, மருளாம் ஹக்கீக்கத்து ஸுஜூதாச்சுது-சிந்தை தெளிவான தாலானது, செய்ய மஃரிபத் தாச்சுதென்றூர். ()

குத்துபாப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 5க்குத் திருக்கவிதை-98

# வாங்குப் படலம்.

## தொங்கல்.

பாகமுடன் சொல்லும் வாங்குதனிற், பறுலு பதினொன்றுண்டுரைக்கக் கேளீர்-ஆகந் தனிலொரு வாங்கோதிட அறியும் புகழுள்ளானாகவேணும்-ஆகு மிசுலாமாயிருக்கவேணு, மரிய மதியுள்ளானாகவேணும்-காயும் ஹபுறுகள் திருத்தத்தோடு, கலிமா விபரமாய் மொழிய வேணும். (1)

சத்தந் தகுதிய தாகவேணுர், தணியா வாங்கிஷ மாகவேணும்-கொத்தி னொழுங்காக மொழியவேணும், குறிப்பால் நேரங்களறிய வேணும்-ஒத்தனாக நின்றோதவேணு முறுதி அறபாக வுரைக்க வேணும்-பத்துக் குபிருண்டும் வாங்கனிற், பகரக் கேளுகாள் தீனோர்களே. (2)

அல்லா வெனச் சொல்லும் அலிபதனை, ஆக்கமுடனே தானீட்டினாலும்-அக்குப றென்றிடும் பேயதனின், அலிபை யுரமாக வுரைத் திட்டாலும்-அஷ்ஹது என்ற ஹேயதனில், அலிபை யுரமாக நீட்டினாலும்-ஹேயா வோதவேண்டியவிடத்தில், கேயாகவர வோதினாலும். (3)

இல்லா ஹாவெனும் லாமதனி, லிசைந்த ஷத்தினை விட்டிட்டாலும்-அஷ்ஹதென்கிற தலத்திலேதான், அலிபை மறந்துதானயர்ந்திட்டாலும்-முஹம்மதெனச் சொல்லும் ஹேயிலேதான், மறந்தங் கலிபைத்தான் மொழிந்திட்டாலும்-ஹைய அலஸ்ஸலாத்தென்னும் ஏயை, ஹைறயா வெனச்சொலி யுரைத்திட்டாலும். (4)

ஹைய அலல்பலா ஹெனுமெழுத்தில் ஐனை யுரமாக நீட்டினாலும்-ஹைய வெனச்செப்பும் ஏயிலேதான், கடந்த ஷத்தினை விட்டிட்டாலும்-இந்தப் மத்திலுங் குபிர்விளையு, மிசைந்த பதினொரு பறுலுகளும்-அந்த முடனே னறியாத போவர்கள் வாங்கிடப் போகாதென்றார். (5)

எல்லா இமாமுக்கும் இமாமிறசூ, லெடுத்தேயோதின பிக்கு ஹதிலே—எல்லாஇமாம்களு மிதைஹநீதா, யெடுத்துச் சொன்னூர்கள் கித்தாபதிலே—நல்லாமுஃமின்கள் முஸ்லிம்களும், நடந்த முறைதனை யறியவேண்டி—வல்ல சலாமுல்லா வெனுங்கித்தாபில், வழுத்தும் வழுத்தலை யுரைக்கலுற்றும். (6)

எப்போதும் செரி நீதமுள்ள, எங்கள் நபிபிறசூ லுல்லா வுக்குத்—தப்பாமல் இபா தத்துச் செய்யத், தனியோ அனுப்பி வித்தானெனவே-மெய்ப்பாகிய வாஜிப் சுன்னத்தென்றும், விளங்க ஜிபுரியீல் தாமோதினர்—நட்பாம் நாற்பது சுன்னத்தையும், நவிலு மறுமூன்று ஷறுத்தையுமே. (7)

இந்த வகைரண்டும் பறுலாறையு, மேக நாயகன் வாங்கிச் சொல்லச்—சொந்த ஜிபுரீலை யழைத்துநீவிர், தூயநபிக்குத்தான் விளம்பு மென்றான்—அந்தப் படியேதான் முஹம்மதனு ரரிய கண்டிங்கு மப்போதிலே வந்து சொல்லின ரமார்கோமான், வரிசை நபியுல்லா கனவிற்கேட்டார். (8)

ஆபியத்தான ஆலநபி, யருளிச் செய்தார்கள் மூமின்கட்குச் சூபியத்தான கித்தாபதிலே சொன்ன ஙயகனவனருளாய்த்—தாவியுரைத்ததை யுலமாக்களே, சாட்டும் பறுலாறை யூட்டுகிறேன். கூவியத்தான அறுவகைபாய்க், கூப்பிட வாங்கிற் பறுலாமென்றார்.

ஆறுதரம் அல்லாஹுா அக்பர் அஷ்ஹது தரண்டு தரமாக வும் பேருள்ள ஹைய அலஸ்ஸலாத்துர், பிசகிலாஹைய ஹலல் பலாஹும் ஊறு மிஃதிரண் டானதோடு, முணரும் லாஇலாஹ இல்லல்லாஹு மீறு மிவையாறு வகையானதை, மேலோன் பறு லென விளம்பினனே. (10)

இந்த வகையாறு முதலிற்சொன்ன, இனிய ஆறுமேபறுலா மென்றூர்—பிந்திச் சொனவாறும் பேணுமெனப், பெரியோன் குறுஆனிலே யோதினன்—கொந்து வீசியவகையானது, கோமான் தான் அக்குபர்றெனவே—சிந்தை தெளிந்துள வுலமாக்களே, செப்புவேனினிப் பனிரண்டையும். (11)

அல்லாஹு வென்று முதலிற்சொல்ல, அதுவே பறுபலாகு மதின்பிறகே—அல்லாவென் றறைந்து கிரஞ்சொல்வ, மதுவே ஷறுத்தாகு மெனவோதினர்—வல்லான் ஹைய்யரண் டோதுவதை, வகுத்தான் ஷறுத்தென வகையாகவே—ஒல்லா வுள்வாங்கு ஷறுத் தெனவே, யோதினன் பதினேழானதே. (12)

நல்ல அஷாஹறதி ரண்டினையும், நடக்கும் ஷறுத்துப் பத்தொன்பதையும்—வல்ல நாற்பது சுன்னத்தெனு, வகுத்து முறைக்கிறுன் கலாமிற்கேட்டார்—அல்லா இருறுபி லிருபத்துநான், கருளுங் கஃபாவைப் பார்ப்பதுவும்—சொல்லிற் செவிக்குட்கை வைப்பதுவுந், தூற்றும் பின்வந்து சொல்வதுமே. (13)

சூட்டு முழுக்கொள இசுலாமாகத், துய்ய வாலிப வாண் பிள்ளையாய்—மேட்டுத் தலைமேலே நிற்பதுவும், விளம்பும் சுபுஹாக்கு அஸ்ஸலாத்தும்—கூட்டுப் பைத்துல்லா வலதுபுறம், குறித்த றூற்றிருபது நாலடி—தாட்டி மற்றுள்ள இகுறுகும்நற், றன்சிஹாம் ஸலவாத்து முன்னே. (14)

எல்லா நிய்யத் தானதுவு, மிசைந்த அந்நேரஞ் சொல்வதே—வல்லார் பேச்சொன்றும் பேசாமலே வரிசை றஹாமானை நாடி நின்று—நல்லா யிபாதத்துச் செய்யவேண்டும், நயந்த வகையான வாங்கானதை—அல்ல லின்றியே சொல்வது, மாக நாற்பது சுன்னத்தாமே. (15)

வாங்குப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 6-க்குத் திருக்கவிதை 113.

---

# நோம்பு படலம்.

## தொங்கல்.

ஆண்டிற் கொருபிறை பறலானது, ஆண்டிலேந்துநாள் தக்குபிறும்—ஆண்டிலே யொருநாள் ஹஜ்ஜதாம், ஆண்டிலே யைந்து காலையிலே—தோன்றும் லேலத்துல் கதிரியாகுஞ், சொல்லத் தொலையாதே யெந்நேரமும்—தாண்டும் பீஸபீல் ஸக்காத்தையும், தனியோன் பறலேந்து நேரத்தையும். (1)

நோமடியென்ன நீளமென்ன நிகழ்த்தும், நடுவென்ன முடிவுமென்ன ஏர்செய் நிறமென்ன அபயமென்ன, இலங்கும் லேலத்துல் கதிரியென்ன—ஆரு மிரவென்ன பகலுமென்ன, அதபுநெரியென்ன வொழுக்கமென்ன—சார்செய் ஜமாலினின் சகாயத்திற், சமதானவன் சொன்னுன் சரியாகவே. (2)

அடிதான் காற்றாகும் நீளம், ஜலமாடும் நடுவனல் மூடி பிரிவாம்-படிதானுகாய வைந்து மொன்றாய்ப், பகர வொன்றான நிறமதுவும்-நெடியோன் கீலத்துல் கதரியாகும், நேர்மையாகவே யடக்கத்திலே-துடியான் துவர்க்கர்தான் ராவாமது, துலங்கும் பெருநாளும் பகலாகுமே. (3)

உம்முல் குறுஆனும் ஹாசிலானு, லுவர்தென் கோலமாய் வார்த்தைசொல்லும்-செம்மல் மூளையுந் தோட்புயமுஞ், சிறந்த அலிபுடன் தாலுங்கூட்டி-நம்மிவ் நற்கோல மாயெழுந்து, நபி நாயகஞ் சொன்னார் சூபியத்திற்-சும்மா சொல்லுவோர் காபிருவார் -துய்யோன் தபாரக்காம் ஆயத்திலே. (4)

ஆலம் சவிறான தருமதுவாம், ஆலம் கபிறான முஹம்மதுவாம்-கோலம் பக்கீறான ஆதமிய்யிர், கூடி முடிந்ததோ ரிரண்டு மொன்றும், காலன் இசுறாயீல் காவல்வந்து, ஹக்கைக் காணுமல் மறைய வைத்தான்-சூல ஆலத்தைக் கடக்கவேண்டிச், சொன்னார் நபிசூபிக்கித்தாபானதில். (5)

அரிவட்டமதான அஹதியத்தி, ஊமலை யறிந்தவர் மூன்று மொன்றும்-சுரிவட்டந்தனி லுறைந்திருந்து, துய்ய வஹதியத் தொளியைக்கண்டு-பரிவட்டமதான இதயத்திலே பரிந்த வாஹிதத் தழகையின்று-குருவட்டமதான நபியிறசூல், குல் அஹூதிலே பாருமென்றார். (6)

அலிபும் ஹேயுந்தா லாகமுன்னே, அடங்கலும் மொக்க ஜம் ஆகவே-மெலியா எழுத்திலே காமிலான, மேவு முறுஷிது பாதந் தொட்டுச்-சலியா தவனருள் தனதாகியே, தங்கும் நவீஹத்துத் தானுகினல் ஒலியாம் ஹறுபினை மாறுமலே, ஒனஹன் னபுசினில் ஹவாவாகுமே. (7)

களைந்த கலைநாலும் நடுவில்வைத்துக், ககன கமலத்தி னூடுருவி-வளர்ந்த அக்கினி வீடுந்தாண்டி, மகாமேரு கிரியதி னூடு பாய்ந்து-அலைந்த முத்தலக் கருளைச்சேர்த்து, அம்பரத்தொளி கடலைத்தாண்டியலந்து யீரத்தெட்டி தழுகப்பா, லவன்றான் லாறப்பஹுலா அப்தாக. (8)

நோன்புப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 7-க்குத் திருக்கவிதை 121.

## ஸிபாத்துப் படலம்.

### தொங்கல்.

கலிமாவினி லீரேழ் சிபத்துண்டுகேள், காணவே யகம்புரமு மாகும்-மலிவாய்ப் புரத்தெழு சிபத்துமுண்டும், வழங்கு மகத்தெழு சிபத்து முண்டும்-பொலிவாம் ஹயாதில்மு இருதத்துடன், பொங்கும் குதறத் சம்கு பஸீறுகலாம்-சலியாய்ப்புற சிபத்தாகு மேழுஞ், சமைந்தவுள் சிபத்தினைச் சொல்லக்கேள். (1)

ஹையும் ஆலிமு முரீதும் காதிர், சமீகும் பசீறு முத்தக்கல்லி மும்-செய்யு முள்சிபத் தாகுமேழுஞ், சிறப்பாகிய சுன்னத்தும் பறுலு மெய்யா யறியவே விதியாகுமே, யறியாதார் காபிறென் றேதினுன், உய்யும் ஒன்னஜிம் சூறத்திலே, யுவந்து பாருமென்று இறசூல் சொன்னர். (2)

வன்ன வறிவுள்ளா நாட்டமுள்ளான், வரிசைக் குதறத் தோடெவையுமுள்ளான்-பன்னும் கேள்வியும் பார்வையுள்ளான் பகரமாய் நின்றே பகர்கிறவன்-அண்ணல் கலிமாவிற் பறுலுபுற, மருள்சேர் சுன்னத்து முள்ளாகுமே-நண்ணும் புறசிபத் ததுபோல தா. னட்டமுடனன்று யறியுமென்றார். (3)

அல்லாவுக் கறுசிபத் துண்டதை, யறிய விதியாகும் நபியும் மத்தே-நல்லா மழைபெய்தல் ரிசுக்களித்தல், நவிலும் ஹயாத் தோடுமவுத்தீவதும்-வல்லார் கருப்பமும் பேராக்கலும், வகுத்த விவையாறுமவன் சிபத்தாம்-ஒல்லாஹ ஒன்னஜிம் சூறத்திலே, யுவந்து பாருங்கள் நபியும்மத்தே. (4)

பன்னும் கலிமாவில் பனுவுமுண்டும், பக்காவு மதிலுண்டும் வரவறிந்து-உன்னு மகிலொரு ஹயாத்துமுண்டு, முற்றுமதை விட்டால் மவுத்துமுண்டும்-பின்னி விளையாடப் பிறவியுண்டும், பிறவிதனை நீக்க முறையுமுண்டும்-நண்ணும் லாகிறம் பாத்தி னுண்டும், நபியினிதுபாத்துமுண்டதுகேள். (5)

அவ்வ லாகிறுக் கலிமாவிலே, அதிகதன் சீஹம் தசு பீஹுண்டும் செவ்வி முறுக்கபா முஸாயிதாத்துங், திறமான திக்கிர் நாலொன்றுண்டும்-குவ்விற் பனிரண்டு பறுலுமுண்டுங், கூடச் சறுத்தெட்டு வகையுமுண்டும்-எவ்வி நடனத்தா லிருத்த வுந்தா, னிறுவஷா தானநற் கலிமாவிலே. (6)

கலிமாத் தனில்ஹறு மதனைநீக்கிக், கசடற்ற ஹலாற்றன்னை நோக்கி-வலியான் பொருளான நாலிலொன்றை, வகையாய்த் தரிப் பாக்கி நினைவுக்குள்ளே-சலியாக் கபாடத்தின் றுள்திறந்து, சாயுச் சியபதந் தனைப்பிடித்து-அலிமா மன்றிரு முகத்தைநோக்கி, யருளு மெனகேட்கிறப்போ சொல்வார். (7)

ஆதிநபியிறசூ லுரைத்தா, ரான லாஇலாஹ வென்றேதுஞ் சாதி-பனாவாகு மைந்தெழுத்துந், தானே பக்காவாகு மேழெழுத் தும்-நீதிதன் ஷீஹூக்கலிமாவிலே, நெறிசேர் நான்கெழுத் தாகு மென்னச் [சோதி அப்ஜத்துக் கணக்கிலைந்து, சுருதிஹூவென்ற எழுத்தாகுமே. (8).

சுருதி கதுரியா தசுபீஹென்ற, சொல்லுக் கடங்காத லாஹூ றென்றும் உறுதிச் சொல்லுக்குள் வருமமாகி, யுற்றபாத்திலு மது வேயாகும்-அறுதி குறையாத நினைவானதி, லாகச் சொல்லுமாம் பறு லெனவும்-மறதி யில்லாத முஹம்மதைத்தான், மனதில் நினைப் மதுபறுலாகுமே. (9)

வாழுப் ஹயாத்துத்தா னினைப்பானது, மவுத்து நினையாமல் மறப்பதுவாம்.நாளு மிறசூலின ஷபா அத்தைத்தா, ணாடிப் பெறு வோரக்குச் சொல்கிறேன் கேள்-சூழுந் திக்கிறினை யோதுவோர்க் குத், தொந்தம் ஷறுத்தாகு முந்திறசூல்-பாலைப் பருவத்திற் பழக் குவது பரிவாகும் சுன்னத்தாகுமென்றார். (10)

நாட்டம் நபியுல்லா தமக்குரைத்த, நாயன்றான் சொன்னான் குறு ஆனிலே-கூட்டச் கலிமாவை யோதநல்லார், கூடவோதுங்கா ளென வோதினான்-மூட்டு மூச்சிலே திக்கிறதென்று, முழுதும் ஷறுத்தன தைந்தாகவே-கூட்டும் பற்போடுங் கதைபோலவே, கும் தரீக்கத்து வகையாகுமே. (11)

அவ்வல் ஷரீ அத்துத் தையிபென்று, மரிய தரீக்கத்து ஷஹா தத் தென்றும்-செவ்வை ஹக்கீகத்துத் தன்சீஹென்றும், செல் லுத் தௌஹீது மஃரிபத்தாம்; நவ்வி நாவிலே சொல்லானது, லாஇலாஹ இல்லல்லாஹூவே-குவ்வு ஜபலூத்து அத்தென்றுங், கோமான் இறசூலோதினார். (12)

அல்லா வென்னுஞ்சொல் தரீகத்தாகும், அல்லாஹூவென் றுல் ஹக்கீக்கத்தாகும்-வல்லான் ஹூவென்ற சொல்லானது, மஃரி புத்தா மென் றிறசூல் சொன்னார்-நல்லாருஞ் சொல்வார் சொல்லா.

னதை, இல்மைத் தெரிந்தவ ரிமாமத்திலே-அல்லாஹு அக்பர் என்றோத, ஆனமுஹப்பத்த தாகுமென்றார். (13)

ஆலம் அறுவாஹு றாஹெனவும், ஆலமிதாலதின் பார்வை யென்றும்-ஆலம் இன்சானே நபுசாமென்று, மதிலோர் கண்ணாக வுண்டதைக்கேள்-கோல ஆதமி தாதிமங்கே, கூச்சப்படாமலே ஹாலிருகிக் சோலைமதுவான திக்கிறதிலே, சொல்லை மூட்டிக் கொண் டில்லைப்பாரே. (14)

பாரும் ஆயத்துக் குறுசானதிற், பார்க்கிலிறைவன் சொன் னதுகேள்-மேரும் அல்ஹையுல்க் கையூமென்றதிற், பேச்சு மூச்சையு மடைத்துவிடு-ஊரும் போன்றவே நாயனைத்தா. ஹோதும் கையூ மெனும் நினைவானதிற்-சேரும் நபியி றசூலொளிவிற், சேர்ந்து விளை யாடும் ஹுவானதே. (15)

ஹுவ்வானதுக் கப்பால் ஐம்ஆனதிற், கூடுமதற் குள்ளே தம் மானது-உவ்வாம் ஹறுபொன்று யிருந்தவந்த, வோசையான சொல் மஹுஹறிலே-யுவ்வாய் நிறைந்தெங்குந் தானவன், புண்ய வாளனு மல்லா சொன்னன்-மூவ்வான றூன்வல் கலமியிலே, முஹம் மதைப் பாருமும் மூக்குள்ளே' (16)

திக்கீ றைந்திலே யிசுலாமதாய்த், தெளிவாம் ஐம்ஆறி லீமான் கொண்டு-பிக்கிறெனும் பார்வை யானதிலே, பாரும் கத்ஸமியல்லா ஜாசலில் ஹக்கிறெனும் றம்செ யடக்கி வாங்கிச் கருனை மணியான கண்ணை மூடி (17)

மங்கூசு மங்கூசானது, மகிழ்ந்து கித்தாபிலே சொன்னது கேள்-தங்கும்படி யில்முல் ஏக்கீனுவதுந் தகுதி ஐனுல் எக்கீனுவ தும்-பொங்கும் குறாத்து ஹக்குல் எக்கீன், பூண்டு மூண்றங்கா பாகவேதான்-எங்கு மங்கூசு நபுசுடனே, ஏகனறுஷேறும் நபி யோதினர். (18)

குறைந்த புரைச்செக்கி லெள்ளைப் போட்டுக், கூட்டியாட்டுங் கன்றுவிரண்டும்-தறைந்து திரும்பித் தானுடும்பொது, தானே யொரு சத்தங்கேட்குமப்போ. தரைந்து மசிந்துதா னெய்யாமதை, யறிந்து பாருந்தன் சூறத்திலெ-பார்ததாலிடை பார்த்துப் பார்த் துப், பழக வொளி சூறத்தாகு மென்றார். (19)

நடக்கு முயிர்தானே வுடலதுவோ, நாட்டமுள நல்ல வுலமாக் களே-உடக்கும் பாவைக்குட் சூட்சம்போட்டே, யோட்டு மாட்டார் தானைதுவோ-அடக்கங் கேட்டறி யறிவல்லவே, யானூர் தலங்கண் டே யறியவேணும்-கடைக்கண் டுவிலே முஷாஹிதாவிற், கண்டே யறியலாம் நபியுல்லாவை. (20)

வெட்டவெளி பார்த்து முழிக்குகிறீர், மேலோன் கற்பனைதா னுண்டாமோ-தட்டான் விழித்தகற் கென்னபலன், தன்னை யறியாத மாந்தர்களே-கொட்டாவி யிட்டமீன் வெள்ளத்திற், குமிழி யறிந்து பார் அஹமதுள்ளே-பட்டாங் கானசொற்களா முல்லாதான், பழக்கங் கேட்டவர் மனுடராவார். (21)

ஒருவர்க் கொருவர்தான் கைபிடித்தே, யோதும் சலவாத்து முகத்தைப்பார்த்துக்-கருதும் ஷரீஅத்துக் காகுமென்றுங், காணுந் தரீக்கத்திற்கு பிரியத்தாம்-பருதி முகத்திலே நின்றிட்டாலும், பாரின் மண்ணின்மேல் நிற்கலாமோ-சுருதி மறைவேதங் குதுசியிலே தேர்கை மயிலான நபியோதினர். (22)

எந்த னும்மத்திலே சிலேபே, ரேற்ற முதலுள்ளோர் முதலுள் ளோரும்-கந்தமாகவே முஹப்பத் தாவார், காட்டா ரெளியோர்கள் முகத்தைப்பார்க்கச்-சொந்த மானதோர் மருஷறிலே, தோனு ரென்முகக் காணுரென-விந்தை மறைபேசுங் குதுசியிலே, மேகக் குடை மேவும் நபியோதினர். (23)

எறும்பி னுடலுக்கு மதகரிக்கு, மிருக்குமுயி ரலதொன்றோ ரண்டோ-செறும்பின் கிடாரத்துங் கிண்ணத்திலுஞ், செம்புதா னென்றோ ரண்டோ சொல்லும்-குறுகும் சிறுகுழி பெருங்குளத் துங், கூடும்ஜல மலதொன்றோ ரண்டோ-பொறுக்கும் பெரியோர்க் குஞ் சிறியோருக்கும்-பொருந்தும் றூஹொன்றாகும் பின்கேளே. ()

கழைக்கு நிலையாத பெருங்குளத்திற், காணுநிறங்கினுற் றூழ்ந் திடுவர்-மழைத்தண்ணீர் ஜலங்கட்டுஞ் சிறுகுழியில், மகிழ்வா யிறங் கித்தான் போகலாகும்-பிழைக்கும் பெரியோர்க்குச் சிறியவர்கள், பேணுக்கசத்திலே தாழ்ந்த தொப்பென்-றழைக்குப் பிணையான நபியிறசூ, லுறுதிக் குதுசிகண் டோதினரே. (25)

ஸிபாத்துப் படலம் முற்றிற்று.

ஆக படலம் 8-க்குத் திருக்கவிதை 146.

# இல் முனி சாப் படலம்.

## தொங்கல்.

இருகண் முடித்தா னொருகண்ணாலே, இல்லெனுந் தம்மா லிழுத்துவாங்கி-முருகு நானிலே நக்தாவிலே, முட்டுவதுமட்டும் சல்புமட்டும்-பருகும் நகத்துமேல் வாங்கிக்கட்டப், பாகமறியாத மனுடர் கேண்மோ-சொருகுங் குழல்மங்கை ஹாதுடனே, சுகமாய் மதந்தீர்க்க வறியமாட்டீர். (1)

குஷியா யூணுண்டே யிரவுகாலங், கூடியிருக்கவே யிருச்சாமத்தி-லோசியா துயிரெல்லா முறங்கும்போதி, லோசையொரு சத்தங் கேட்குமப்போ-மசியா ஹலாலைத்தான் முன்னிறுத்தி, மகிழ்ந்தங் கிருகையா லணைத்துக்கட்டிக்-துசியார் ஜெம்கூவில் மனத்தைகாட்டிச், சூட்சப் பதினான்கு தலமுமுத்தே. (2)

உச்சந் தலையிலு முகக்கண்ணிலு, முவந்த இருகன்னங் குமிழிதழும்-இச்சையுட னிருவிலாப்புறமு, மிசைந்த தனமிரண்டு மிடை நடுவும்-பச்சமுடன் னொப்பு மூரையல்குலும், பரிந்துராவு கொண்டாட்டி நீட்டி-யச்சமின்றியே யமுதம் வாங்கி, யருந்தும் பெரியோர்க ளமலாகுமே. (3)

அருந்தி யதின்பின்னர் தவுசிருத்தி, யரைகா ழிகைசுற்று இறைமட்டாகம்-பொருந்துங் கமலத்தைச் சுற்றும்போது, புறையுண்டதில் முனைவிரலை யூன்றிடிற்-றிருந்து மெழுதாமத் திரை திறந்து, ஜெகத்திற் பாயும்பார் சீமைவெள்ளம்-இருந்து கதங் கொண்டு சுற்றும்போதில் இல்லெனுந்தம்மா லிருத்தி வாங்கே. (4)

வாங்கியே மெள்ளத் தான்கிடத்தி, மணியை மேல்வாங்கி வாசியூடே-ஏங்கும் அலிபுறா னிடைவிடாம, லிசைந்த ஷத்துக்குள் மத்தைமூட்டு-தாங்கும் பாலகன் பாலுண்ணல்போற், றங்கும் நபுசதை தணைத்துவாங்குப்-ஓங்குங் கருப்பாய்ந்து தங்குமானு, லுவந்தே யவள்மனம் சமதாகுமே (5)

சேர்க்கை செயும்போதி லிடதுபுறந், திறமாய் நத்தூபுதான் விழுந்தானுற்-கூர்க்கப் பெண்ணாகத் தான்விளையுங், குறியினடு விலே தங்கின்னுற்-பார்க்க லலியாகத்தான் விளையும், பகரு மிது

முறையறிந்துமிகு-தீர்க்கமுள நல்ல நபியிறசூல், செப்பினாதி சொற்படியே. (6)

இப்படிச் சேர்க்கை செய்யாதவர்க், கிணங்காள் ஹலாலுமே பிணங்கிடுவாள்-துப்பு ரவதான நபியிறசூல், சொன்ன ரில்மு நிசா வதிலே-கெர்ப்பத் துடன்காமங் தங்குமாகிற், கேடா கும்பிள்ளை தாய் தந்தைக்கு-மொப்பில் லாதுறும் ஹைறவானுமா, முண்மை யாயிதை யறியு மென்றார். (7)

எழு நான் கெழுத்தினி லெழுத்தோரொன்ப, திலகுங்கலி மாவிலறு நான்குமாம்-தொழுகு மைம்பத்து மூன்றுலக்கம், சுஜூது மவுஜூதாம் சுக்கூனுள்ளே, பழுதில் லாசுன்னத் தையறியப் பார்க்கப் பறலான ஹூறத்திலே, வழுவில்லாமலே சொன்னான் அல்லா-மக்கான முஹம்மதுன் ஆயத்திலே. (8)

மூர்நூற் றிருபத்தி மூன்று லக்கம், முறுசல் கூடின முறையா மிது-மன்னூர் தனில்வந்த ஹறுபைந்ததில், மணமா மொழிய தன் பறலறியத் தண்ணூ ரைம்பத்து மூன்று லக்கஞ், சார்ந்த ஹறுபுநால் சுன்னத்தாறு-பொன்னூர் சுவர்க்கத்தி னிடை வாழ லாம், பூண்டு நன்றாக அறியுமென்றார். (9)

உன்னு மூச்சிலே யுண்டானசொல். லுடுப்பு மொடுக்கமு மறிய வேண்டும்-பன்னுங் கிளிபல பேசினாலும், பகையாம் பூனை தான் பிடிக்கும்போது-சொன்ன பல பேச்சும் வாராதப்போ, துணை யாம் தன்பேச்சிற் சீவன் போகும்-குன்னென் றுயிர் சொல்லும் சொல்லறிந்து, கூடும் ஹலறத்திற் கூடலாகும். (10)

ஷர்று நீங்கவே அமல்கள் செய்ய, ஷஹாதத் துளநாயன் ஷாஹிதாகத்-தூர்றக் தெனுமிரு அத்தருத்ரங், துலங்கு மதலையின் கற்பனை சொல்-அர்ற பீக்குல் அகுலாவென, அருளுங் கலிமாவின் பொருளானது-நிர்றஹீ மெனும் பிசுமில்லாஹி, நிறைந்த ஷறுபுபத் தொன்பதிலே.

திக்கீர் பனுவாகு முஷாஹிதாவுஞ், செய்து முடித்த பின் னவிசெய்யுமே-தக்கர் மதமாகிச் ஜிமாஉ செய்தாற், றூனே மணி வீழ்கில் மத மடங்கும்-சுக்குறுங் தன்மையும் பாடு பட்டாற், றுலக்க மாகவே யறியவரு-மக்கர் செய்ஹைறவா னிய்யத்தான, மருட்டை வெருட்டினால் மன மொடுங்கும். (12)

தவுருத் தொடுமிஞ்ஜீல் சபூருனதுஞ், சாற்றும் பொருளெல் லாம் புறுக்கானிலே-அபரூ பமதான புறுக்கானதி, லாரும் பொரு ளெல்லாம் யாசீனிலே-ஜெபறாத் தெனுங்கல்பு யாசீன்கலாம், சிறந்த பாத்திஹா வானதிலே-சவரூ பமதானவும்முல்குறு, ஞூட்டம் பேபலி பானதிலே. (13)

அலிபானது றுக்கத் தாமூன்றதி, லழகா யொளி சேருஞ் சக்கூனதிற்.சலியாமற் சக்கூன் மீமானதிற், றாள மணியின்ற வலம் புரிக்குள்-ளொலியா யகீலமோதி யங்குதித்த, வுஹதும் அஹதுக்கு முன்பாகவே, கலிமாப் பொருள் தன்னை யறிய விதி, காணு தவர்மனங் காபிறென்றூர். (14)

அழியாப் பெரும் வாழ்வை அஹதியத்தை, யன்பாய் மன தினிலுறுதி யாக்கி-அழிவில்லா அல்லா குறு ஆனிலே, யளவ தாகவே சொன்னது கேள்-ஒளிவு லாநபி முஹம்மதையு, மவந்து மனதிலே யுறுதியாக்கித்-தெளிவா மனதிலே திறமதாக்கிச், சேர்ந்து முஷா ஹிதாச் செய்துவாவே. (15)

இல்முனிசாப்படலம் முற்றிற்று.

ஆ படலம் 9-க்குத் திருக்கவிதை 161.

---

# தௌஹீதுப் படலம்.

ஆழிக் கடலினை வருத்திட்டாலும், அமரர் வந்தேவல் செய் திட்டாலும்-பழாம்சவம் பேச வைத்திட்டாலும், பகரும் பொன் வெள்ளி பண்ணினலும்-காரூ மழை பெய்ய வுரைத்திட்டாலும், நயமாய் வான் மட்டும் பறந்திட்டாலும்-வாழூர் தௌஹீதி னிலை யில்லெனை, வள்ளல் நபிபிறகு லோதினர். (1)

தௌஹீதது செய்வோர்க் கசலாவது, தானே பேச்சற்று மூச்சு மற்று-பவுசாம் பார்வையுங் கேள்வியற்றுப், பகரு மனமற்று நினைவு மற்று-நபுசு தனிற்கத்தி போட்டு வெட்டில், நாரமது போலே கூடிக் கொள்ளு-மவுத்தாங் தகுத்திலே யிருந்து கொண்டு மாயு முனமாய்ந்தே யிருப்பார்களே. (2)

பருதி முகத்திற் கண்ணாடி காட்டிப், பகரும் நெருப்பினைப் பற்று மாப்போற்—சுருதிச் சுக்கூனிவே நுக்தாவிலே, சூட்டுங் கமலக் கண்ணாடியூடே—பொருதி யனற்பற்றி றாகுநெய்யிற், புந்தித் திரியதைப் பொருத்திப்பார்க்க—வொருவனு மல்லா குரு ஆனிலே, ஒவ்ஷஷம்சு ஒல்லுஹாவிற் சொன்னான். (3)

கையுங் காலுமில்லாத வேடன், கானும் வில்லுமம் பில்லா மலே தைக்க வொருமானை யெய்துவாட்டித், தலைமே லொருகட்டி லெடுத்து வைத்தான்—உய்யு மவன்மகட் கெட்டாமையா, லுயர மேல் நின்று மெட்டிலாத—லெய்யு பூமியை யெட்டி வாங்கி, யெட்டித் தாமுகின் றெடுத்துக் கொண்டாள். (4)

நினைவில்லைக் காலுங் கையுமில்லை, நிறைந்திடு மீமான் தனத்தை வேண்டித்—தனமாம் சாத்தைதா னெழுந்துவாங்கித், தனிமையாகவே யிருந்துக்கொண்டே—யினமாம் ஸுஜூதிலே தானெய்தினு விலங்கு மவுஜூதா மிசுலாமைந்தில்—மனமாய் முஹம்மது நபியிறசூல், வகுப்பா யலிதமக் கெடுத்தோதினார். (5)

சிறப்பாய்க் குருவைத்தான் முடித்துக்கொண்டு, செம்புதனிற் றூக்கச் செம்பொனாகும்—அறைப்பில் லாச்செம்பு செம்புற்றாக்கி, லான பொன்னிலுள்ள மாற்றுண்டாமோ—துறப்பாம் பெரியோர்க ளுபதேசத்தார் துலங்கும் ஞானக்கண்டனைத்திற்கும் கரைக்காரற் கற்றவ ருபதேசித்தாற், காணார் தன்கோலங் காணுமென்றார். (6)

கடுகினடை தங்கள் சலத்திற்போட்டாற், காணு தாழத்திற் றாழ்ந்துவிடும்—தொடுக்குக் கனதங்கர் தலையெடுத்துச், சுரைக் காய்ப் பழமதைத் தான்குரைந்தே—யடுக்கத் தண்ணீர் சேர்த்து விட்டா, லாடி மிதந்திடுஞ் சொல்லக்கேளீ—ரொடுக்கம் பெரி யோர்கள் சிறியோர்களி, லுறவு மதுபோலே யாகுமென்றார். (7)

கடற்சில் நூறுண்டு ஜலத்துற்றாலுங், கரைந்து நீரினைத் தானுண்ணுகிற்—கடசிற் யன்பில்லா மாதரைத்தா னணைவ துஞ் சண்டாளறு னுடனே—துடர்க்சிப் பலகல்வி பயிற்றினுமிஞ், சுக மாய்க் காதுக்குள்ளேறு தென்றும்—படற்சி முஹம்மது நபியி றசூல், பகர்ந்து குதுசிகண்டோதினாரே. (8)

மாலை மணவாள னுரைத்தமொழி—மருகாலியார்க்குச் சொன் னது கேள்—பாலனும் கன்னி விருஷாதிலே, பார்க்கப் பாக்

இன்றி விழிமூடியே—கோலமான ஹாஃ ஓசையான, குதறத்து ஜலாலானதிலே, ஏலஏல வென்றிருத்தி வாங்கி, இனிமே லிருவிழி நடுவுக்குள்ளே. (9)

தந்தன் சூறத்தைப் பார்க்கச்சொன்னுன், தந்தை தாயு மில்லாதவனே—விந்தை ஆதத்தைப் படைக்க அசல், வேந்தன் ஜிபுரியீல் தனையழைத்தே—எந்தன ஹலாத்திற் புகுந்துபாரு, மிறங்கும் சுருபமே ஆதம்பாவா—சொந்தமாகவே முஷாஹி தாவிற், ரேற்றும் சூறத்தைப் போற்றுவதே. (10)

இன்ன முஷாஹிதாவென்றுகேளு, மேகன் அல்லாஹூ காவெழுத்தை—மன்னுந் தாமரைக்குள்ளே வைத்து, மாயை யாவையும் வெருட்டிவிட்டுப்—பன்னும் கலிமாவில் அல்லாஹூ, வைப்பாரும் வெளியாகு முஷாஹிதாவே. (11)

இப்படி மூன்று முஷாஹிதாவை, யெங்கள் நபியிறசூ லோதினர் 'துப்புரவான அல்லா சொன்னுன், சொன்னதைச் சொன்னேனென வோதினர்—அப்படித் தானே சொன்னு ரென்றும் ஆதம் சூறத்ததானதிலே—மெய்ப்புக் கலாமுல்லா அதனிலேதான், மேலோன்றான் சொன்னுனின்னங்கேளே. (12)

அம்மன் கலக்கஸ்ஸ மாவாத்திலே, அல்லாதான் சொன்னு னுண்மையாக-இம்மை தனிலொரு காமிலான, இறுதத்து ஷெய்கு கிடையா விட்டால்—உம்முல் குருஆனி லல்லா சொன்ன, னுறுதி யாகவே ஷரீ அத்திலும், செம்மைத் தரீக்கத்து ஹக்கிகத்திலும், சிறந்த மஃரிபத் தானதிலும். (13)

முந்து நபிமார்க்கு முதல்வரான, முஹம்மது நபியிறசூ லுல்லா சிந்தை தெளிவான வைத்துமாறுஞ், செயலா மார்க் கத்தை பிடவிடாமற்—சொந்த குறுஆனி லல்லாசொன்னுன், சொன்னதைச் சொன்னேனென வோதினர்—பந்தி பந்தியாய்ப் பணிவிடையாய்ப், பணிந்து செய்யுங்கள் நபியும்மத்தே. (14)

முஹம்மதுர்றசூ லுல்லாஹென்று, முழுதும் வெளியான கமாலியத்தில்-றஹ்மான் ஆதமிஜசதாகவே, தானே யெழுநான்கு ஹறுபு கூடி, யுகமையின்றியே பதினுல்கெழுத் துயிரதாகவே தானிருத்திப் பகமாம் லாஇலாஹ இல்லல்லாஹ், பகரும் பனிரண்டு கலையோடுமே. (15)

லாஇலாஹவென் றிடுமெழுத்தை, நடுவே மூலத்திற் றூனி ருத்தி பாயும்-இல்லெனும் ரண்டெழுத்தைப், பகர்சுவா திஷ்டானத்

தெழுப்பிக்-காயுமணி பூரகம்மதுள்ளே, காணும் அல்லெனும் ஹறுபதோங்கி-ஆயும் அஞாசதம் வாவென்றுடி, யடங்கும் விசித்தி யக்கினி ஹாவதாம். (16)

சந்திர சூரிய மண்டலமுந் தானு மக்கினி மண்டலமு
முந்த நடுமூலந் தனிலெழுந்து மூன்றி ரண்டான வீடுதாண்டி
யுந்தி யுணர்வற்ற முப்பாழப்பா லுவந்து சுழயது பூகியூடே
யந்தி பகலற்ற பட்டணத்தி லாகுமெனச் சொன்னார் குருநாதரே.

குப்பை தனைக்கோழி கிண்டக்கிண்டக், கொடுக்கு மிரணத்தை ஒஜீ பணிக்கும்-செப்பு முபதேசம் ஷெய்கிடத்திற், றினந்தினங் கேட்கத் திக்திக்ரூமா-மொப்பு முவமையில்லாதவனே, யுவந்து மனக் கண்ணால் சுஜூது செய்து-முப்பால் பழங்கனி ஹலறத்திலே, முழுதும் பசிதீரப் புசிக்கச் சொன்னார். (18)

அலிபா முலக்கை தானெழுந்தோங்கிய, யழகார் சுக்கூனு ரலதற் குள்ளிலே-மெலியதாய்த் தனியைத்தான் தீட்டி சேம்பி, மேவும் ஷரீ அத்துத் தரீகத்ததுஞ்-சலியா ஹக்கீகத்து மஃரி பத்துஞ், சமைத்த போசன முஹப்பத்தாகக்-கலிமாப் பொரு ளன்ன முஹம்மதுவை, கல்பு மகிழ்ச்சியாய்ப் புசிக்கச் சொன்னார்.

உன்னி லொருநபு சரியாமலே, யொடுக்கமதைக்கண்டே யறியு மென்னத்-தன்னிற் றனுக முளைத்தெழுந்து, சாகா நபுசதை யறிய விதி-முன்னின் மூன்றுக்கு முதலானவர், முஹம்மதாம் அன்ஹா ஐனுல்லாவை-இன்ன லரக்கண்டே யறிந்தவர்க, ளிருப்பார் சுவர்க் கத்தென் றல்லா சொன்னான். (20)

ஊசிதனில் நூலைக் கோக்குதல்போ, லுவந்து சுக்கூனிலே நினைதைக் கோர்த்துப்-பூசி நாலைந்து பிற்றலையும், பொருத்தி மூடியே நன்றாய்த் தைத்துக்-கூசிடாதைம்பத் தொன்றிற் சேர்த்துக், கூறும் அஹ்மது மவுஜூதிலே-சூழ்ச்சியுடனே தானறிய வேண்டிச், சொன்னனி தையும் மூல் குறு ஆனிலே. (21)

மண்ணும் பற்குத்திக் கொப்பு நாக்கு, வடிவாம் ஜிபுரீலும் அபூபக்கரும்-நண்ணுங் கரு ஈரற் கொப்புக்கண்ணும், நலமா மீக்கா யீலும் மூமறுங்-கண்ணுய் நுரையீரற் கொப்புநாசி, கருவா மிசுறாபீ லும்முதுமான்-ஒண்ணும் பித்தநிற் கொப்புக்காதா, மோங்கு மிசு றாயீலொடு மலியே. (22)

அடவாம் பற்குத்தி ஷரீ அத்தாக, அருளும் லா இலாஹ இல்லல்லாஹூ-நடவாம் கருஈரல் தரீக்கத்தாக, நாடும் திக்கிறதில் லல்லா ஹென்றும்-வடவை நுரையீரல் ஹக்கீகத்தாக, வாழுஞ் சொல் திக்கிறல்லா ஹென்றும்-கடவாய்வு பித்து மஃரிபத்தாய்க் காணும் திக்கிறல்லா ஹூவானதே. (23)

ஹூவாம் ஆகாச முத்தலக்கு. குணமாம் பாத்திமா ஜம் கூத்திலே-கோவா யிருந்து தானுடும் கூத்தைக், கூறவரிதாகும் குவலயத்திற் பாவாயிருந்து தானறிவோர்கட்குப், பழமாயருந்து வார் பெரியோர்கள் தாம்-நாவாம் றாஹூடே யுறவாடியே, நல்ல முஹப் பத்தா யிருப்பார்களே. (24)

இதுகளைத் தூக்குந் தாமரைக்கா, யிசையு மதின் கொப்பு ஆகாசமாம்-சதுமா முஹம்மதும் பாத்திமாவுந், தப்பா மதுகூறு யாகுமென்ன-வுதிப்பா முஹப்பத்துப் பார்வைதா, முறவா யுறை நாடித் தானிருந்தாற்-குதுபா முஹம்மது நபியுடனே, கூடியுற வாடி யிருக்கலாமே. (25)

இருப்பாம் பிரிதிவி அம்மாறத்தா, மேகன் ஜிபுரீல் மக்காம் நாசூத்திலே-கருப்பாம் றப்புதான் லவ்வாமத்து, காண்பார் மீக்கா யீல் மலக் கூத்திலே-யுருப்பார் தேய்வுதான் முல்ஹிமத்தி, ஒருவா மிசுறுபீல் ஜபறாத்திலே-குருப்பார் வாயுவு முத்துமை இன்னு, கூடு மிசுறுயீல்லா கூத்திலே. (26)

நாசூத்தானது நாசி நுனி, நலமா மலக்கூத்து நாசி னீளம் வாசி ஜபறாத்து நாசி மூடு, வடிவாம் லாகூத்துக் கண்பார்வையாம்-ஆசில் பாத்திமா ஜம்ஹூத்தாக, அழகாந் தாமரை யொளிவா மென்றுங்-கோஜா முஹம்மது நபியிறசூல், கோமான் சுருதிகண் டோதினரே. (27)

நாசூத்தினிலே ஹைவானைக் காட்டும், நல்லாஹூத்தறு வானைக்காட்டும் வாசூ ஜமறாத்தில் ஷெய்க்கைக் காட்டும், வடி வாம் லாகூத்திற் றன்சூறத்தாம்-ஆசூ ஹாஹூகூத்திற் பேச்சதாகு, மழகாம் பாஹூத்திற் பழமதாகும்-பேசும் ஜம்ஹூத்தில் நிரப்ப மாகும், பிசகாமற் கனி புசிப்பார்களே. (28)

அதிக பெரியோன்ற னிடத்தில்நின்றே, யறிய பனுபக்கா ரண் டொன்றுகி-மதிய மெனுமொரு மத்தியிலே, வாழும் அலிபுலா மீமா

கவே-புதின மானதோர் ஷம்தானதிற், பூட்டு மிருஷாதுக் கலிமா வைத்தா-நிதியாம் பக்ருவின் ஜுசுவானதில், நிகழ்த்தினு னல்லா நிசமாகவே. (29)

தலையாம் ஜீம்ஹறு பிலக்கத்திலே, தானும் வெள்ளலி பதையறி யக்- கலைதான் பணிரண்டி னடுவாகவே, காணும் ஷம்சுதாத் துத யத்திலே-மலைமா முறஷிது முகத்தை நோக்கி, மாலாய்க் கதிதந்த மருமூதாக-அலையாக கலிமாவின் பயனுயதை, அல்லா குல்ஹுவல்லா விற் சொன்னுன். (30)

பேயும் சீனுமீம் லாம்அலியும், பெருகும் ஹே-றே-ஹெ-நூனும் ஏயும்-ஆயும் பத்தெழுத் தவையானதும், அல்லா பிசுமில் லகுலமாக வாபின் கலாமுக்கெல்லாந் தலையாம், வள்ளல் முஹம்மது நபி யோதினுர்-தாயி மாகவே சேர்ந்தவர்கள், தானு யெங்கெங்குந் தானவரே. (31)

கஞ்சாச் சாராய மபினுங்கள்ளுங் கள்ளமாய்த்நின்று கவிழ்ந் திருந்தும்-அஞ்சா முஷாயிதா தனிலிருந்து, மமுதம் வாங்கினு னுண்டே னென்பார்-நெஞ்சால் நீர்க்கோழி ஜலத்திற்குள்ளே, நெடு நேரமதாக மூச்சடக்கித்-துஞ்சாப் பெருமூச்சை விட்டதுபோற், றுய்ய நபியிறசூலோதினுர். (32)

தௌஹீதுப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 10-க்குத் திருக்கவிதை-194.

************************

# மிஃறாஜுப் படலம்.

## தொங்கல்.

அல்லா சலாஞ் சொன்னுன் முஹம்மதெனை, வடுத்து ஜிபுரியீ லிரவையிலே-வல்லோன் சபாமறு வாவிடத்தில், வள்ளலிருக்கின்ற வேளையிலே-நல்லோர் மீக்காயீல் புறுக்கானதில், நபியை யெடுத்த தின் முதுகிலேற்றி-ஒல்லா கஃபாவி னெமுவாயிலே, யுவந்து ஜிபுரீல் கையாலடைத்தார். (1)

அடைக்கும்போதினில் புறுக்கானதங், காகாசத்தினிலே நடந்து, படைத்தோன் முக்கத்தீசுப் பள்ளிதனிற், பயஹாம்பர் தமைத்தானிறக்கி-நடத்திப் புறுக்கைத்தான் ஜிபுரியீலும், நலமார் ஹக்குல்லா வெனுந்துனிலே-குடைந்தார் கைத்துளை யாலதிலேகு திரைதனை நன்றாய்க் கட்டினரே. (2)

கட்டி யதன்பின்னர் வாங்குச்சத்தம், ஹக்கன் ஜிபுரியீல் சொல்லக் கேட்டுத்-தட்டில் லாமலே யாதுவைத்துச், சமுகமாகி யொன் ருகக்கூடி-நட்டமற லட்சத் திருபஃது, நாலா யிரநபி மார்களுடன்-மட்டிலா னேவல் மலக்குகளும், வந்தார் முக்கத்தீசுப் பள்ளியிலே. (3)

ஹக்கன் கற்பனை முஹம்மதுடன், காலியிமா முன்னே தொழுதபின்னர்-தக்கஞ் ஜிபுரியீல் பாலுமீந்து, பயஹாம் பார் பாலைத் தான் பருகித்-தொக்கன் கல்லதின் மேலிருந்து, தொழுது பயஹாம்பர் துஆவிரந்து-மெய்க்கும் ஜிபுரியீ லேணியின்மேல், மேவி யேறுமென்றோதினரே. (4)

ஆலம் நபுசிலே கஃபத்துல்லா, அகத்திற் கமலசிங் காசனமாம்-கோல மதற்குள்ள எழுவாயிலிற், கோமான் முஹம்மதா சனம தாகும்-தாலம் பைத்துல் முகத்தீசுப்பள்ளி, சார்ந்த நமக்குள்ளே குரல்முடிச்சாம்-காலு மதற்குள்ள தூணுவது. கலந்த நரம்பது தானுகுமே. (5)

சங்கு ஷஹறெனுங் கல்லாவது, சார்ந்த குரலதின் மேலுண் ணுவு-பொங்கும் பைத்துல் மஹ்மூறுவது, பொருந்தும் அண்ணுவுக் குழியதுவாம்-தங்கும் நரகங்கீழ் சுவனமேலாந், தானே னிப்படி யைம்பத்தைந்துங்-கொங்குந் தாமரைக் குழலதிலே, தொடரும்படி யையம்பத் தைந்தாகுமே. (6)

சிறக்கும் படியைம்பத் தைந்ததின்மேற், சிதுறத்தல் முந்த ஹாத் தலத்திற்-பறக்கும ஜிபுரியீ லதுமட்டாகப், பகரும் நாசியி னிள மட்டும்-துறக்கும் ஜபறூத்தா சனத்திடத்திற், றய்யநபி யிறசூ லேறினர் நறைவீ சும்மக்கா மஹ்மூதிலே, நற்சிங் காசன மானதுவே. (7)

மகாமன் மஹ்மூதுத் தலமாவது, வழுத்து மிருகண்ணி னடுவாகவே-ஹக்கா யிக்கானது கடுகளவ, காணு மொருவாயிற் கப்பால் நின்று-சக்கா வத்தாகவே சாவற் கூவுஞ், சத்தமது கேட்டங் கருகிற்சென்று-புக்காமற் றீன்தோ ரேறித் தாண்டிப், புகழ் முஹம்மதப்பா லானதே. (8)

அப்பாற் காபக்கௌசெனுந் தலந்தா, னருள்சே ரிருகண்ணின் மணியதற்குட்-செப்பார் பெரியோர்களதின் பொருளைச், செகத்தில் அறிந்தவர் பெரியவர்கள்-ஒப்பில்லா சுல்தா னசிறுவதிங், குயர்ந்த சிரசதின் பொருத்தத்திற்குள்-தப்பில்லா ஞதி கற்பனையாற், றனே மூழங்கும் அவ் வதனுவிலே. (9)

வாழும் அவ்வது னுவெளியில் வழங்கும் வேதத்தி னுயத்தெல் லாம், சூழுந் திரையாகத் தான்வளைந்து, துய்யோன் கற்பனை வாவா வென்றும்-நாளு நபிமார்க ளித்தலத்தில், நான் வரச்சொல்ல வில்லை யென்றும்—ஆளுங் குருவான முஹம்மதுவே, யடுத்திங் கடுக்கத்தான் வாருமென்றான். (10)

வாருமெனுஞ் சொற்கேட் டிறசூல்சொல்வார், வள்ளலே யுன்னைக் காணுதில்லைக்—சேர இருகண்ணு மருண்டுபோச்சுச், சித்த மயங்கித்தான் வீழுமுன்னர்—காரும் ஹலறத்திற் காதிர் வந்து, ஹாமீ முஹம்மதைத் தான்தாங்கியே—பாருங் கண்மூடி யொரு கண்ணாலே, பார்த்து வாருமென் றுத்திரவானதே. (11)

பொருந்தும் அவ்வது னுவாகிலாய்ப், புகழ்ந் தலந்தனிற் றிரை யானது—பரிந் தாறுயிரத் தறுநூற்றது, பத்தாருயத்துத் திரை வளைந்து—திருந்து மிறைவன்கற் பனையீதல்லாற், றிறம்வே றிலை யென நபி யோதினர்—அருந்துங் குல்ஹுவல் லாவானதில், அஹதானவன் சொன்னன் சமதாகவே. (12)

ஒன்ன ஜுமியி லிருபதாய்த், தோதினனிறை கற்பனையாற்—றன்னுஜுமொன்ப துஞ்சிரசிற், றமக்கே யளித்தனன் பிரிசங் கொண்டு—முன்னர ஹுமதா னவரேயினி, முடுகுந் தௌஹீதும் வுலாயத்தான பொன்னந் தாள்கபு ஷோடறுஷிற், பொருந்த யேறி வாருந் தோழரே. (13)

ஏறினர் காபக் கபுசுடனே, யேகன் முஹம்மது நபி அறுஷிற்-கூறினு னுதி கற்பனையாற்-குதுறத் துப்பெற்ற என்ஹபீபே-பேரும் பதவியு முற்றவரே, பெலமா யெப்படி வந்தீரொட்டு, னூரிலா வுன்காலா லேறியிங் குற்றேனுஹ தஹதுக்கு முன்னேய். (14)

துஞ்சாயுறக்க மூணில்லாதவா, சுல்தான் மாலிக்கி யவுமித் தீனே முன்சேர் அன் அம்த ஐனுல்லாவே, முடுகுமுத்து வொத்தல் புஆதானவா—குன்தா னுபிரெல்லாந் தான்படைத்துக், குன்ப யக்கூறாய் வளர்த்தவனே—இன்ஸான் கோலத்தில் நீயிருந்தே, யின்னஹுக்கான தவ்வாபாவே. (15)

தாஹா நபியேயென் சமுகத்திலே, தன்னை யறியவே தான ழைத்தேன்—காபு ஹாயா ஐன் சா தாயிருந்த, ஹாமீ முஹம்மதே சலிப்புண்டுமே—வாகா யஸ்தக்பி றுல்லாவென்றே, வள்ளல்நபி

இஸ்திக்பாறுசெய்து—பீஹா மக்அது சிதுக்கினிந்தப், பீயா மாலிக்கின் மூக்ஹுர்திரியின். (16)

பிரிப மதுகொண்டு ஹலறத்திலே, பேருமறையெல்லாந் தானறிந்தே—அரிய மூன்னுள்ள இல்மானது, மருள்சேர் பெருந்த வுஹீதானதுஞ்-செறியு மவனூறு மொன்னுகவே, செம்மல் மூஹம் மது தமைச் சூழவே-சூரிசேர் நினைவெல்லாந் தான்மறந்து, குழம்பி விழுமூன் நீன் தோள்தாங்கினுர். (17)

நல்லோர்க கிரங்கிடும் நாயகனே, நாட்டமிருந்தவர்க் குறும் பொருளே-சொல்லா லுயர்ந்தவோர் துய்யவனே. துடரின்ப துன்ப மற்றவனே-வல்லோய் றகுமத்தும் வாழ்வுமுள்ளோய், வகுத்த இரணங்கள் வகுத்தவனே-ஒல்லா காலுன்னை யறியவந்தே, லுயர்ந்த தலத்துக்கு மெத்தாதவா. (18)

என்னுள்ளிருந்து நீ அஹதாகவே, இறைஞ்சும் சுஜூதிலே மவுஜூதாகத்-தன்னுட் டானுகத் தரிப்பாகவே, தானும் பதிபிலே நீயிருந்தாய்-முன்னே யிருந்ததி னுனிருந்தேன், முதல்நா னிருந் ததில் நீ யிருந்தாய்-பன்னு மதின்பெயர் குருசாமென்னப், பகர்ந் தென் றேழுரே முஹம்மதுவே. (19)

அந்நற் சிறுபாலன் றெட்டிதனி, லரிய மூன்தூக்கம் விழிக்க முன்னே-யுன்னு மொடுக்கமூ தருந்துவேத, வுரையா மிருபத்து நன்காயிர-மென்னும் விசளங்கள் பகருமென்ற, னினியே பேறுன முஹம்மதுவே-பன்னும் பேச்சன்றி மூச்சுமன்றிப், பகருங் கேள்வி யும் பார்வைற்றே. (20)

பார்வை தானற்ற பரிசறியப், பதமார் கத்திதான் போட் டாட்டினுல்-சேர மாகவே சலிலத்தோடே, நிசமாங் கத்தியை போட்டாட்டினுல்-கூர்மை அல்ஹையுல் கையூமாகக், கூறுந் தேகத் திற் கழிவில்லானே-சேரும் நபியிறசூ லோதினுக, சிறப்பார் பெருந்தகுத் தரசானவா. (21)

பாலா யிருந்துதா னெய்யாகினேன், பாலாய் மறுபடி யாகவந் தேன்-மாலா மக்கு அது சிதுக்காகவே, மன்இன் தலமல்க்கில் குதுாசானவா-பூலாம் பசிந்ததே நாமருந்திப், புகழ்வே றில்லாத தம்பிரான-ஆலகஹமதாய் நாமம்பெற்றேன், அல்ஹம்து லில்லா ஆண்டவனே. (22)

எந்தன் ஹபீபான ஸல்லல்லாவே, யெனக்குக் கடனைதைத் தொகுத்தும்-தொந்த றமாலாணி லாறைந்துநாட், டொடரா யென் ணென்பையும் மத்தோர்க்கு வித்தையறு வேஷம் வேதாம்பரே, மீட்டும் கனதையை மீறிவிட்டாற்-பந்தம் கொளுத்தித்தா னதாபு செய்வார் பார மலக்குகள் மஹஷறிலே. (23)

நாற்பதுக் கொன்று கைர் செய்வதும், நலமார் கருபாவிற் றவாப் செய்வதும்-பூர்ப்பக் கலிமாவி னடபடியும், புகழ்சே ரிவை யைந்தும் பறுலா மென்று-மூப்பார் முஹம்மதே யும்மத்தோர்க்கு முறையாமிக் கடன் தீர்க்கச் சொல்லுக்-தாழ்ப்பாம் பறுலதைத் தீர்க்கா விட்டாற், றகுமீ மானேரின் சேரமாட்டாற். (24)

ஆதி நாயகன் சொன்னன் பின்னு, மஹ்மதே விருந் தருந்து மென்று சோதி யொளிவீசும் ஹலறத்திலே, துய்யோனெடுக்கமு திறக்கி விட்டானீதி நபியன்ன மூண்ணும் போதில், நிசமாயொரு கைவந் தள்ளக் கண்டு-பாதம் நிலத்திலே தோயாதவர், பருகுமச னத்திற் கையை வைத்தார். (25)

ஒடுக்கா மசனந்தா லுண்டபின்ன, ருடையவன் சொன்னன் முஹம்மதுவே-திடுக்க மில்லாமல் மக்கந்தனிற், சீக்கிறம் போ மென்று சலா முறைத்தான்-அடுக்கும் ஷிதுறத்துல் முந்தஹாவி, லருள் சேர் ஜிபுரியீல் சிறகிலேற்றி-பிடுக்க மில்லும்மு ஹானியில்லி, லிறக்கி ஜிபுரியீல் சுவர்க்கம் போனர். (26)

கிழக்கு வெளுத்த பின் வாங்குச் சத்தம், கேட்டு நபி தோழன் மார் பலரும்-முழக்கத்துடன் கூடிமௌமாக, முன்னில் முஹம்மது மிமாமத்தாக-தழைக்கத் தொழுதான் துஆரந்து, தனி யோன் மிஃறாஜு விசள திதை-விளக்க மாகவே யார்களுக்கு, வேதாம்ப ரால நபி யோதினர். (27)

சித்தீக் கபூபக்க ருமறுகத்தாப், செல்வ ருதுமானர் சலாம் சொன்னபின்-பத்திய பீத்தாலி பலியார் வந்து, பரிந்து சலாம் சொல்லி யாழி வைத்தார்-கத்தீப் பாறப்பில் ஆலமீனே, கற்ற அசிலிர்றை யறிவானென்று-முத்தி முஹம்மது நபிறசூல், முடுகும் சஹபாக்கட் கோதினரே (28)

ஹக்கனிடத்தமு துண்ணும்போது, கண்டே னெருகைவந் தமுதள்ளமே-இக்கு மக்கையை யறிய வேண்டி, யிதமா யசனமுன்

கையில் வைத்தேன்-புக்கு கானகம் வரும்போதிலே, புலியாய் வந்தென் கையாழி கொண்ட டலிவைக்கக் கண்டேனென்று, தாஹா நபியிறசூலோதினார். (29)

புலியாய் வந்ததகங் கெனைய தட்டிப், புந்திதனைக் கலக்கும் போதிலே-வலியோன் கற்பனை முஹம்மதேனும், வலக்கை யாழியை யெறிவு மெனத்-தலைவாய் பிளந்ததிலாளி வீழ்ந்து, தானே புலி கானம் போகக் கண்டேன்-அலியார் வெந்தன்மு னாழி வைத்தார், அல்லா அவர் சிர்றை யறிவா னென்றார். (30)

மிஃறாசுப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 11-க்குத் திருக்கவிதை 224.

# உபாத்துப் படலம்.

## தொங்கல்.

ஆதி நபியிறசூ லிடத்தில், அல்லா இசுறாயீல் தம்மையேவி, நீதி முஹம்மது நபி றூஹினை. நீர் கேளுந்தந்தால் வாங்கி வாரும்-சோதி நபியிறசூ லிடத்திற், சுபுஹா னோன்விட்ட மலக்கு வந்து சாதி நபியே நும் றூஹைஹபிறை, தான் கேட் டானெனச் சொன்னாரப்போ. (1)

தங்கள் றூஹினை வாங்கியொரு, தம்பிரான் விட்ட மலக் கிடத்தி லெங்கள் நபியுல்லா கொடுத்தற்பின், னெழிலார் பாத்திமா நாச்சியாரின்-திங்கள் முகம்வாடி மிகவழுது, செப்பினார் நம்பி ராட்டி மார்க்குப்-பொங்கி யவரெலா மழுமிகப், புகழ்ந்தார் அல் ஹம்து லில்லாஹியை. (2)

நல்லநபி யிறசூல் மாமனார், நாயன் ஹபீபான எங்கள் நபிக், கில்லையுயிர் போக இல்லையென்றே-யேகநபி ஜனசாவானதைத் தொல்லைப் புவிதனி லடக்க வேண்டா-மென்ன வுமறுகத் தாபு சொன்னார்-அல்லலறுமபூ பக்கரவர்க், காயத் தினையோதிக் காட்டினாரே. (3)

அலம்தற இலல்லதீனவெனு, மாயத்தை யோதிக் காட்டியபின் கலம்வரிப் பட்டதுண்டோ வெங்கள்-ஹக்கன் ஹபீபான முஹம் மதர்க்குச், சிலம்பி லொளிவீச முதுமானப்பான்-திருநாம முள குர்ஆனிலே அலம்பும் இன்னக்க மையத்தெனு, மாயத்தை யவர்க் கெடுத் தோதினார். (4)

பலன்பெற் றுளமுஹம் மதுசபிக்குப், பயமுண்டோ மவுத் துண்டோ வுண்டோ—புலன்பொறி யுண்டோ முஹம்மதுக்குப், போகவாமனந் திகைப்ப துண்டோ—வலம்புரிச்சங்கி லிருந்து பின்னர், மன்னும் புவினியில் வந்திருந்தார்—கலம்ப லாயவர்க் கழி வுண்டோகாண், கருணையுயிர் வாங்கக் காலனுண்டோ. (5)

பூமி முதலாக வானமட்டும், புகழாயேந் திக்கொண் டறுஷு மட்டும்—ஆமினார்க ளபியா மென்றே, அல்லா திருமுன்னு சனத் தில் வைக்க—நேம நபியாமென் றிறைபுகழ்ந்த, நெறிசேர் நபியி றசூ லுல்லாவின்—வாம மறியாம லுயிரைவாங்க, மலக்கல் மவுத் துண்டோ வருள்யார்களே. (6)

தந்தை தனைவெட்டி மறைவிளைத்த, தருவே யுமறே நீர் கேளுமென வந்த தாயத்து சபர்மாதத்தில், வள்ளல் நபிமேனிக் காயாசமும்-இந்த றபீவுலவ் வலீராறி, லிறசூ லாகிறம் வரவேண்டு மென்றே—யந்தப் படி வந்த ஆயத்தாலே, அல்லா இடம்போனு ராலநபி. (7)

அன்று நபியிடங் கேளாமலே—ஆயத்து வந்தபடி யன்றியே, இன்று முடுகத்தான் தடையுண்டுமோ-ஏக நாயகனுக் கேர்க்குமே, குண்டு நேர்புய ருமறுகத்தாப்—கோமா னளவிலே புகழ்ச்சியாகித், தொண்டு மிகச்செய்தார் செய்துபின்னர்-துங்க மனமது சலித் திருந்தார். (8)

மனமா னதுசலில் துறங்குமுமர், மஹ்மூ தைத்தேடு மாசை யினுற்—புனலோடும் பொறிதனை யடைத்துப், புழுங்கி யுறங்கிடு மன்னேரத்தி—லினைவா னவர்க்கெல்லா மேலானவ, றிறசூல் முஹம்மது நபி நாயகர்—சொனமாப் பரியினி லேறியுமர்த் தோன்றல், கனவினிற் சண்முன் வந்தார். (9)

கண்ணின் மணியான நபிமருகர், கருணை மிகவுள்ள அலியார் சொன்னுர்—ஒண்ணு னவன்சொன்னு னுயத்திலே. ஓசியத்தில் நபிதாமுஞ் சொனனுர்—எண்ணூர் ஒல்லுஹறா வானதிமே, இயம் பினு னுமர் கேளுமென்றே—அண்ணு வியான முஹம்மதரி, னுவிதனைவாங்க மலக்கு முண்டோ. (10)

அவரா லனைத்தையும் படைத்ததல்லா, லவரையாராலே படைத்தான் சொல்லும்-இவரை யுயிர்வாங்க எவராயினு, மில்லை யொருவரு மில்லையென்றுன்—கவக்கென் றிதுசொல்ல அலியார் சொல்வார், கருணைச் சபர்மாதம் முதல்நாளையிற்-றுவக்க மானவன் சொல்லி, விட்ட துதிபத் தாயத்தை யுணர்ந்திலீரோ. (11)

மந்தாரக் குடை நபியோதினூர், மாம னுமறே நீர் கேளு மென்றே—யந்த ரங்கமா யவனூரிலே, யழைத்தா னுயகன் புவன மீதில்—வந்தா ரப்துல்லா நுதலில் நின்று, மானு ராமினு ருதாத் தினிற்—சிந்து சுரூபமாய் மனுவடியாய்ச், சீவன புசுமாய்ப் பிறந் தனரே. (12)

பிறந்து குழந்தையாய் வாலிபமாய்ப், பிறந்த தற்காக மவுத் தேவினுன்—இரந்து போறதை யுமறேகேளு, மிறையோன் ஷபா அத்திற் கிரக்கவேணும்—அறந்தருந் தீதார் காணவேணும், அருளின் யார்களு மும்மத்தோரும்-குறைந்து போகாமல் நிறைந் திருக்கக் கோமான் சொல்லியே யென்னையழைத்தான். (13)

அழைத்த செய்தியை யுமறேகேளு—மவனே பிறப்பில்லா னிறப்புமில்லான், விளைத்த வதிலொன்று சொல்லக்கேளும்— வேந்த னெருவர்க்கு வடங்காதவன், பழத்தைக் காயாக்கிப் பழ மாக்கினுன-பயஹாம்பர் நபி பாருமென்றே-யுளத்தைத் திரும்பிய வுமறுனவ, ரொக்குமென நபி ஹக்கேயென்றார். (14)

எந்தன் மாமனு ரேயுமறே-பின்னம் செய்தியான் சொல்லக் கேளும், அந்த மவுத்தொன்று மில்லாவிட்டா—லவனி போதுமோ எல்லாத்திற்கும், கந்தக் கியாமத்து நாளாகினுங்-கருணை மஹ்ஷறு நாளாகினும், சொந்த சிறுத்துப் பாலங்கடந்து—சுவர்க்கந் தனி லுற்று வாழலாமே. (15)

எனக்கு மவுத்துத்தா னில்லாவிட்டா-லெவர்க்கு மவுத்தில்லை யுமறாசே, எனக்குத் தனதான காரியத்தை-யெவருமறி யார்க ளிறை யொழிய, எனக்கு நாயன்செய் நன்றிதனை-யெவருந் தெரியார்கள் பூமினிமே, எனக்கு மவுத்தெனு மக்கமதனி-லேற்ற பணிவிடைசெய்யச் சொன்னுன். (16)

மஹுஹு ருகினுன் வெளியாகினேன்—மஃஷூஉக் காகினுன் ஆஷிக்கானேன், மஹுஹுறுனதில் இஷ்க்காகினேன்—மஃஷூஉக் காயுஜூத் மவுஜூதானேன, மஹுஹு ருனதால் அரூபமானேன்— மஹிபியாகியே ரூபமானேன், மஹுஹு ருகியே சுரூபமானேன்-மஹ்பூ பாகியே மவுத்தாகினேன். (17)

இன்ன மொருசெய்தி சொல்லக்கேளு-மெனக்கு மவுத்தில்லை றாஹத்தை, மின்னும் றாஹுக்கு மவுத்தில்லையே-மிசுமில் லகுலம் நாணுனதி, லுன்னு மிதின்பொரு ளாருங்காணு-ருமக்குத் தெரிவதோ தெரியவென்று, லென்னைப் பூவினி லடைக்கப்-பின்ன ரென்னைக்கேளும் நான் சொல்லுகிறேன். (18)

றாஹூ ஜிசுமானி மண்ணிற்சேரும்-றாஹூ சுபுஹானி நீரிற் சேரும், றாஹூ சுல்தானி நெருப்பிற் சேரும்-றாஹூ றாஹானி வாய்விற்சேரும், றாஹூ றாஹூல்லா தரத்திற்சேரும்-றாஹின் வர வான வாறிஃதே, றாஹூ தனக்கொரு மவுத்தில்லையே-றாஹூ இன்சானிதானே துஞ்சும். (19)

நபுசு அம்மாறத் தானதிலே-நடுங்கித் தான்சேர்ந்தால் ஜபறா த்தாகும். நபுசு லவ்வாமத் தானதிலே-நலக்கண் கலங்கில் நாசூத்தி லாவர், நபுசி முல்ஹிமா வானதிலே-நாஞவிதமானல் மலக்கூத்தா வர், நபுசு முத்மஇன்னுதிவலே-லாஹூத்து ஹையுல் கையூமாவார்.()

அருளும் ஜெம்கூத்து நாமாகினே-மானல் மவுத்துண்டோ மவுத்தாகினல், வெருளைத் திருப்பினன் ஹயாத்தாக்குவேன்-வேந் தர் நபுசுதாத் துல்லாநபி, பொருளை யிவ்விதந் தானேதவே-போ துமென் றேயுமறங்-கிருளை யறுத்தனர் விழித்து வந்தே-யெங் கோண்மாமனே செங்கோலென்றார். (21)

இப்படிச் சொலி யினுமுமறே-யியம்பக் கேண்மென விறசூல் சொன்னூர், துப்புரவான மனமயங்குர்-துடராய் நபுசது தான்மய ங்கு, மப்படியாய் நாட்கணு சிறெண்றே-யன்று நான்சொன்ன படி யாகுமே, யொப்பு முவமையு மில்லாதவ-னேதினன் குறாஆனதிலே.

தொலிக்கு மவுத்துண்டு மவுத்தாகினுற்-ருேடர்ந்தம் மாறத்து நபுசொளிக்கும், பலிக்குஞ் சதைரத்த மவுத்தானகிற்-பகர்லெவ்வா மத்து நபுசொளிக்குஞ், சலித்துத் தான்மூளை மவுத்தானகிற் றூங்கு முல்ஹிமாநபிசொளிக்கு, மொலித்தொன்றிற் கொன்றுவலித்ததானு லொத்த மவுத்தாகும் நபுசானதே. (23)

நபுசு முத்மஇன் னத்தாறது-நாறுதனில்வேகா நீறதாக, தவசு தனிலிருந் தாதிநாமந்-தானே முழங்குமா மவுஜூதிலே, பவுசு நபு சதை மண்திண்ணுது.பகரு மிருஷாதுக் கித்தாபின்படி, கபுசோடறு ஷேறும் நபியிறசூல்-காபு ஹாயா ஐன்சாதிற் பாருமென்றார். (24)

தொலிக்கு மவுத்துண்டு மவுத்தாகினுற்-ருேடரும் நபுசு றாஹீனை யெப்பு, மெலிக்கு சதைரத்த மௌத்தாகினுல்—மெல்ல எழுப்பிடும் நபி சுறாஹைறக், கலிக்கு மெலுப்புதான் மவுத்தாகினுற்-கருனை நபு சுறாஹினை யெழுப்பும், பொலிப்பின் மூளைதான் மவுத் தாகினுற், புகலும் நபுசிறாஹினை யெழுப்பும். (25)

ஒன்றையொன்றுதான் மறைத்துக்கொண்டா-லொக்க மவுத் தாகும் நபுசாமஃ, தொன்று தாத்தொடு நபுசுதானு-முற்றூர் சாகாது போய்விடாது, தொண்டரானோர்க்குத்தான் றெரியுந்-தோஷியானோர்க்குத் தெரிந்திடாது, பண்டு பயஹறாம்பர் நபி யிறசூல்-படைத்தோனோதினனென வோதினர். (26)

மூர்க்கை யுனக்குத்தா னுண்டாகினல்-மூர்க்கை குலையப்பெண் டனக்காகியே, ஆக்கை யழிந்திடும் நபுசைவிட்டே- ஆகாசம் போகு மலக்குடனே. ஊர்க்கை குலைந்திடு மேலிருந்தா-லுயிர்தா னணிந்து கீழ்மேலாய்விடும், பார்க்குந் திசையெல்லாம் நபுசுதானும்-பதறிப் பதறியே பணிந்து சாகும். (27)

எப்போ தினுந்தூக்கம் வெளியில்வந்தங்-கிருந்தே இருசெவி வாயைமூடித், தப்பில் லாமறை தனக்குள் வந்து-சாடிமனமதைத் திருப்பிவிட்டே, அப்போ திருகாலில் நின்றேறியே-யதபாய்த் தாம ரை தனிற் புகுந்தே, யெப்போதும் நினைவானதுவே யேகன் தெரி சனமானதுவே. (28)

சொர்க்க லேகத்தி லங்கரைநாட்-சொலுமிங் கறுபதாயிர வரு டம், நிற்கும்போது மூப்பது நாழிகை-நிசமா யாகந்தம் சிரசுக் குள்ளே, வர்க்கமா யங்கே சுபுஹு நேரம், வணங்கும் றாஹைத்தான் விட்டானல்லா, நற்கால் நடந்துப்போய்ப் பொழுதடைந்தால்-நாடித் துனியாவை முடிக்கச் சொன்னன். (29)

கிருமன் காத்திபு வரைதொழுதுங்-கணக்கை முன்கறினிடத் திற் சேர்ந்தே, யிருதத் துடதிசுருயில முன்போ-யிலந்தை யிலை யெழுத்தழியக்கண்டு. முருதா யிரணமிங்கில்லை யென்பார்-முத லோன் கற்பனையது போலவே, நருத மாகவே யிவருயிரை-நாடிப் பிடித்திழுத் தழைத்துக் கொள்வார். (30)

மலக்கல் மவுத்திரு காதிடையில்-வாழுங் கிணாதை யடைத் துக்கொண்டே, இலக்கத்துடன் கேள்வி கல்க்குக்குள்ளே-இருகண் பார்வையா முன்கர் நக்கீர், கலக்குல் வாசிதான் கிருமன் காத்திப்-காணும் வெளியிலே நிறுத்திக்கொண்டு, துலக்க இன்சானை வினக் கஞ் செய்து-சுகமா யிருப்பார்கள் சுவர்க்கத்திலே. (31)

மூன்று நாளைக்கு முன்னிதாக-மவுத்து வாராதை யறியலா கும்-என்ற நாயகன் றூனோதினன்-இருத்த றபாவெனுஞ் ஜ-ஸ-வி

லேதான், பூண்ட அமுதுண்ணுங் காலேயிலே-பொருமி யெழுத் தொன்றை யுள்ளே வாங்கித், தாண்டி யுயர்த்தேற்றி மூச்சை விட் டாற்-சாகு வருங்கால மறியலாமே. (32)

மாண்டு போனவர் மீண்டும்வந்து-மன்னர் நபியிறசூ லோதி னூர். மூன்றும் ஜுஸுவிலே மூன்றுயத்தில்-முறையின் முறை வழிதனிலே சொன்னூர், தாண்டி யேறின மிஃறூஜிலே-தானமாகிய தலங்க ளெல்லாம், வாழ்ந்தங் கிருக்கின்றன முறையானதை-வாழ்ந் தோர் புவியில் வந் தோதினூரே. (33)

நல்லா கலாமுல்லா மஃனூவிலே-நாளும் நபுசதின் காரியங்கள், அல்லல் படாமலே நிற்பதுவு-மதிலே யுயிர் நின்று போறதுவும், சொல்லும்படி கேட்டு நடப்பதுவும்-சுகித்து வெகு நாளேக் கிருப் பதுவும், வெல்லும் குருனயத் தானதிலே-மேலுஞ் சொன்னதைச் சொல்லக் கேளுமே. (34)

தந்தன் ஷெய்குமா ரானவர்பாற்-றன்னை யறிவதெப்படித் தானென்றுற், சொந்தப் பலவிதஞ் சொல்விடுவார்•சொன்னு லது போதாதென்று சொல்லு, மெந்தன் சொல்லதுந் தவறுவதோ-வென்றுலெதிர் சொல்லும் ஆமெனவே, அந்த ஹேமீமுல் காதி றுவை-யடுத்துக் கண்டாக்காற் றெறியுமென்றே. (35)

எந்தன் றாஹூதா னூருமென்று-மெந்த னபுஸூதா னூரு மென்றும், எந்தன் கல்புதா னூருமென்று-மெந்த னுறக்கந்தா னூருவென்றும், எந்த னிணேவுதா னூருமென்று-மெந்தன் மனதுதா னூருமென்றும், எந்தன் மவுத்தை நானறிய வேணு-மென்று வியம்பு வார் சாஹிபுவே. (36)

மவுத்து வருமுன்னே பல கோலங்கள்-வந்து வந்துதான் வளைந்து விடு, மவுத்துக் காகிய கோலமிது-வந்தங் கிசுறுபீல் சூறா தினூற், ளுருத்த மாங்கிச மெலும்பு ரோமஞ்-சொல்லும் நரம்புகளானவைகள், அவஸ்தைப் படும் பெரு மூச்சானது-மாக வந்துதா னெவ்விக் கொண்டிடே: (37)

தகுத்து மாறுடிப் போனகாலந்-தன்னே யெவ்வித மறியக் கூடும், ஒகுத்து வந்ததங் குபிரைவிட-வுடலே விட்டதே யுயிரானது பவுத்துவம் போச்சுக் கவத்துவமாய்-பாழை பலவித மானதுவே, சவுத்து மவுத்தாய்ப் போய்த் தானம்விட்டுத்-தாங்கும் பேர்களு மொழிந்ததுவே. (38)

கம்புங் கழையுநற் கபிறும் போலே-காத்துக் கொண்டது தானும் போச்சு, இன்ப சுகமான விந்தும் போச்சு-இயல்பா யுறங்கிற வுறக்கம் போச்சுத், துன்பக் கிடையாகிப் பேச்சு மூச்சுஞ் சொல்லுங் கேள்வியானதும் போச்சு, அம்பு விழியான பார்வை போச்சு-அப்பால் காதிறை யறியலாமே. (39)

இப்படிச் சொன்னான் சூபியத்து-இல்மு பதினாலுந் தபுசீறி லும் சொற்படி சொன்ன லும்முல்குறுன்-ஷேற்றும் பதினா றுயத் தினுமே, நற்படி சொன்னான் பிக்குஹதிலே-நாளும் றம்சிலும் லொ மீறுவிலு, மெய்ப்படி சொன்னான் மேலு மேலு-மெய்யா முஹ்றபி தீணைப் பிடித்துக் கொள்ளே. (40)

காபு ஹாயா-ஐன் சாதோடைந்து-ஹறுபே மூரை-தவு றுத்து மூசா, தோகை ஹேமீம் ஐன்சீன்கா போடைந்துந்-துலங்க வேழுரை சபூறுதாவூத், மோகா அலிபுலாம் மீம்றேய்நாலு-முறையா மோழு ரையின் ஜீலீசா, ஏகும் அல்ஹம்தா மைக்தெழுத்து-மிறசூல் நபிபுறுகானேழுரை. (41)

இந்த ஹறுபுபத் தொன்பதையு-மிறசூல் இசுமில் லகுலமாக, மூந்த அர்றபிக் குல்லகுலா-முறைபார் கவிமாவின் பொருளானது, சொந்த மாமுஹம்மது நபிக்குத் துலங்கும் றாஹுதா னடக்குபு நேரம், விந்தை நாயகன் சொன்னான் சொன்னேன்-மேலோன் சும் ஹானல்லதீ ஜஉசுவில். (42)

ஏகன் புறுக்கானி னடுவதுவா-மிறசூலின்சான் காமிலாகச் சொன்னான், மோகமுடன் சொன்ன சூபியத்தில்-முறையா ரிமாம் கள் தம்முரை யஃதாம், தோகை மயிலான நபிபேரிலே-தொலையா வுருக்கங் கொண்டுணர்ந் தோர்தங்க, ளாக மகிழவே நமக்கவர்க் குமரிய வுதவி செய் அல்லாஹுவே. (43)

போற்றும் நபுசுதான் மூமினாகும்-போற்று நபுசுதான் வைத் தானென்றார், ஆத்துமம் போற வேளையிலே-யாரா லாகிடுஞ் செறுத்துக் கொள்ளக், காற்றுங் கடலிமே கலங்குமாறு-கலங்கும் நபுசுக்குள்ளினங் களெல்லாம், சாற்றுந் தக்குவாவி லிதுபாத்திலே சாருங்கா ளென்றாரிறசூலுல்லா. (44)

ஒன்று மறியாத மூடர்கட்கு-மொக்க அறிகின்ற வுலமாக்கட் கும், நின்றுவிளையாடு மூயிர்ப்போய் விட்டால்-நேர்மை யொடுமிவர்

மனுமில்வந்து, கொண்டு வருகின்ற செய்திகளைக்-கூவவே யதை நம்பிடாதே ; என்றும் வெளியிலே நின்றுகொண்டே-இல்லல்லாஹூ வென் றோதுவதே. (45)

பத்து பேருக்குக் கேள்வியில்லைப்-பயமுர் தானில்லை யோரிடத்தும், உத்தம ரிறசூ லோதினு-ரொருவன் காரிய மிவரறிவார், ரற்றும் படியிதுகுறு ஆனிலே-யெங்கோன் சொன்னதை யியம்பக்கேளு, மத்தியிற் காலஅலம் அஃகுல்லக்க-ஜூசவி லிவையெல்லாம் வகுத்திட்டானே. (46)

தெரியாத சின்னஞ் சிறு பிள்ளைக்குந்-தெரிந்த பெரியோர்க்கு மொருபாத்திஹா, கெதியே கொடுக்குமென் றிவரோதினுற்-கேவலமான கவலையில்லைச், சுரியானிப்பாவை தன்னைக்கொண்டு-சொன்னு னீரைந்து ஜூசுவானதே, விரிவா யறிவான இல்மைப்பாரும்-வேந்தன்ருன் சொன்னுன் குருஆனிலே. (47)

உபாத்துப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 12-க்குத் திருக்கவிதை 271.

---

# மகுஷர்க் கேள்விப் படலம்.

## தொங்கல்.

காளை மகுஷறில் நபியுல்லாவும்-நபியினும் மத்தோ ரனைவோர்களும், வேளை முஸ்தகீம் கடக்கும்போது-வேண்டா மெனவென்றே இபுலீசுதான். ஆளு முமதுசொற் கேட்டபேர்க-ளாகத் தெரிந்து தான் கூட்டிப்போகும், ஏழை யென்சொல்லைக் கேட்டபேரை-யிங்கே கூப்பிட ஞாயமுண்டோ. (1)

திருவா யென்சொல்லைக் கேட்டபேரைச்-சேர்த்துக் கொள்ளவே ஞெனனவே, குருவே யுமக்குநான் சொன்னபடி-கூட்டிக் கொண்டு போமென்ருன் பின்னர், மருவார் நபியுமும்மத்தோர்களும்-வருகையில் வழிமறித்தா னப்போ, தரும சுருபமில் லாத வொரு-அல்லா தனைநோக்கி நபிசொல்லுவார். (2)

அல்லாவேயிவன் மறித்துக்கொண்ட, தாலே யெப்படி நான் வருவேன்-ஒல்லா முன்சொன்ன வல்லவன்று, னும்மைக் கொண்டு நீர்வருவீரென்றான்-எல்லாம் படைத்தாளு நாயனே, நானெனைக் கொண்டெவ்விதம் வருவே னெனச், சொல்லா னஃதொன்றுந் தெரியேனெனத்-துய்யநபி சொல அவன் சொல்லுவார். (3)

ஆர்க்கு முடையோரே ஹபீபேநீதி, யான ஹிம்மத்திங் குமக் கில்லையோ ஊக்க முடையவ ரும்மைக்காண, வுண்டோ வுலகிலும் வானத்திலும்-தாக்கமுட னென்றுஞ் சொல்லமாட்டேன், தன் னுலும் முளப் பலம்போலவே, ஏர்க்கும்படியிபு லீசைத் தள்ளி, யிங்கே வாருமென் றிறையோதினன். (4)

சதிய னிபுலீசு பழிகாரன்மா, சாதனை யுள்ள கள்ளப்பயல்-விதியை யறியாமல் விட்டமூடன், வீணில் மறித்துக்கொண் டான தனைற் பதியி லெப்படி வருவேனெனப் பயஹாம்பர்நபி கூறவிறை-யதிகாரமுண்டா யிருக்கில்வாரு, மல்லா திருக்கிற்போ மென்றுரைத் தான். (5)

மண்ணின் மஹ்வஷறு நிலையானது, மண்டல மூன்றிற் கப்பால் நின்றே-யெண்ணும் நாயகத் தனமானவை, னிருந்தான் சம்குல் குலாவை விட்டே-அண்ணும் பார்வைக்கண் ணுச்சியிலே. யன்று பாரும் நீரின்று பாரும்-நின்றுவிளையாடுங் கண்ணை மூடி, நீண்ட அலிபோடே நின்றஹறூவே. (6)

நிற்கும்நிலஞ் செம்புத் தரைபோலுமர், நிலத்தைச் சூழ்ந்தது நரகானது-கைக்குமேல் நிற்குங் கதிர்சூரியன், கதிரு முகமெட்டாய் எரிவீசுமே-ஒக்கும் நாயக ரதின்மேலிருந், தொவ்வொன்றாய்க் கேள்விகேட்பானவ-னெற்குமிது கொப்புத் தவ்ஹீதான, இல்லல்லா சொன்னன் குறாஆனிலே-பக்கம் பாராம லில்லைப்பாரும், பார்த் தாலறியலாம் ஹேமீமிலே. (7)

மூலக் கருமூன்று முண்டகத்தில் முழுதும் நிலையாக நிற்கும் றாஹூ-பாலை யதுசூழ்ந்து பரியானது பார்க்கும் நரகது பரியானதே யேல அதற்குமே லிருகண்ணுன, திருசெவி ரண்டு மாடிநிற்குங்-கோலமான ஹக் கானவன்றான், குல்லா வானதை யிட்டனனே. (8)

இந்த நிலையாகு மஹ்வஷறுன, தில்லைமப் பாருங்காள் மூமின் களே அந்த லாஇலாஹ இல்லல்லாஹூ, அலியுடன் ஸாம்மீம் ஹேயானதே-மூந்தச் சொன்னதில் அலிபும் லாமு, மூர்க்கமாகவே

யுயர்ந்துகோரிச்-சிந்தை வொளியான மத்லூபிலே, செய்தி யறியுங்
காள் நபியும் மத்தே (9)

நல்ல நபியும்மத் தானவரே-நடக்குஞ் தெஹீது பெலமானது, சொல்ல தொலைபாது சிர்றூனது-சூட்சமா முஸ்தகீம் பாலமே, எல்லை நேரான நடப்பானதங்-கியல்பா முஸ்தகீம் பாலமாகும், வல் லமையுள்ள நாயகன்றுன், வழூத்தி ஞன்குறு ஞபத்திலே. (10)

நேரே நடப்பது முஸ்தகீமே-நேருகெட்டதங் கொபி லோடையே, ஊரே தீஞன ஹூரானதை-யூரி லிருந்துபின் ஞேடிவந்தே, சேறு போடாமற் றவரிடாமற்-செய்யும் பணிவிடை பிசகிடாமற், பாருங்காளிருவிழி நடுவிற்-பார்த்தா லறியலாம் ஹூவல்லா ஹூவே. (11)

மின்னி யெரிகின்ற விளக்கைப்போலு-மிளிழிஞ் சூரியன் றன்னைப் போலும், உன்னி விளையாடுங் கமறுபோலு-மொருமித் திருக்கின்ற தங்கம்போலும், நின்று விளையாடு மறையாமலே-நோய்க் கதிர்வீசும் நூறூனதே, அன்ன முஹம்மது நபியோதினு-ரருள்ஹூஜல்ஜலால் பொருள் ஹூவென்றே. (12)

மூந்த நாயகன் தானோதினன்-முழுஆதமும் ஹூஹூஹூவென, அந்த நாளையில் நபியிறசூல்-அல்ஹம்து லில்லாஹி யென வே, சொந்த மாகவே நபியும்மத்தோர்-துல்லிப மாக வதிலிருந்தால் விந்தை பெறுவார்கள் நிஃமத்தாலே-வேண்டும் பறக்கத் துண்டாகு மென்றூர். (13)

மகுஷர்க் கேள்விப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 13க்குத் திருக்கவிதை 284.

---

# மூலாதாரப் படலம்.

விருத்தம்.

லாஇலாஹ வென்றுன நாலாறு மெழுத்துமூலம்
ஓய்வில்லா இல்லல்லாஹூ உயர்ந்திடு சுவாதிஷ்டானம்
வாயில்லா வோசைநின்ற முஹம்மது பெயரைக் கேண்மோ
நாவில்லாக் கமலமூணயில் நாயக னுரைத்ததன்றே. (1)

உன்னிய மணிபூ ரகந்தா னுறுதித் தாமரையே யாகு
மன்னிய தொண்டைக் கூழியதா மகிழ்ந்திடும் விஷித்தீ யாகுங்
கண்ணிரு நடுவிற் கனியதான கருணைமண் டலங்கள் மூன்று
முன்சொன்ன மூலாதார வினமென மொழிந் திட்டாரே. (2)

சூரியமண் டலந்தான் சொலும்வல தாகுமென்றும்
நேரிய சந்திரன்தா னிலையுறு மிடது பக்கம்
பாரியவக் கினிநடுவிற் பகர்ந்திடு மிவைக ளெல்லாம்
சோதிக்குங் காலன்வேளை சொல்லுமே கவிமாத்தானே. (3)

சீவனுஞ் சிரசுமுன்னுட் சிறுத்து லவிபை நீட்டிப்
பே யுடன தேயுங் கூட்டிப் பிசகறப் புருவமூட்டித்
தேயெனும் நெற்றி சேர்த்துக் திருமலர்ச் சிரசுஜிமாம்
ஹேயுடன ஹேயுங் கூட்டிக் கிளர்ந்ததோட் புயமுந்தானே. (4)

செய்கையுந் தானுந் தாலுஞ் சிறப்புட னிணையுங்கால
மைகமுன் றேயும் லேயு மருவிரு வலாவி லென்று
மெய்கையும் சீனும்ஷீனும் விரைபுனை மார்பி லென்றார்
தைகையின் சாதும் லாதுந் தரிப்பிணை செவியிற் சேர்த்தான். (5)

காலிரு மொளியைச் சேர்க்க கலந்திடும் தேயும் லேயும்
மேலிரு கைகள் ரண்டும் விளங்கிய ஐனும் கொய்னும்
பாலிரு பிரமத் தோங்கப் பாங்குறு பேயுங் காபும்
கோலியம் சுமந்த காபைக் குறுக்குடல் தண்டுசேர்த்தான். (6)

பாவிய முழங்கால் ரண்டும் பாவிய லாமினூட்டித்
தாவியே மீமுமூளை தருமக்கா னூனைனூட்டிக்
கூவிய வாவுதொப்பூழ் கூண்டஹே கல்பினூடே
ஏவுலாம் அலிபு சுல்பி லிசையும் எறாஹே யென்றான். (7)

## தொங்கல்.

றாஹாகிய பதினெலெழுத்து-மூடலமதி லுற்ற வுயிரதாகுங், கூறுவேன் மத்தும் ஷத்தும் சுக்கூன், குறித்திடும் புள்ளியதனைக் கூட்டி-வாவுமேல் சவரதுவுஞ் சேரும், வரும்பேசி சவரதுவுஞ் சேரும்-ஈறில்லான் துப்பேசா யத்துவு, மிலங்கு மூத்தலக் ஜாயிசமே. (8)

## விருத்தம்.

இப்படிக் கிசையும் றாஹி ஸீவுமுன் ஆதமுக்கு
மப்படிக் கவனும் ஆத வழகைமுன் ஞய்ந்த தாலே
செப்படித் திறவுஞ்சிவன் றிருமலர்ச் சிரசினூடே
மெய்ப்படிக் கெவையு மீந்து மெய்யுரை விடுக்கலுற்றான். (9)

மாவென்ற மாமொன்றாகி வருமலர் பேச்சுமூச்சாய்
ஆவென்ற அறிவை காட்டி யருமல ருடுபூர்ந்தே
மீயென்றே யிறைஞ்சி யேங்கி யினிதருள் ராக மீந்தே
ஊவென்று முரைத்தே யோங்கி யொடுங்குமத் தலத்திலம்மா. (10)

ஒடுங்குமத் தலத்தி லாய்ந்த வோம்புத லொசிக்க மாகக்
கடுங்குமவ் வொளியை நோக்கிக்காதல் கொண்டிறைஞ்சி நேயம்
நடுங்குமே நாதனென்று நானுன்னை நாடநாட
அடுங்கனை யந்தேயோங்கி அறுஷினி லான தம்மா. (11)

அறுஷினி லாகிவிம்ம அறிவெனு மாய்ந்த பார்வை
குறுசினி லேறிநிற்கும் குதறத்து மலுஹா றென்னு
மிறுசதச் சுவாசமேந்தி யிருபதம் லைஹி லோங்க
நறுசத நாட்ட காவல் நாட்டுமக் கலமு மம்மா. (12)

கலமெனும் அண்ணு விண்ணுக் ககனமாம் பலகை தன்னிற்
றலைமுத லாதி சத்தம் தானவ னுரைத்தபோது
நிலைபெற வெழுதும் போது நிச்சய வசன மெல்லா
மலைவில்லா முஹம்ம தென்ன வரிசை நாவுரைக்கு மென்றும். (13)

உரைதிருக் கலிமா வென்று முவந்தநல் விறுஷாதுற்ற
கரையில்லாக் காட்சியான காரண வொளியை நோக்கி
நிரைநிரை யமார்கூண்டு நீதிபாய்க் திணக்கஞ் செய்வார்
தரையினிற் புகழுக் கெல்லாந் தானிறு ஷாதாமென்றும். (14)

சுந்தர மலர்ப்பூங் காவிற் சுகமனு பவிக்கும் ஆதம்
அந்தார தனிலே வட்டம் அல்ஹம்து சூறத்தானூர்
சந்திரன் கதிரோன் மற்றுந் தானவ னமைத்ததெல்லா
மந்தக முடலாம் ஹேமீப் ஐன் சீனும் காபுமாகும் (15)

அம்மா றத்து சுபுசு ஹேமீம் ஐன்ஸீன் காபுகோலம்
நிம்மாசு செய்லெவ் வாமத்து நிறைந்த அல்ஹம்தாய் நீண்ட
ஜம்மா லென்னுங் காபுஹாயா ஷஐன்சாது மூல்ஹிமத்தாம்
கம்மா லென்னு முத்மஇன்னு காபு ஒல்க் குறு ஆனேதும், (16)

கொடியிடை கர்ப்பந் தன்னைக் குணனவ ளூத மங்நாட்
பெடையது முட்டை தன்னைப் பேணியே யணைத்து வெப்புத்
துடியுட னிருபத் தொன்றும் நாளதிற் றுலங்கிங் குஞ்சு
கொடியது போலாமென்று முஹம்மதர் நுவன்றிட்டால். (17)

வேட்டுவன் மண்ணெடுத்து விரைவியே கூடுண்டாக்கி
யாட்டியே புழுவை வைத்தங் கதனைப்போ லுதவுமல்லாற்
கூட்டிய துகிலில் வேர்ப்பிற் றுலங்குமேன் வந்தநேரம்
நாட்டமும் போராதென்று நறைமறை யுரையைப் பார்ப்பீர். (18)

பாருநீ சனுவ றென்னும் பகாணு வாய்ந்த வாறும்
சிரிய நீம்சு தாத்து சிபாத்துமாய் மயங்கு வாறும்
ஆருங் கண்டறியா மைதான் அல்ஹம்த தெனும் சூறத்தார்
சூர்மையாம் வியீ லாபி குறைஷினை யோதிப்பாரே. (19)

நானல்ல நீயுமல்ல நடுவல்ல முடிவுமல்ல
வானல்லப் புவியுமல்ல பதுறல்லப் பொழுதுமல்ல
மீனல்ல மின்னுமல்ல விசைவெயி லாவுமல்ல
ஊனல்ல வுயிருமல்ல வுறுமலர் தானுமல்ல. (20)

அந்தர மறுவுமல்ல அண்டம்தற் குறுசுமல்லப்
புந்தியின் மனமுமல்லப் புகழ்ந்திடும் நினைவுமல்ல
நந்தியும் நமனுமல்ல நாட்டமுப் தேட்ட மல்லச்
சுந்தர இறசூலல்லா சுருதிகண் டோதினார்கள். (21)

காணுமே பதுறு ஷம்சும் கருமின்னும் மீன் வெளியும்
தோணுல் லெய்லத்துல் கதிறுந் துய்யமுச் சுடரு வொன்றாய்ப்
பேணியே யொன்றாய்க் கூடிப் பெருஞ்சுழி யெறியும் போதே
யானியாய்க் கற்பனையி னல்லா ஆரண மியல்பல் கேண்மோ. (22)

வேறு.

பெண்ணாசை விட்டுவிந்தான, மணியோசை போரான பூரண மதாங்-கண்ணேம் சுக்கூன்வட்ட மத்தியானத்திலொரு, கனக மணி மேலாசையா-லெண்ணாத பாவிகட் கென்பாடுண் டென்று, மறியாத விழி குருடரா-உண்ணாத வூனுன் டொரணியின் மடை திறந்தமுதருந்தும் மனமே. (23)

மிஃறுஜாக்கேகு மப்போதொரு மலக்கு-வேதாம்பரக் கோதும் வசனம், தருசீ றுமக்கு மும்மத் தானபேர்க்குந்-தானவ னுரைத்த மொழியாம், மருளுன பேருக்கு மெட்டாத வான்பொருளைப்—பேறுன வும்மத்தோர்க் குரைப்பீர்—பருறுனசிரசமு தருந்தவே வானவர், ஸாஜதுசெய்த கேளும் மலக்கே. (24)

ஸாஜதான் மீமென்றுந் துடர்ஹேறுக், கூஹான தூய்ய அலி புநிலையாகியே— தையிபான இறுஷாதுதா னுகவொன்றுகிச், சபீ ஆதந்தமை வணக்கப்-பயிரான தாலொன்றிற் பறுலான, இருப் பாக்கிப் பகலிரவுமற்ற வீதியில்-மைதீான மெனநம்பி மருளுக் கெனுங்கோல, மறக்காமற் றேழுது வருமே. (25)

மூலாதாரப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 14-க்குத் திருக்கவிதை 309.

---

# வேதவுதிப்புப் படலம்.

## தொங்கல்.

பாலும் நீருமொன் றாய்க்கலந்து, பருகு மன்னம்பா லுண்பது போற்—காலாங் கலிமாவிற் பனுவைநீக்கிச் கனிந்த அமிர்தத்தைப் பெருகவுண்டு-மேலோன் பதத்திலே பாஞ்சாட்டியே, விதை யீந்தி லுள்ள பலனுனபோல்-ஆலம் அஹ்தான கனியானதை, யருந்த இசைந்ததல் அல்ஹம் துலில்லா. (1)

கரும்பு றல்வந்த வாறதுபோற், கனிந்த கலிமாவின் பொரு ளானது, துரும்பு கடலிலே தங்காமலே, துரிதத் தினிற்கடல் சேர்வதுபோ, லிரும்பு சொன்னமா யாகவேதா, னிசைந்த குரு வேண்டு முபதேசிக்கக்—குறும்பு முறுநிலே தெளிவாகிடிற், குல் லடக்கலும் அஹதாகுமே. (2)

இஸ்லா மானது மைந்துக்கப்பா லிறைஞ்சும் ஜம்ஆறில் ஈமான் வகை-அசுலாம்தம்கூசு மன்கூசுவும். அருள்சேர் மருக்கூசும் ஜம் கூசவும்-வசலாக் குன்கூசு லன்பூசுவும், வகைசேரிவையாருங் குறு ஆனிலே எசிலா—யாறப்பில் ஆலமீன் சொல்லேர்தங், கறிந்தவர் சூபியாவார். (3)

இசுலாமானது லாஇலாஹ இல்லல்லா ஹொரு நூறுமட்டம், அசுலா மண்ணுக்குத் தவாபுசெய்தே, அதிலே இல்லல்லா ஜலத்தில் நூறு—ஓசுலாய் அல்லாவை நெருப்பில் நூறு, உயர்ந்த அல்லாஹூ வாயில் நூற—வசிலா கூவெளி ஐந்நூறுக்கி, வணங்கும் சம்மிலே ஆசைவைக்கும். (4)

தன்கூசு பதி வாசியேறித், தானேன் சத்தத்தோ டுடுருவி—மன்கூசுக் கோட்டைமேற் றூண்டியே, வளரு மகுகூசு கணக்குப் பூந்து—குன்கூசும் ஐம்கூசு மொன்றாகவே, கூவு மாதியு மனுதியு மாய்-எங்கு மன்பூசல் காரிஅத்து, மல்கா ரிஅத்தி லிறையோதினேன்.

தம்கூச சேர்வை அலிபும்நூனுர், தானு மன்கூசில் ஐனு மீமும்-நம்மா மகுக்கூசு ஜம்கூசில், கும்மாம்நாடும்குன்கூசில் நூனும் காபும்-அம்மாமன் பூசில் அலிபும்சத்தும், அதின்பேர் அனுஇல்லா அனுஅல்லா—றாகுல்ஹக்கு உம்மா விதையரிந் தீமான்கொள்ள, வுரைத்தானுல் முல்க்கு றூனதிலே. (6)

எழுத முன்னமே யெழுத்தானது, மிசைந்து பேசமுன் பேச்சானது, மொழிதாய் தந்தைமுன் மகவானது. முட்டை பொரிக்கு முன் குஞ்சானது—தளிர்க்க முன்னமே பூவானதுந், தம்பிக்கு முன்னன்னவன் பிறந்தவாறும்-ஒழுக்க முடனுறு மசலா வயைு, மோர்மையொடு சொன்னோர் ஷெய்காகுமே. (7)

சிந்தைத் தெளிவினி லொளியானது, சிறங்குங் கால்ரண்டு மொன்றான பின்-வந்த வாசகங் கேட்டு மேலோன், வரிசை ஹறைத்துக் குதறத்தான-சொந்தக் கலிமாவின் பொருளாவது, சொல்லி லொருசத்த மங்கொரு சொல்-எந்த நேரமு மாறுமலே யிறைஞ்சும் அல்ஹையுல்கை யூமிலே. (8)

கையூமானது நினைவுக்குள்ளே, கால்ரண்டு மொரு சொல்லிற் கட்டித்-தையிபு மரம் வளர்ந்து பூத்துத், தழும்பில் லாக்கனி பழுத்ததானல், மெய்யா யருந்துவார் மரம் வைத்தவர்-வேதத்தில் ஆலம் இம்றானிற் சொன்னன்-ஐயா ஆதமுக் குபகாரஞ்செய், யல்லா தனக்கெல்லாப் புகழுமாமே. (9)

மடைத்தலைக் கொக்குக் காத்திருக்காத, வருமம் மச்சத்தைப் புசிப்பது போற்-கடைத்தலை வீட்டிலிருந்துதானே காலடிக் கிடை நடுவிலாகிப்-புடையின் மேலிலே புகுந்துலாவிப், பூட்டி யிருக்கின் றதைத் திறந்தே-யுடையவனுன கலிமாத் தன்னை யுவந்து யாறப்பில் ஆலமீனே. (10)

இல்லை வீட்டினிற் சேர்ந்திருந்தே, யெழும்பு மண்கதிப் புரவி யேறிச்-சொல்லை விடிற்சொல்லும் சுவர்க்கத்திலே, சோபன மான மணவறையிற்-குல்லென வந்த குமரிப் பெண்ணைக், கூட்டிக் கலி யாணமண முடித்தே-அல்லும் பகலற்ற வெளிச்சத்திலே, யாம் பையுடன் வீடு கூடலாமே. (11)

வள்ளல் சிறந்திடும் தௌஹீதது, வாழும் கமதைநில் நடு வதற்குள்-உள்ளமையான கலிமாவிலே, யுவந்து தொழுதுதான் ஸூஜூது செய்யப்-பொள்ளல் வாராமற் காப்பாற்று நீ, புகழ்ந்தே யடியேனுனு வந்து கேட்பேன்-எள்ளள வேணும் கருத்தில் வைத்தே, யிரங்கு நீநேர்கட் குதவியாக. (12)

உதவி யானவா வுறுதி கொண்டே, யுலக மெவையையும் படைத்தான்பவர்-பதவியாகிய நன்மை தீமை, பகிர்ந்தே யவரவர்க் கீபவனே-சிதைவு வராமலுனை யொட்டியென், சிந்தை கலங்கியே கேட்டது ஆப்புதைவு வாராமற் பூரணமாய்ப், புகழ்தா யாறப்பல் ஆலமீனே. (13)

கிருபை வைக்கின்ற அடியார்கட்குக், கிருபை மிகச் செய்யும் பெரியவனே-பொருதலாகவே புறுக்கானிலே, பொருள் சேர் பதுக் குறனி யாயத்திலே-தருமமாகவே கலிமாப் பொருட், டன்னை யருளென்றன் ஸக்கறுத்திலே-சிறுமை வாராமல் ஈமானுடன், சேர வுதவிசெய்பிணை யில்லானே. (14)

கவ்வையா யுன் மேலாசை கொண்டு, காரணமான கமலத்தி னுள் செவ்வியிருக்கின்ற திருவடியைச், செப்ப வரிதான மகாஜனே, பவ்வக் கடலென்னை மூடாமலே, பகரு மடியனை னிரந்து கேட்கும்-அவ்வல் லாஇலாஹ இல்லல்லாஹூ, முஹம்மதுர் றசூலுல்லாஹியே. (15)

நல்லோர்புகழ்ந்து ஆக்கையேற்றுநீ, நலமிலார் காட்ட முடிப்பவனே-பொல்லாச் செயலுக்கு முதவிசெய்து புகழார் பெரியோர்க்குங் கிருபை செய்வாய்-நில்லா மஹஷறில் நிலைநிறுத்தி, நிமைக் கண்டவாவர் பேரிற்சாட்டும்-அல்லா புறுக்காண் அர்றஹ்மானே நீ யார்க்கு மிரங்கி தீதாறருள்வாய். (16)

அல்குற் கேணிமே லாசைவைத்தே, யலர்ந்த கலவடை நாயது போல்-வெல்லும் புலனைந்தும் வெல்லுமுன்னை, வெறியாய் நாங்கள் செய்பவம் பொறுத்துச் சொல்லும் கலிமாவா மவ்வலிலே, சொன்ன சொல்லெற்கும் ஹபீபு மார்க்கும்-பொல்லாக் குபிர்வந்து மூடாமலே, புகதா யாறப்பல் ஆலமீனே. (17)

பெரியோர் கருணைதான் பிறந்தபிறை, பெருகு மதுபோலே பேரறிவாய்-சிறியோர் சினேகம் பூரணமதிதான், தேய்ந்து நூர்வ போலாகிவிடும்-சுரிக்குள் ளிருக்கும்பெண் சூம்ட்சங் காணச் சொல், விற்சுகங் காட்டுங் குருவென்றவர்-தரிக்கும் ஐம்கிலே காலைக்கட்டிற், றுணே காணலாம் கல்புல்லாவை. (18)

வன்னி மலரிலே யளிமுகர்ந்து, வாகாய்ச் சுழன்றதில் வீழ்வது போற—கன்னி யோனிமே லாசைவைத்துக், கலவி செய்தான் கரைந்தபாவி-புன்னியறிவுகொண்டுனைத்தேடுகா, ஞஸ்தா தெனக்கு வந் துபதேசித்து—மூன்னி மூ லயன் கற்பனையால், முடுகும் நடு மலர் கம்பத்துல்லா. (19)

அண்டர் முனிவரும் சதுமறையு, மனேக சாஸ்திர முபிரானைத் தும்—விண்டு தெரியாம லுன்னைத்தேடி, வெறியாலுறலியோர் கெதியுங் காணுங்—கொண்டல் குடைமேவும் நபியிறசூல், குருவா மவர்கள்தம் பொருட்டினுலே—துண்டு படுத்தாம லென்கிளையும், யானும் நினைச்சேரத்த துனைசெய் யாஹூ. (20)

அன்பு வைத்துன்மே லாசைக் கொண்டே, யடிமைத்தனஞ் செய்தே யருகிருந்து-துன்பந் தோன்றுமற் குணக்கந்தீர்த்தாற், றலங்கும் ஞானக்கண் கருணைகொண்டே-பின்பம் வைக்கவே யருள் பெருகு, மிளம்பிறை நாளும் பெருகுமாம்போல்-முன்பி லுபதேச மீந்தவெய்கை, முடுகப் பேரின்ப வெள்ளமாமே. (21)

உதிர மெலும்பு தோல் தசை நரம்பு, முதிக்கும் ரோமமூ மபயங்களு-மதுர மூளதாத்துப் கிபாதத்துமாக, வைத்த தத்துவந் தொண்ணூற்றாறும்-சீரந் தனில் வைத்தே யெனையமைத்தே, தரணிதனில் விட்ட தம்பிரானே-முதிரும் நபியுல்லா ஷபா அத்திலே, முடுக என்துஆகபூல் யாக்ரீப். (22)

ஆவின் பால்வரூந் தீன்தின்றபின், அன்பா லாசரித் துபசரித் தாற்-கோவுங் குருவான கடாட்சமதுங், குணங்கா திருக்கவே குண்டதுகாண்-நாவு மேல் மூலத் தாடுருவி, நாலா றுதலங் கடந் தப்பாற் போய்-மேவும் அறுஷிலே யாதி நாயன் விளம்பு மமிர் தத்தை யருள் யாஹூஹீம். (23)

தோகை மயில்வெளி யாடும்போது, தூவுங்கருவிந்தை முழுங்கு மது-மோகமுட னந்தி சமுகங்காத்து முறுதி லவர்தரு மதமுமுன்

முன்டு-போகஞ் செலுத்தாமற் றிருவொளிவு, பூத்துக் காய்த்துச் செங்கனி பழுத்தே-யேக மைதானி லிலங்குங்கனி, யெனக்கு முதவி செய்யா அல்லாஹூ. (24)

தில்லை வனமானும் புரவிமீதிற், திருமன் ராவுத்தன் மெது விலேறிச்—சொல்லுங் கலிமாவாங் கலினம்பூட்டித், துலங்கும் பாதையிலுற நடத்திப்-பொல்லாக் காபிறைக் கருவறுத்துப், புந்தி யொருமித்து ஈமான்கொண்டே—அல்லும் பகலற்ற மைதானிலே, யடியேன் றனைச்சேர அல்ஹம்துலில்லா. (25)

பிறந்த பிறைத்தாயை மறக்காமலே, பெருகும் நாள்தோறும் பதினாலிலே—சிறந்த மகிழ்ச்சியில் மறந்தசோம, னிர்ணயங் கெட்டுத் தேய்ந்து போகும்-துறந்து நந்திறை வெறுத்தசீஷன், துன்பம் தொடர்ந்துதான் குன்றிப்போவான்-சிறந்த குருவிட் டென்னைச் சேர்த்துச் சித்த மருளாம லருளல்லாஹூ. (26)

உன்னுள் நின்றதைநா னெட்டிப்பார்த்த, துறுதி யென்னுள் நீ யெட்டிப்பார்த்து—முன்னோன் முஹம்மதைத்தான் கண்டது, முத்துள் வித்து முடித்திறந்து—தன்னுட் பிரான்தாயை முடித் ததுவும், தாய்வீட்டு மச்சா னொளித்ததுவு—பொன்னடி நந்தி பொருட்காட்டினர், பூவா யிரத்தெட்டுப் பூவிதழில். (27)

வேதவுதிப்புப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 15-க்குத் திருக்கவிதை 336.

---

# பூரணப் படலம்.

தொங்கல்-வாகடராகம்.

பூரணத்தி னடியங்கே முடிகாணெங்கே, பூண்டுநின்ற நடு வெங்கே முப்பாழெங்கே-காரணத்தி னலவெங்கே வட்டஞ்சேர்ந்து, கருத்தைந்து மொன்றான தலந்தானெங்கே-வாரணத்தி லேறுதற்கு வசைந்த தெங்கே, வன்னிமலர் தனில்வண்டு முகந்ததெங்கே-தார ணியிலிதையறிந்தில் லாதபேர்கள், தாயிலாப் பிள்ளைகள் போற்ற யங்குவாரே. (1)

தயங்காம லென்மகனே சொல்கிறேன்கேள், தானான ஹூ வெழுத்தைக் கருணைகொண்டு-மயங்காமல் மனந்தனிலே வைத்து சேர்த்து, வாசியென்ற புரவிகடி வாளம்பூட்டிக்-கறங்காம லதிலே றிக் கமலத்துள்ளே, காரணத்திற் கணட பூரணமா தானாற்-பயமேது மில்லையப்பா காலன்வந்தாற், பயப்படுவானம் முயிரைப் பிடிக்க மாட்டான். (2)

மாட்டான்கா ணரணத்தி லல்லாசொன்னான், மனமல்லாலொன் றுமில்லைத் தனக்குள் நின்ற-காட்டாத காரணத்தி னுடம்பு பூத் துக், கனன் மூட்டிப் பாதாள முருவியெங்கும்-பூட்டாத நினைவுபூ ரணமதானாற், பூவுலகம் வானுலக முயிர்கள்யாவு-மாட்டுமப்பா செக் குவட்ட மதற்குள் ளெய்போ, லாயிரத்தெட் டிதழ்பூவி லடங்கும் ஹூக்கில் (3)

ஹூவ்வதனிற் பார்க்கச்சொன்ன குருவையையா, குண்டலிக் குட்போகநினை வதிற்புக்காமற்-சப்பான பாதையிற் சத்துருக் களாலே, தாயைவிட்ட கன்றுய்த்தட் டழிந்தேனப்பா-பவ்வபல கையையறுக்க வகைதான் சொல்லும், பதமாக என்மகனே வாசி வரும் பூவில்-மூவ்வாக்கால் ரண்டுமொரு நினைவிற்கட்டி, முத்தி தருங் கலிமாவி லீமான் கொள்ளே. (4)

கொள்ளடா அறிந்தீமான் கலிமாவிற்றான், கோமான்தான் படைத்தவுயி ரெல்லாந்தாங்கும்-விள்ளடா அதுவேனோதா னபிருந் து, வேதகலுமாவுரைக்கு மொழியைக் கேட்டு-கள்ளடா கல்புதனில் கானென்ற சத்தம், நாதம்வரு காரணத்தி னீமான்கொண்டே-யுள்ளடா எங்கும் பூரணமதான, வுண்மை முஹம்மதுபா லுத் தாங்கேளே. (5)

உத்தாரந் திருநபியுல் லாவுவந்தே, யுமிழ்நீர்வாய்க் குள்ளித்த வுபதேசந்தான்-பெற்றுல்நீ செய்பபங்க ளெல்லாம்போக்கும், பேத மில்லை யொருவருக்கும் பேசிடாதே-சித்தானதெல் லாமுனக்கு வரு குமப்பா, சிந்தைதனில் மாசுமறெல் லாமொதுங் கும்-கத்தாவினருள் கடாட்ச முனக்குண்டாகுங், காரணம தானவுப தேசமிதே. (6)

உபதேசக் தந்தீர்க ளெங்களுக்கிங், குண்மையுள்ள பீரேயான் செய்யுகின்ற-அபத்தங்களெல்லாம் போகுமருட் கடைக்கண் டிறந் தாலந்தோ, கவனத்தி லிருண்-கல்குல் டல்புதனில் விடியச்சொல் லும், தவஞ்செய்து பிறந்த ஷெய்லகைச் சகலசற் குருவாய்க்காணே.()

வேறு.

காண்பாயே யெக்மகனே கல்பல்லா தன்னை நோக்கி
உண்டுதலாப் நினைவுவைத்தே யொருமலர் தன்னில்வாசி
பேணியே ரண்டுமொன்ருய்ப் பிரியமா யுருக்கங் கொண்டாற்
ரேனுமே நபியுல்லாவைச் சோபனமாகக் காண்பாய். (8)

வேறு.

வாசியென்ற குதிரையின் பனிரெண்டுகால், வசமாக நடுக் காலைத் தழைந்துகட்டி-மூசிநின்ற புரவியதை முனையடக்கி, மூற்றிலா மலிபுகடி வாளம்பூட்டி-மாசியற்ற முதுகத்தின்மே லேறிக் கொண்டால், மகத்தான முஹம்மதுர் றசூல்முன்னேகும்-ஆசை மிகப் பெருகுமவரழகைக்கண்டா, லதற்குமே லுபதேச மில்லை யப்பா. (9)

வேறு.

ஓயாத இசுலாம்வாசி யுயர்மதி தனக்குள் நின்றே
தேயாத ஈமான்கொண்டு சிந்தையிற் கலக்காமற்ருற்
பாயாமற் கொம்புரண்டு பரிவுட னிணக்கமானு
லாயானு மவனேயாகு மல்லாவு மவனுமென்ருன். (10)

வேறு.

முன்னே தந்தைதன் விந்துமதங்கொண்டு, முடுகுமன்னை யுதாத்திலே-பின்னேரண்டைந்து திங்கள், பிரிசமுடன் முன்னுங் காத்தவா-யென்னையுன் னுபதேசந் தந்துகண், திறக்கவிட்டாய் பூவுலகிற்-றன்னைத்தான் சுஜூதறிந் தனைத்துந்-தந்தகலீ ஹத்தலீது தன்னைத்தான். (11)

வேறு.

பூதலங்களும் சுவனம் நரகமிம் புழுகு மமா ர்ம்பையும்
நாதனும் மறுவேஷாடு குருஷூம் மலைகடந்தியும் ராட்சதர் ஜின்களும்
ஓதுமனு மிருகங்களும் பறவை மூருமுயி ருடல் யாவுமே
வேதமறு சமயங்கள் கருணையும் மேவும் புகழுறும் யாறஹீம். (12)

வேறு.

சிந்தைவைத்து மனமுவந்தே யைந்து பஞ்ச பூதமுஞ், சிகாமைந்து பொருள்களைந்து புவனங் கடந்துபோய்ச்-சொந்தவைந் தெழுத்து முருவிச் சிங்குவங்கு மேலதாய்த், தோரணங் கடந்து

பத்தி ஞேசையிற் கடந்துபோய்-கந்தவாரி யேழுந்தாண்டிக் ககன
மண்ட பத்துளே காரணங் கடந்திரு ளகண்டமாம் வெளியிலே,
மாதுவான வல்லிமீதில் வந்துவிந்து பாய்ந்ததே. (13)

வேறு.

விந்தானது வந்தே விளைந்தன்னை யுதரத்தினிற்
பந்தாடுதல் போலே மலர் தன்னிற் பரிந்தங்கே
முந்தானமதாக முஹம்மதுதந் துபதேசம்
நந்தாபத மந்திபகலற்ற நலங்காணும். (14)

வேறு.

கூறுந் திகிர் ஜல்லியா லொரு சூறியா மொரு ஹறுபைத்
தேறுந் தினம் நவ்விராவினிற் றெளிவா மதையுண்டா
லூறுங் கருவுருவாம் நபுசொளிவா மெனவந்தார்
வீறும் மறைபுறுக்கானதில் வேதாம்பர்சொல் விதித்தார். (15)

பூரணப் படலம் முற்றிற்று

ஆகப் படலம் 16-க்குத் திருக்கவிதை 351.

## வேதப்புகழ்ச்சிப் படலம்.

விருத்தம்.

எந்தநேரமுந் தொழுதி றைஞ்சிடும் பெரிபோருக்கும்
விந்தையாகவே யுதவிசெய் தருளுமேலவனே
சொந்தமாகவே யடியேன் யான் மீகட்ட துஆவை
யுந்தன் சல்புகொண் டிரங்கி நீ யுதவிசெய் யாஹூ. (1)

முன்னர்நீ யுனக்குளிந்த முஹம்மது நபிபொருட்டா
லென்னைநீ கைவிடாதே யேகனே யழிவில்லானே
தன்னைமுன் சுஜூதுசெய்த தங்களோ டென்னையுஞ்சேர்த்துச்
சொன்னமுன் கலிமாச் சொல்லச் சுபுஹானல்லா வுதவிசெய்யாஹூ. (2)

அன்பொடு கருணை மேவு மருளதாங் கிருபைதந்து
துன்பமு மணுகாவண்ணந் துய்மையாந் தெளஹீதென்பா
லின்பமா யிரங்கிச் சிந்தை யிதமுடன் பெருகக்காட்சி
தம்புமா யெனக்கு நீதான் தரச்சகலமுஞ்செய்தயாஹூ. (3)

காதலா யுன்றன் கருத்தில்வைத் தடியனுக் கிரங்கி
நீதமா யறிக நின்றிருவடி நிச்சயந் தருவாயே
சேதமா யறிந்தறியாமர் செய்பவம் பொறுத்துநல்ல
வேதமே விபஷபாஅத் தருளுமே லவனேயாதி. (4)

பலபடைப் புயிர்கட் கெல்லாம் பகிர்ந்துநீ யிரணமிட்டுத்
தலைமைஜெய் தருளுங் கோனே தனக்கொரு நிகரில்லானே
நிலைமையி னீயே யெங்கும் நிட்சய ராஜவாழ்க்கை
குலத்தினி லுயர்ந்து குன்ருகக் குறத்தி லுயர்ந்தகோனே. (5)

பாதகஞ் செய்யுங் கன்னாஸ் பகைஞன்வந் தென்னையடாமற்
பேதகம் வாரா வண்ணம் பிரியமாய்நின் றிருவுளமீந்தே
ஆதர வானகபா னைதி லென்னைச் சேர்த்துப்
போதர வானயாற ருஹுடன் பொறுத்து யாஹூ. (6)

அந்தமு முடிவில்லானே யண்டமும் பிண்டமெங்கும்
விந்தையாய்ப் படைத்த கோவே மேற்றர மான்முத்தே
சொந்தமா யடியேன் றேடும் சுக்குனுக்குட் சுஜூதாய்வந்து
சிந்தையிற் சுஜூது செய்யத் திறமருள் தம்பிரானே. (7)

வசன மாருத ஐயூப் நபிமன மறக்கவிட்டு
நசலினு லடையும்போது நன்னயச் சரணம்போற்றி
அசனமொன் றருந்தா நாளி லருந்துயர் தீர்த்தகோவே
நிசமுடனுலகி லுன்னை நிகழ்வரோ நெறியுள்ளோர்கள். (8)

மருளற்ற நபியூ னூசை மகரவராய் தனிலிருத்தி
யருள்கடலெங்குஞ் சுற்றி வவனியிற் சேர்த்தகோவே
யிருளறத் துன்னை நோக்கி யிறைஞ்சுகண் மணியாய்நின்ற
பொருளதை யறிவார் நல்லோர் புகழ்வரே புகழ்ந்தோர் மேலோர். (9)

கழல்மிகும் நபியூசுபைக் கானிற்பாழ்ங்கிணற்றிற் றள்ளிச்
சளஞ்செய்து கல்லைத் தூக்கித் தமையன்மார் கிணற்றிற் றள்ளப்
பழமையி னுதியர்தப் பயஹூம்பர் தம்மைக்காத் தோனெவ்
றுளமதி லிருத்தியென்று முவந்தவர் சுவர்க்கத் தோரே. (10)

மவுத்தறிந்திட வேண்டுமென்று மலக்கல்மவுத் தழைத்துச் சொல்லக்
கவுத்துவ மிஃதென் ரோரா தவரிது ரீசுறாவைற
நவத்தொடும் வாங்கிச் சொர்க்க நகரினில் வைத்தகோனே
சிபத்தொடு முனைமறக்காக் கிருபைசெய் தருளுவாயே. (11)

நாகினன் பிருஊன் செய்யும் நடுகத்தால் நபிமூசாதங்
காமதி லசாவைப் பாம்பாய்க் காட்டவே படையை யெல்லாம்
நிரைநிரை யெடுத்துட் கொண்டு நிமிஷத்திற் சேனைமாள
வருமவர்க் குதவிசெய்த வல்லவா துணை செய்வாயே. (12)

வஞ்சனம் றாதுசெய்யும் வன்னியுன் பொருளதற்குட்
டுஞ்சிடா வண்ண மன்னுட் சுடுதழ லழலை யாற்றித்
தஞ்சமென் றிபுறாஹீம்நன் னபியினைக் காத்தோன் றன்னை
நெஞ்சினி லைந்து மொன்றாய் நினைப்பவர் சுவர்க்கத்தோரே. (13)

இருதலைப் பிறையில் லாநா ளிருளைவிட் டிறைஞ்சலாகி
வருந்தியே யிருக்கு மக்காள் மதியழைத் திருபிளப்பாய்ப்
பொருந்தியே யீமான்கொள்ளப் புகழ்முஹம்மது நபிக்குக்
கருமங்க ளுதவிசெய்த கல்புல்லா துணைச் செய்வாயே. (14)

தேனலர் கமழுஞ் சோதிச் சிறப்பிறை நுதலும் தைப்பிற்
பானுளிர் கதிர்கள் வீசும் பரிந்தெங்குந் தானந்தங்கு
மானுடன் பேச்சுரைத்த முஹம்மதர் பொருட்டினாலே
யினக தகற்றியென் னீமானைத் துணைச்செய் யாஹூ. (15)

அண்டமு மவனியெங்கு மருமறை யுயிர்கள் யாவுந்
தொண்டர்க ளிதயந் தன்னுற் சுகமுட னிருந்து வாழ்ந்து
விண்டுரைக் கெதிர்நின் றோதும் வேந்தராய் நபிபொருட்டா
லென்றுமுள் ளவனே யென் னீமான்றனைத் துணைசெய் யாஹூ. (16)

முன்னர்நீ முத்தாய் வைத்து முடுகவே நோக்கிப் பார்க்கத்
தன்னைத்தான் றஹ்மத்தான தாத்தொளிக் கடலில் வைத்தே
யுன்னைத்தான் ஸுஜூது செய்தங் குரிமையிற் றுணைநாலாக
அன்னமுஹம் மதுபொருட்டா லடியனுக் கிரங்கு யாஹூ. (17)

மன்னனே யுனது மறைக்கனி பழுத்த மண்ணுலகி
லென்னைநீ கைவிடாம லின்பொடு மென்று மேற்று
முன்னருள் குதறத்தாலார் முஹியித்தீன் பொருட்டினாலே
யின்னுமென் மேலிரங்கிக் கிருபைசெய் திடுவா யாஹூ. (18)

பெருமைதான் பலத்தைக் கொண்டுப் பேசலி பாத்திமாபாற்
றரும மாகிபநந் நபியுல்லா சமூகத்தி லிருந்தே
கருமமான நற்புலியதின் றோலைக் கக்கத்தினி லிழுத்தலி
யுருமையான முஹியித்தீன் பொருட்டெனக் குதவிசெய் யாஹூ. ()

அஞ்ச லாய்நபி மிகு ருஜூக் கேகு மந்நா
ளின்சொ லான்மறை யிறையவ னிசைத்திடும் வசனம்
தஞ்ச மானதொட்டியிற் சயனித்த தஸ்தக்கீர் வள்ளல்
வஞ்சி நீளொலி முஹியித்தீன் வரிசைதா யாஹூமே. (20)

வறுமையால் நசாறு கௌது மனையினிற் புகுந்து மிக்கச்
சிறுமையா னவனோர்கூசைத் திருடுதல் கண்டன னவ்வோர்ஞைன்
பிரியமாய்க் கையைப் பற்றிப் பிடித்தொலிப் பட்ட மீந்த [மேற்
தருமமாற் முஹியித்தீனின் தறஜாத் தருள்குவை யாறஹீமே. (21)

வேதப்புகழ்ச்சிப்படலம் முற்றிற்று.

ஆகப்படலம் 17க்குத் திருக்கவிதை 372.

# மூச்சுடர்ப் படலம்.

ஆசிரிய விருத்தம்.

சொல்லுந் திருவரையி லோர்மரவுபற்றி, அம்மய ஜூஸூ விளிற்றுய்யோன் மொழிந்த-அலம்தறக் கைபலொற பல்லாகு வெனும், ஆயத்ததின் பொருள் தனையாய்ந்து-நலந்தரு முசிலிமானவ ரனைத்தும், லாஇலாஹ இல்லல்லாஹு வெனும்-பலன்றரும் படிக்குப் பொருளினிற் சிறிது, பண்புட னெடுத் திசைத்திடுவாம். (1)

வேறு.

வெளியதெங்கும் நிறைந்திடவுயர்ந்தொரு விருட்சம்
தெளிவ தாகவே யுண்டாக்கி முக்கோணமாய்ச் சிறந்த
எழில்கொ ளுங்கனி மரத்தினில் முட்டினின் றெழுந்து
நெளியமுக் கோணிடைமுவ்வெளி கிடந்தநி னிறைந்தே. (2)

கனியில் ரண்டுமும் மூன்றிலும் மொன்பது கவராய்க்
குனிய நான்குமுக் கோணசந் திடக்கனி யடத்தின்
இனிய அம்மாறத் தகத்தின் முட்டமூக் கோணுள்
பனிப ருப்புள விதைரண்டு விதையொன்று பதரே. (3)

இந்த மாமச லைமஃ ஹுவினை யியம்பில்
அந்த மாகமுன் மொழிந்திடும் ஆலம்
சொந்தமாமர மென்றது தானுமுச் சுடராம்
கந்த மாங்கிளி தானுமூன் றாகிய ஹறுபே. (4)

றொன்று முப்பது மைக்கெனும் லெக்கமேயுடைய
தென்று கூறிய கருப்பொருள் மூன்றினி லிருந்து
துன்று மொன்பது ஹறுபொன் றாகிய சூட்சம்
கன்று லெக்கமும் நூறென நவின்றனர் நல்லோர். (5)

இலக்க மான நூற்று முப்பத் தாறுகுமே யெழுத்துப்
பிலக்கும் பனிரண் டாகுமென வுரைத்தனர் பெரியோர்
கலக்கும் லாஇலாஹ இல்லல்லாஹு லாங்கலிமாத்
துலக்கும் லெக்கமும் ஹறுபையும் வகைவகை சொல்லுவாம். (6)

லாமு முப்பது அலிபொன்று அலிபொன்றும் கக்கும்
லாமு முப்பது அலிபொன்று ஹேமையைந்தாய் நவின்றார்
லாமு முப்பது முன்னலி பின்னலி புண்டாம்
லாமு முப்பது அலிபொன்று ஹேமையைந்தாய் நடக்கும். (7)

வேறு.

தோன்று மீறாம் வெளி முஹம்மதுர், றசூலுல்லாஹி யென்று துடராய்-சன்றுமீரா றெழுத்துமுன் னெழுத்தே, யிருப்பது நாலுங்கொண்டிசைந்து-மீண்டுமோ னிசலாம் நிறைவாக வேண்டும் லாஇலாஹ-என்ற ஹறுபா றுக்கும் லெக்கம், அறுபத் தெட்டாமென வுரைத்தார். (8)

இல்லல்லாஹு வென்றுரைத்திடும் ஹறுபாறுக்கும், லெக்கம் அறுபத் தெட்டுச்-சொல்லலா முன்னூறெழுத்துக் கொண்டே, இசுலாந்தோன்றிய புறப்பறலாறும்-வெல்லலாம் பின்னூறெழுத்தும் ஆமந்துயில்லாஹி யாகப்பறலாறும்-நல்லாப மெனவுண்டாகித் தன்வஸீஹும் நவில்த் தசுபீஹுமாயிருக்கும். (9)

பன்னிரண்டெழுத்தை மூன்றதாய்ப் பிரித்துப்பாக்கில், முப்பங் கதனிலெக்கம்-துன்னிடும் அறுபத்திரண்டாகத், தோன்றும் ரண்டாம் பங்கினிலெக்கம்-முன்னிடு முப்பத்தேழு மூன்றும், பங்குடைய லெக்க முப்பத்தேழா-முன்னிதைக் கூட்டில் நூற்று முப்பத்தாறும், லெக்கமென்றுரைத்தனர் பெரியோர். (10)

நாடியே முப்பங் கிரண்டையுங்கூட்டில், லாஇலாஹ இல்லென்றெழுத்துக்-கூடிய பிற்பங்கானது, அல்லாஹுவென அறியவும் வேணும்-மூடியதாத்து ஸிபாத்துடன் அசுமா, மூன்றல்லால் இலாஹுல் பாத்திஎனென்னும்-சாடிய இலாஹுல் முத்தலக்கு மூன்றென் றுரைத்தனரே. (11)

உற்றுள்ள ஈமானுட னிசுலாமு, முரைத்த தௌஹீதென
மூன்றும்-முத்துடன் பச்சை பவளமு மூன்று, மொழிந்தவிரா
றெழுத்திலையும்-தத்துநாலாகப் பிரித்துப் பார்க்கில், முப்பங்கிற்
றரித்திடும் லெக்கமெண்ணான்காம்-பன்னிரண்டாம் பங்கினி லெக்க
மும், நபிலொன்பது வெனப்பெரியோர் பகர்ந்தார். (12)

மொழிந்திடு மூன்றும் பங்கொருலெக்கமு, முப்பத்தி ரண்
டென மொழிவார்-தெளிந்தநாலாம் பங்கினி லெக்கமு, நாலொன்ப
தென்றனர் சேரவேகூட்டி-வழியாயிய்ந்திடும் நூற்றுமுப்பத், தாறி
லெக்கமென்றதின் வழியாகும் தெளிந்திடா துரைப்பேன், மூமினான
வர் நிலைதரும் நல்வழிபெறவே. (13)

உறைஷீ அத்துமண் சபூர்நபி, தாஹூது அபூபக்க ராஞ்சி
பூரில்-அறியும் வாய்நாவு ஆலம்-இன்சானும் இல்முல் ஈக்கீன்
எழுதலிபு-திறைதரீக் கத்துப்புனல் தௌறூத்து நபிமூசா வும்று
மீக்காயீல், சுறுக்குமாலம் அஜ்மசானும் ஐனுல் எக்கீன் தரித்திடு
மெழுத்து ஹேயே. (14)

நன்னபி ஹக்கீக் கத்துக்காற்று இஞ்ஜீலாம், நபியும்ஈசா
வுடனுதுமான்-கண்ணி சுறூபில்நாசி ஆலமிதால், ஹக்குல் எக்கீன்
ஹாறூபதுமீம்-முன்னில்வரும் மஃரிபத்துநல் புறுக்கான், மூலமது
அலிபி சுறூயீல்-இன்செவிஆலம் அறுவாஹாக் கமாலுல், எக்கினை
மெழுத்துதாலே. (15)

இந்நமே றஹ்மதெனு மெழுத்ததினை, இசைந்திதொரு கோலங்
கொண்டெழுந்து-வந்திடு முஹம்மதெனும்பெயர், தம்மைவணங்குவ
தென நன்றாய் மதித்துச்-சிந்தையி லறிந்து வணங்குவததுவே,
சிறுசலாத்தெனற் சடத்திற்-சந்தவார்த் தன்னைத்தான் வணங்கு
வதே, தென்றனர் பக்கீறதின் மஃனை. (16)

பதிவுடன் முன்னமே சொல்லும், வித்தாவதுதான் பனுபக்கா
நபியிதுபாத்துக்-கதிமக்கி நாளும் நல்வழிகாட்டுங், காமிலாங் குருவி
டந் தனிற்போய்த்-துதிசெய்தவர் கைபிடித்து முரீதுக், துறை
தனில் நேசமாய்த் துணிந்து-மதியுட னிருந்தி லவர்சொல்லும்,
வழியில் மனக்கண் கண்டறியலா மாதே. (17)

குலங்கொருற் லாஇலாஹ இல்லல்லாஹு-வென, வருமுன்னூன்
கெழுத்தின்-னங்கொள மைந்தாய்ப் பிரித்துப் பார்க்கில், முப்பங்கில்
லாவென இருக்கும் ரண்டாம்-பங்கில் அங்கொளி இலாஹ வென்னு

மூன்றும் பங்கில் இல்லல்லாவென இருக்கும் நாங்காம்-பங்கில் அங்குள அல்லா வென்றிருக்கு, மைந்தாம் பங்கானது ஹூவெனலா மால். (18)

பூமியு"ஞ்சட் புனல்நிறம் வெண்மை, பொருங்கனல் நிறமது செகப்பு-கேமியில் வாய் கருநிறமவானம், நிறமது பச்சையாம் நிகழ்த்தில்-லாமியிற் பூமிகைக்குணம், நாலப்பினிலனலில் முக் குணமாம்-ஓமிசை வாய்புக் கிருகுணம், தானுக் கொருகுண மென்றுரைத் தனரே. (19)

முன்னமே கெந்தமப்பது ரசமா, முதிற்கனல் ரூபமும்வாய் வுபன்னுமே-பரிச மொண்டொளி சத்தம் பகுதாம், கெந்தமு முக்காம்-உன்னும்ாவது தண்ணீர், தமதுவா முமுங்கனல் ரூபமும் வெளியாம்-என்னுமேவாய்வுப் பரிசமாய், சடலமிரைந்திடுஞ் சத்த வஞ் செவியே. (20)

## தொங்கல்.

கண்டாருங் காணுஹவா வானதைக், காரண மான கமலத் துள்ளே-விண்டா னின்சானின் கோலத்திலே, வேதம் புறக்கானி ஞயத்தெல்லாமன்றூட்ட மான நபியிறசூல், மகிழ்ந்தே யவர்தங்கட் கிறக்கிவிட்ட-குன்றுதவன் சொன்னுன் குறுஆனிலே, குன்றும் கைறவும்மத்தின் னும்முனிலே. (21)

தந்தை தாலல்லா ஆதந்தம்மைச், சமைத்த னேகநாட் சென்ற பின்னர்-விந்தை தாத்துடன் சிபாத்துமாக, மேவுஞ் சிரசுக்குட் டானிறக்கி-முந்த அசுமாவு முலுவத்தான, மூட்டவெளி யொளிபிருளு மொன்றாய்-இந்த இன்சானி லல்லாசொன்னுன், இன்னல் லாகலா எஸ்தகுப்பி னும்முனிலே. (22)

பொதுவா னதிற்பூத்துக் கனிபழுத்துப், பொருளா னஃ தொன்று கலிமாமாரண்டிற்-சதுமா மறைபதினுறு இல்முஞ், சமைந்த வுயிர்றேயா வானதுவும்-மதுவாய் ஹலறத்து குதறத்தாக, வள்ளல் நபி தங்கட்காகவேதான்-இதுபாத்தாகவே அல்லா சொன்னுன், இலெஹி யுறத்தெனும் ஜுசுவுக்குள்ளே. (23)

ஒன்று மில்லாம லிருக்குப்போதி, லுரைக்கு மொருசு அத்தம் மலுக்குள்ளே-விண்ட அலிபுஹே மீமுதானும், விந்தையா னஃ தொரு நுக்த்தாகவே-கண்ட அலிபொரு வாவானது, காரணமான

வாஹிதியத்தாகப்-பண்டா னவனென்றும் பேரெடுத்துப், பகர்ந் தான் ஓகா னல்லாஹூ கபூறுர்றஹீம். (24)

எல்லா திக்றிலு மேற்றமாக, எல்லாப் புகழிலு முயர்த்திறாக-எல்லா தவாபிலும் வரிசையாக, எல்லா வுயிரிலும் நிரப்பமாகச்—சொல்லலேல் றஹமத்தும் துஆவும்நல்கத், துய்யமு ஹியத்தீன் ஹல்லா ஜென்னக்கல்லா வுறாஜூனு ஜமலானதிற், காதிறென்ற சொல்வர்க்குச் சொன்னான். (25)

முச்சுடர்ப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 18-க்குத் திவுக்கவிதை 397.

# முஷாஹிதாப் படலம்.

## தொங்கல்.

விரைவா யெனக்கில்மில் லாதிநாளில், வேஷ மாறியோர் சன்னாசி போற்-றெருவில் வரக்கண்டே ஊரிலுள்ளோர், தெறிகள் பேசித்தானோட்டி விட்டார்-அருமை யுடன்கண்டு சலாமுறைத்தே னப்போ முஹம்மதை யெங்கே யென்றார்-உரிமையுள நசீபில்லை யென்றே, யுமிழ்நீ ரென்வாயில் கிலுறுமிழ்ந்தார். (1)

உமிழ்ந்தார் வாயிலெற் குடனறிவு, மோசைப் பகுறுபோல் விரிந்துகல்புப்-நவநீதமான நபியுல்லாவும், நாட்டமா முஹியித்தீன் குதுபும் கெவுன முடன்வந்து வாய் திறந்து, கிருபை யுடனெனக் கமுதளித்தார் தவனமில்லாத மூஷாஹிதாத்தா, னன்று மொன் றுனதுவே. (2)

முன்ன ரொரு நாளில் நூஹறூம்நானும், முஷாஹி தாச் செய்யும் போதினிலே-அந்நோம் அப்துல் காதிறுவும், அருளும் கிலுறுநன்னபியும் வந்து-பன்னுனுனக்கருள் பலித்ததென்றும், பரிந்தென் வாயினில முதளித்தார்-கன்னசு போனான் கல்பை விட்டுக், கடல்போல் விரிந்தது கல்பெனக்கே. (3)

கல்புவிரிந்தது கடல்போலவே, கருணை நபியிறசூறுக்கண்டேன் அல்குல் மாயையை விட்டொழிந்தேன், அலிபுலா மீமும் ஆலம் இம்றூன்-குல்ஹூ வல்லாஹூ சூறத்தையும், கோமான் பாத்திஹா

வானதையும்-நல்குங் கலிமாவில் அல்லாஹுவை, நாடினேனொரு நாள் மறவேன். (4)

தோற்றும் அல்மீறுடன் தம்ஸீலையும், துதிக்கும் பிக்கு ஹுடன் பதினால் இல்மும்-ஏற்ற முளதபு சீறுனது, மிதமாம் ஹிதாயத்துக்கணக் குடனே-ஆற்றும் அபுஜத்து நஜூமுடனே, யாகப் பகினெட்டுப் பாஷையுடன்-சாற்றும் பற்பலவகை விபரந், தரித்தேன் கல்பிலே யிருத்திக் கொண்டேன். (5)

ஏற்றும் பறக்கத்தா லிதனையெல்லாம், இம்மை தனிற் சொல்லத் துணிந்து கொண்டேன்-போற்றும் பொன்னுனி மருதா முக்கும்-பொருந்தும் ஸதகத்துல் லாதமக்கும் ஆற்றும் பணிவிடை செய்து கொண்டே யல்லல் அலிபைமுன் னிருத்திக்கொண்டு-காற்றுக் கடல் போலே யெழுப்பிக்கொண்டு, கருணை நாயனை யோர் பிடியாய். (6)

சாற்று நீ யிந்தத் தௌஹீதிலுந், தனியோன் புராணத்தைக் குருனையத்தைப்-பார்த்துத்தான் கண்ணுமிகவும் பூத்துப், பயிர்ச் சையாகிய நினைவுண்டதாய்-மூர்த்தியாகிய அல்லா சொன்னான், முழுதும் பன்னிரண்டாயிரமாய்ச்-சாற்று நீ யிதைச் சாற்றினோர்க் தானே றஹுமத்த துண்டாகுமே. (7)

வெண்பா.

தனையறிய ஞானந் தான்படிப்போர்க் கெப்போதும்
வினையறுக்கும் நல்ல மெய்பொருளா—முனையறிய
வுற்றுறப் படித்து நித்த முத்தமத்தி னுற்றசித்தன்
மெத்த வெற்றி தத்தருளுமே. (8)

கலிவிருத்தம்.

கல்லு முருகு மரா வியபஞ்சிற் கனற்பொறித் தியதுபோ
லெல்லைக யறிந்தவர் வாயுவை யியங்கிடத் தேகமு மப்படியாம்
வல்லவனின்று முறைந்து விளைந்த மவுனச் சுழிமுனையிற்
சொல்லது சொல்லா வண்ண முருநிடத் தோத்திர மாய்விடுமே. (9)

ஆசிரிய விருத்தம்

தோத்திரமாம் பவளமொடு பளிங்குபோலே, துலங்கும் நீல மணிபோலே சுழிமுனைக்குட்—பாத்திமா யிருக்கும் பெரியோர்கட் காகப் பரமகுரு குருவாக வுலகில்வந்து—நேத்தியுடன் குபிரறுத்தே

யும்ம தோர்க்கு, நினைவுகலங்கா திருங்கனென்றே ஈன்றுத்-தேற் றிமான நிறைந்த இருபத்துநாலுஞ், சிவயோக ஞான மெனச் செப்பினரே. (10)

செப்பினரிந்தவகை ஷெய்குமார்க்குத், தேகமதி, லீராறு கலை தன்னிலே-மெய்புறலே பிருதிவியி லொன்றையாம், விரிவான அப்புதனி லொன்றேசாலாம்-செப்பமுடன் தெய்வுதனி லொன்ற தாகும், திறமான வாய்வுதனிற் காலதாகும்-ஒப்பமுடன் ஆகாச மறலேயாலுறா, வொன்றுமட்ட விருந்துகுது நிலையெப்பாரே. (11)

பாசப்பா பிருதிவிற் கவிழ்ந்தேயோடும், பரிவான அப்புதனில் வலத்தேயோடும்-சேசப்பா தெய்வுதனிரிலிடத்தேயோடும், திறமான வாயுதனில் நேரேயோடும்-ஓரப்பா அந்தரத்திய் மேலேயோடு, மொன்றேனுங் குறைவுபடா துற்றுநோக்கு-ஆரப்பா இந்நூலைப் பார்ப்பார் கேட்பா, ரறிவான மூமின்கட் கருள்செய்தோமே. (12)

அருள்செய்தோ மொன்றைக் கரூபக்கா ரணியணியாத்- மூஷா ஹிதாகி லவரைக்காணும்-பொருள்செய்தோ மொன்றே காலுமற தாகும், பூதலத்தில் முறுக்கபாவி லவரைக்காணும்-இருளற்ற வுருமாறு மொன்றுதன்னி, லியல்பாக இருதத்தி லவரைக் காணும்-மறுளற்ற முறுக்கபாவி லவியைக்காணு, மவுனமுற்ற ஆகாசம் பாத்திமாவே. (13)

பாத்திமா ஷெய்குசிந்தா மதாறுக்கீந்த, பரிவான வுபதேசம் பகரக்கேண்மோ-ஆத்துமா இந்தநிலை நிற்கும்வேளை, அவிபுனிசான ருள் நோக்கிப் பார்க்கும்போது-சீற்றமுடனெட்டு நாட் கழியவுற் றுற், திறமாகக் கழியாமற் கட்டிவிட்டாற்-காத்திருக்கும் இல்லல் லாஹு வின்னூறைக், காணலாம் கண்டொன்றாய்க் கூடலாமே. (14)

விருத்தம்.

பிருதிவிக் கோடும்போது பெலத்த இல்லல்லாஹுவென், றுறுதியாய் நூறுவட்ட முரைக்கபொன் னொளிபோற்றோற்றும், பொருதித் தண்ணீர்க் கோடும்போது பொருளலா நூறுவட்டம், அறுதியாயுரைத்து வந்தா லருட்பளிங்கைப்போற்றோற்றும். (15)

தெய்வதுக்கோடும்போது திருவொளி ஹுவல்லா வெற்றே,
ஆய்ந்தொரு நூறுவட்ட முறுக்கம்பூப் போலத் தோற்றுந்
தோய்வாய்வுக் கோடும்போது துலங்கிடே நிலவு தோற்றும்
சேய்வெளிக் கோடும்போது திருவொளி காணுந்தானே. (16)

வேறு.

செப்புறு ரிந்தநாலைத் தேசத் தோர்க்குச்
சிறப்பாக இராவிசிங்கள் நிற்கும் நிலை
மெய்ப்புறவே பிருசிவிபி லொன்ப தாகும்
விரிவான அப்பதனி லேழரை இயாம். (17)

செப்பமுடன் தேய்வுதனி லாறதாகும்
திறமான வாய்வுதனில் நாலரை இயாம்
ஒப்பமுட னுகாச மூன்றேபாகு
மொடுங்கு நிஜ பெற்றோர்க்கிங் குரைத்ததாமே. (18)

முஷாஹிதாப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 19க்குத் திருக்கவிதை 415.

## சரடிக் கொச்சகப் படலம்.

கொச்சகக் கண்ணிகள்.

பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீ மென்றோதித்
துசுமனைம் தூராக்கித் தூரத்துவ தெங்நாளோ. (1)

அல்ஹம்து லில்லாஹிறப்பில் ஆலமி னென்றோதிச்
சுல்ஹா யிருந்தே சுகம்பெறுவ தெந்நாளோ. (2)

அர்றஹ்மா னிர்றஹீ மதையனுதி னம்மோதி
ஷர்று நம்மில் கைறவனிற் சாட்டுவது மெந்நாளோ. (3)

மாலிக்கி யவுமித்தீனை மறக்காம லேயோதிக்
கூலிக்காசை வைக்காமல் ஹுப்புவைப்ப தெந்நாளோ. (4)

இய்யாக்க நஃபுது யிணையின்றி யோதிப்
பொய்யாம் பொறிவழியைப் போக்குவது மெந்நாளோ. (5)

நன்னயவ இய்யாக்க நஸ்தஹீ னென்றோதித்
தன்னைப்பறை வாக்கி நித்தந் தனும்பிறிப்ப தெந்நாளோ. (6)

இஹ்திநஸ்ஸி றாத்தல் முஸ்தகீ மென்றோதி
மகுதியாக வேயிருந்து மவுத்தாவ வெந்நாளோ. (7)

சிறாத்தல்ல தீனவுடன் அன்அம்த அலைஹிம்மிலைதக்
கறுமத்துள்ள பேர்களைப்போற் காட்சிபெற லெந்நாளோ. (8)

கொய்ரில்மகு ஹூபி அலைஹிம் குல்பா னதையோதிக்
கைருனவ ரிற்சேர்ந்து கரைசேர லெங்நாளோ. (9)

லல்லா ல்லீன் ஆமீனென் றெடுக்கமித னையோதிப்
பலன்கெட்ட பகைபருடன் பதைத்திருப்ப தெந்நாளோ. (10)

குல்ஹூ வல்லா ஹூ அஹதைக் குற்றமில்லா தேயோதி
அல்லும் பகலுமகி லமையும்நா ளெந்நாளோ. (11)

அல்லா ஹுஸ்ஸமதென் றனுதினமு மேயோதி
எல்லாத்தே வையுமவனென் றென்னுவது மெந்நாளோ. (12)

இன்னுமவன் லம்யலிதும் வலம்யூ லதுவென்ன
முன்னவன்றன் னடிமையென்று முறுதுவைப்ப தெந்நாளோ. (13)

பெண்ணாசை மண்ணாசைப் பொருந்தாச் செயல்களெல்லா
மெண்ணாசை யால்வந்ததை யிறைபொறுப்ப தெந்நாளோ. (14)

நன்மை தீமையெல்லாம் நாயன் பரமாணுவும்
இன்மைநபு சின்கோட்டைத் திருத்துநா ளெந்நாளோ. (15)

கன்னுச லைத்தான் கலையிலகப் பட்டதனு
னுன்னாசை யைநறந்தே னுதவிசெய்வ தெந்நாளோ. (16)

அடிமைக் கிணக்க மாண்டவனே நீயறிவாய்
மிடிமைவரா மற்காத்து மீட்டுவது மெந்நாளோ. (17)

உஜூதொன் றெனச்சொல்லி யுள்வணக்கந் தெரியாமல்
ஸூஜூதும் றுக்கூவுஞ்செய்து ஷூக்கூறுசெய்வ தெந்நாளோ. (18)

ஷூகூதுமூன்று வகையிற் றுய்யவனைத் தெரிசனித்துச்
சுக்கூனுக வேயிருந்து சுகம்பெறுவ தெந்நாளோ. (19)

கலிமாப் பொருளறிந்து காலிக்கைத் தெரிசனித்தே
யொலிமார் குணங்கள்கொண்டே யொசிலாவ தெந்நாளோ. (20)

எல்லாச் செயலினிது மிறையோனைத் தெரிசனித்துப்
பொல்லாக் குணத்தைவிட்டுப் பொருந்துவது மெந்நாளோ. (21)

ஏழுசிபத்து மிறையோ னுக்கென்று கண்டே
யேழைகளைப் போலிருப் பதுவு மெந்நாளோ. (22)

உள்ளமை யுடையோ னொருவனென்று தெரிசனித்துக்
கள்ளமையாய்க் காணுமற் காட்சிபெற லெந்நாளோ. (23)

அகமியத்திற் செய்கிறவ னவனென்று தெரிசனித்துப்
பகைமைத் தனத்தைவிட்டுப் பலன்பெறுவ தெந்நாளோ. (24)

குல்லும்றகு லொளியிலென்றுங் குதாயொளியி லென்றுமதி
லல்லும் பகலு மமையுநா ளெந்நாளோ. (25)

துனியாவி லேயிருந்து தோஷங்கள் செய்யாம
லனியாயம் வாராம லதஞ்செய்வ தெந்நாளோ. (29)

ஆலத்தி லவனையல்லா லவனன்றி வேறுமுண்டோ
கோலமவன் கோலமென்று குறிக்குநா ளெந்நாளோ. (27)

உஜூதை முதிப்பு முடையோனுக் கென்றுகண்டு
சஜூதில் ஷுக்கூறுசெய்து சுகம்பெறுவ தெந்நாளோ. (28)

இணையென்ற ஷிறுக்கதையு மெகிரியென் றவரிபத்து
மணையவொட் டாமற்காத்தே யருள்பெறுவ தெந்நாளோ. (29)

பாகில் மவுஜூதை மகுபூப் பதுவகையும்
நாபிசிவா கம்மாவில் நவிசெய்வ தெந்நாளோ. (30)

கல்க்குசிய லில்லையென்றுங் கல்குஹயாத் தில்லையென்றும்
கல்குத்தா னில்லையென்றுங் காணுநா ளெந்நாளோ. (31)

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணியெண்ணிப் பாராமற்
கண்ணாடிக் குள்ளொளிபோல் கண்டுநிற்ப தெந்நாளோ. (32)

வாசித்துக் காணாமல் வாய்விட்டுப் பேசாமற்
பூசித்துப் பேணாத பொருள்காண்ப தெந்நாளோ. (33)

கடத்துகின்ற தோணிதன்னைக் கழைகுற்றி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெந்நாளோ. (34)

அத்த னிருப்பிடத்தை யாராய்ந்து பாராமற்
செத்த சவம்போலே திரிவதினி யெந்நாளோ. (35)

ஆதிக்கம் பலர்சொல் லகமியத்தின் சொற்படிக்குச்
சாதிவரம் பில்லாமற் சஞ்சரிப்ப தெந்நாளோ. (36)

நின்றநிலை பாராமல் நினைவிலொன்றுஞ் சாராமற்
சென்றநிலை முத்தியென்று தெரிந்தறிவ தெந்நாளோ. (37)

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
நினைவையொரு அம்பாக்கி நினைவேவ லெந்நாளோ. (38)

பொல்லாத காயமிதைப் போட்டு விட்டு முன்னே தான்
கல்லாவின் பால் கறக்கக் கற்பதினி யென்நாளோ (39)

ஆங்காரம் மும்மடக்கி ஐம்புலனைத் தானடக்கித்
தூங்காத தூக்கம் வந்து சுகம்பெறுவ தென்நாளோ. (40)

சேய் போலே வேநடந்து செவிடூமை போற்றெரிந்து
பேய்போல் வேதிரிந்து பெலன்பெறுவ தென்நாளோ. (41)

வீட்டிடத்தி லேபாய்ந்து வெளியில் வருவார் போலக்
கூட்டை விட்டுப் பாய்ந்து குறிப்பறிவ தென்நாளோ. (42)

ஒழிந்த கருத்துலைத்தே யுள்ளொளும்பும் வெள்ளொளும் பாய்க்
கழிந்த பிணம்போல கண்டிருப்ப தென்நாளோ. (43)

பல்லா யிரங்கோடிப் பாரப் படைப்பு மவ
னல்லாது வேறிலையென் றறிவனிதி யென்நாளோ. (44)

கூட்டி லடைப்பட்ட குழவியுருப் பட்டது போற்
பாட்டி லடைப்பட் பபனறிவ தென்நாளோ. (45)

எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே
வல்லானைக் கண்டு மகிழ்ந்திருப்ப தென்நாளோ. (46)

சொல்லாற் பொருளாற் றுய்பவறி வாற்கணக்கால்
வெல்லாம லுன்னை விரும்பி நிற்ப தென்நாளோ. (47)

மல்லான போரும் விளையாட்டு மானமயக்க
மெல்லாந் தவிர்ந்தே யிறைஞ்சுவது மென்நாளோ. (48)

கல்லா வறிவுதன்னைக் கற்றுணர்ந்து கற்பனைக்குள்
ளில்லாது நேர்மையினால் நினைப்பதுவு மென்நாளோ. (49)

பல்லுயிரு மேபடைத்துப் பரவெளியி லிவைபுடனே
சொல்லும் பொருளாற் சுகூறுசெய்வ தென்நாளோ. (50)

வல்லமையால் வானும் வாழுமைம் பூதம்மனைத்து
மெல்லையிலுண் டாகுமுன்னே யெதிரேற்ப தென்நாளோ. (51)

காற்றை யடைத்திருங் காயமதி லுன்னொளியைப்
பார்த்து மகிழ்ந்து பாவது மென்நாளோ. (52)

வைத்தபொரு டன்னை வகையறிந்து விபரமதாய்
எத்த எருதுதன்னை யெழுப்புவது மென்நாளோ. (53)

உன்றனொளியி லுருண்டு திரண்டார் மணியை
யென்றனித யாசனத்தி லேர்ப்பதுவு மென்னாளோ. (54)

மூந்தமுக் கூரிருளில் மூன்றுமொன்றாய்த் தானிருந்த
விந்தையாம் வஸ்ததனை விரும்புவது மென்னாளோ. (55)

நாதாந்த வொளியதனில் நந்திரூப மாயெழுந்த
பாதார விந்தமதைப் பணிவதுவு மென்னாளோ. (56)

ஆதம் குகையதனி டலங்கி நின்ற அட்சரத்தை
வேத முடிவுதனி விளங்குவது மென்னாளோ. (57)

பஞ்ச புலன்கள் செய்யும் பலதொழிலு மோர்தொழிலாய்
நெஞ்சகத்தில் நின்று நிரம்புவது மென்னாளோ. (58)

வஞ்சர் தனையறுத்து வான்பொருளைக் கண்டிறைஞ்சி
யஞ்சிலொன்றா டேயிணங்கி யாள்வதுவு மென்னாளோ. (59)

மிஞ்சு குபிரறவே மெஞ்ஞானத் தின்னளவாம்
கஞ்சமலர்ப் பதத்தைக் காண்பதுவு மென்னாளோ. (60)

பார்க்கப் பலவிதமாய்ப் பலவண்ண மாய்ச்சமைந்து
மூர்க்கமா மொளிவுதனை முத்திசெய்வ தென்னாளோ. (61)

நாற்றிசையு மொன்றாய் நடம் புரிந்து நன்றாக
மேற்றிசையில் வந்து வீற்றிருப்ப தென்னாளோ. (62)

செங்கமலத் துள்ளுறைந்த சித்ததனைப் பத்தியதாய்
வங்கம் போலயுருகி வணங்குவது மென்னாளோ. (63)

பங்கு பங்காய்க் காய்ந்ததனைப் பலபிரிவா யாக்கிவைத்தே
எங்கும் நிரம்பொளிவா யேற்றிருப்ப தென்னாளோ. (64)

ஊனிலொளி வாய்த்தெளிவா யுட்கலந்த சோதியது
வானில்நிரம் பும்பொருளை வாழ்த்துவது மென்னாளோ. (65)

தேனின்பம் போற்கலந்து தித்திக்கும் வஸ்துவதைக்
கானில்மா னுங்கலைபோற் கலந்திருப்ப தென்னாளோ. (66)

பஞ்சரிபோற் பதறிநித்தம் பயந்துள மெலியாமற்
பஞ்சவர்ண மாமொளியைப் பார்த்திருப்ப தென்னாளோ. (67)

வஞ்சத்தை நீக்கி வான் பொருளை யென்றுமொரு
தஞ்சமெனக் கண்டிறைஞ்சித் தழுவுவது மென்னாளோ. (68)

ஆங்காரத் தத்துவத்தை யடக்கி யுபாயமதாய்த்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெந்நாளோ. (69)

ஓங்காரக் கம்பமதுக் குள்ளிருந்து கைகாட்டுங்
பாங்கிலெனைக் கைபிடித்துப் பலன்பெறுவ தெந்நாளோ. (70)

ஆறு தாங்கடந்தே யப்புறமாய்த் தற்பரத்தில்
நூறும் சுரூபமதை நோக்குநிற்ப தெந்நாளோ. (71)

உன்சிபத்தை யாரு முற்றிறுந்தும்-கற்றறியார்
வஞ்சகத்தை நீக்கு வாழ்வது மெந்நாளோ. (72)

அஹறியத் தும்முதலாய் ஆறுமக்கா மும்கடந்து
ஜெகதலத்தி லின்சாலொளி ஜெபிப்பதுவு மெந்நாளோ. (73)

பார்வை கேள்விவாசம் பற்றிநிற்குந் தொட்டறிவும்
நேர்சுவா சந்தனிலே நிலப்பிநிற்ப தெந்நாளோ. (74)

பூதமைந்து புலன்பொறியும் போக்கிப் பொருளதனை
வேதச் சுருதியுடன் விளங்கிநிற்ப தெந்நாளோ. (75)

பாதமுதற் சிரசளவும் பரிவா முறுப்புகளைக்
காதலியா மற்குருலைவக் காண்பதுவு மெந்நாளோ. (76)

ஆதி யனாதி யடங்கலுமொன் றாயெழுந்து
சோதி வடிதைக்கண்டு தொழுவதுவு மெந்நாளோ. (77)

ஈர்க்கம் பெட்டிதன்னி லேற்றிவைத்த தீபத்தைப்போல்
நீக்கமற்று நின்றதனை நிசமாக்க லெந்நாளோ. (78)

வாக்கால் மனத்தால் வல்லகா யத்ததனால்
நோக்காமற் காணுஞ்சுடரை நோக்குவது மெந்நாளோ. (79)

ஏழுசிபாத்து மிருளா மெழுசிபத்தும்
ஆளு மறுசிபத்து லடக்குவது மெந்நாளோ. (80)

ஆறிரண் டங்குலமு மடக்கி யொடுங்குமுன்னே
பேறுதந்தே யுன்னளவிற் பெலம்படுமா லெந்நாளோ. (81)

அறுநான்கி லோரெழுத்தை யகத்திற் பரிவாக்கிப்
பெறுபேறு பெற்றவர்பாற் பேணிநிற்ப தெந்நாளோ. (82)

உச்சிதனில் வைத்திருந்த வுட்பொருளை மெய்யாகப்
பச்சைமுத்துப் பவளமதாற் பரிவாக்க லெந்நாளோ. (83)

உச்சிக்குங் கீழா னுலாவும்புறுப் பட்சிதனை
நிச்சயக்கூட்டி லடைத்து நினைப்பதுவு மெந்நாளோ. (84)

தொண்ணூ றோடாறு தத்துவற் றொடாறிந்து
தண்ணூறைக் கல்புதனிற் றங்குவது மெந்நாளோ. (85)

மூந்நூற்றுப் பத்தாய் முழங்கிவிடு மிசுமாய்ந்து
முன்னூர்க் கடலதற்குள் மூழ்குவறு மெந்நாளோ. (86)

தொண்ணூற் றிரண்டாய்த் துலங்கும் இசுமதுதான்
தன்னுள்மூன் றைம்பதிலே தரித்திருப்ப தெந்நாளோ. (87)

ஆறுபத்தா றட்சரத்தி லடங்கிய சூட்சமதை
நூறிரண்டு பதினான்கில் நுவன்றறிவ தெந்நாளோ. (88)

வீறுகொண்ட வைவருந்தான் விளங்குதூப தீபமது
வேறுபட்டும் போகுமுன்னே விளங்கிநிற்ப தெந்நாளோ. (89)

நாலிரண்டு நாற்பதும் நடுவினா லிரண்டுமதிற்
பாலும் நெய்யும்போலே பரிந்துநிற்ப தெந்நாளோ. (90)

நாலோடு நாற்பதுவும் நாலிரண்டு மொன்றான
நாலிரண்டு நாலுமன்வலில் நன்றாவ தெந்நாளோ. (91)

எண்சா ணுடம்பதனை யெறித்தே யுனதருளே
இன்சாணுக் குள்ளிருந்தே யிறைஞ்சுவது மெந்நாளோ. (92)

அஞ்சான காய மழிந்து பனுவாகித்
துஞ்சாத சோதிபரு டலங்குவது மெந்நாளோ. (93)

வால சுரூபமதாம் வண்மையொடும் வந்துதித்த
கோல மென்னுட்காட்டிக் குறிப்பாத லெந்நாளோ. (94)

நீலநிற வண்டுவந்து நிலவுபிறை யைச்சார்ந்த
சீலம்போ லென்னில்வந்து தீனருந்த லெந்நாளோ. (95)

காலுமலைகைபிடித்துக் கட்டளையாம் நடுவணைச்செங்
கோலையென்னுட் காட்டிக் குணமாக்க லெந்நாளோ. (96)

பாலுந்தேனும் போலே பரிந்திரண்டு மொன்றாக
மேலத்தெரு வீதிதனில் வீற்றிருப்ப தெந்நாளோ. (97)

நூலும்பல கற்றுணர்ந்த நூலினின் மயங்காமல்
நாலுமென்னு ளாக்கி நடத்துவது மெந்நாளோ. (98)

ஏலும் பொழுததனி லிறைஞ்சியுனைக் கண்டு சித்தம்
பாலும் நீருங்கலந்த பரிசாவ தெந்நாளோ. (99)

மேலவினைத் தித்திப்பால் வெட்ட வெறும் நாளுரிற்
சூலமா முச்சுடருஞ் சூழ்ந்து கற்ப தெந்நாளோ. (100)

மாலாகி யென்னுளத்தில் மறங்கிப்புத்தி யற்றுநித்த
மேலாம் பரவெளியை வேண்டுவது மெந்நாளோ. (101)

சூலமாங் கருவதுதான் சுகமா யுடலாகிக்
காலுபனி ரண்டில் நின்று காண்பதுவு மெந்நாளோ. (102)

நாலு வழிதனிலே நலம்பெறவே மலரிபத்தில்
நாலு மகிழ்ந் தோட நல்குவது மெந்நாளோ. (103)

தோலுந் துருத்தியுவாய்த் தொல்லுலகி லாகாமல்
ஆலம்அற வாஹறு தனி லாகுவது மெந்நாளோ. (104)

சாலவுட லதுவாய்த் தலைதாடியும் நரைத்து
மாலாகும் பெண்ணாசை மயக்கறுப்ப தெந்நாளோ. (105)

பெண்ணாசை மண்ணாசை பொருளாசை மேவாமற்
றன்னாசை யாலுளைந்து சார்ந்திருப்ப தெந்நாளோ. (106)

உன்னாசை யென்னாசை யொன்றுப் பிணங்காம
லுன்னாசை தானுணர்த்தி யொடுங்குவது மெந்நாளோ. (107)

கன்னு சவன் கலைப்பாற் கலங்கியுளம் வாடாமற்
பெண்ணாசை யைபகற்றிப் பேணுவது மெந்நாளோ. (108)

வானு லொடுக்கமுதல் வல்லவன்றீ தாறுதன்னைக்
காணமற் போகாமற் காட்சிபெற லெந்நாளோ. (109)

வானுற் றடித்துடல முன்னடியைப் பாராமல்
வீணு யுழலாமல் வெளிகாண்ப தெந்நாளோ. (110)

காணுஞ் சொரூபமெல்லாங் கத்தன் மஹுஹறென்றே
பேணிஸு ஜூதுசெய்து பெலப்படுநா ளெந்நாளோ. (111)

தானய் அஹத்தியத்திற் றன்னுதத் தில்லமைத்த
மானர் முலையொளியில் மருவுநா ளெந்நாளோ. (112)

அம்மாறத் தெனும்நபுசை யடக்கியதி னுங்காரத்
துன்மார்க்கந் தூரத்தித் துலங்குநா ளெந்நாளோ. (113)

மிக்க லெவ்வா மாகபுசு மிகைக்கு முல்ஹி மாகபுசும்
ஒக்கமுத்ம இன்னுவி லொடுக்கும்நா ளெந்நாளோ. (114)

செக்குப்பேர் லைந்து திருக்கா யெழுமூச்சைச்
சிக்கென்று கண்டதிலே சேரும்நா ளெந்நாளோ. (115)

வாஜிபுல் உஜூதும் வகைமும்கின் முய்தனியும்
வாஜிபாம் சிபாத்ததிலே வணங்கும்நா ளெந்நாளோ. (116)

ஆசிக்குல் உஜூதாகி ஆரிபில் உஜூததின்பின்
வாஜிபுல் உஜூதாக வருத்தும்நா ளெந்நாளோ. (117)

இத்தறுத்தே யீமா னிடையாமல்சிர்றதிலே
முத்திபெற்ற முந்யலக்கில் மூங்கும்நா ளெந்நாளோ. (118)

வித்து முளையெழுந்து விரித்தகொப்பு முண்டாகிச்
சித்துத் தெளிவதனிற் சேரும்நா ளெந்நாளோ. (119)

தத்துவத்தைத் தானறுத்துத் தலமேழையுங் கடந்து
குற்றமற்ற தாத்ததனிற் கூடும்நா ளெந்நாளோ. (120)

வித்திலா மாமுதலோ மேவும்வித்துத் தான்முதலோ
புத்தியினுற் றெளித்திதனைப் புகலும்நா ளெந்நாளோ. (121)

பூவுங்கா யுங்கனியும் பொதிந்தவித்துத் தன்னில் நின்று
மேவுசித்தன் விளையாட்டை விளங்கும்நா ளெந்நாளோ. (122)

பூவினுறை வாசமது போலேயென் னுள்ள மதில்
ஹூலைவைக் குடியிருத்திக் கூடும்நா ளெந்நாளோ. (123)

வேதர் தனக்கடங்கா மெய்ப்பொருளை புள்ளமதில்
நீதமுட னேநிறுத்தி நிலைபடுநா ளெந்நாளோ. (124)

ஆரணத்தை யோதி யலையாம லேயுனது
பூரணத்தைக் கண்டு பொருந்தும்நா ளெந்நாளோ. (125)

மந்திரமாய் வேதமுமாய் வண்மையுமாய் ஞானமுமாய்த்
தந்திரமாய் நின்றதனைத் தழுவும்நா ளெந்நாளோ. (126)

புந்திதனில் நின்றிலங்கிப் பூவுலகும் வானுலகும்
விந்தையதா யாடுமதை மேவும்நா ளெந்நாளோ. (127)

ஷரீஅத்தும் ஹக்கீக்கத்துவும் சரீரமு முயிர்போலே
தரீக்கத்தாம் பஹறுதன்னைத் தாண்டும்நா ளெந்நாளோ. (128)

எந்தப் பொழுதிலுமே யிதமாக என்னுளத்தில்
விந்தையாம் சிர்றுதலை விளக்கும்நா ளெந்நாளோ. (129)

பன்னிரண் டாமெழுத்திற் பதிவாக்கு மூன்றெழுத்தை
யுன்னியுளத் திருத்தி யொடுங்குமா ளெந்நாளோ. (130)

முங்கவறி யாமூடன் முத்தெடுக்கப் போய்க்கடலிற்
றங்கிஹலாக் காகுமுன்னே தரிக்கும்நா ளெந்நாளோ. (131)

அஹதா யெழுந்துலகில் அஹமதாய் வந்துனையே
அகத்திற் றெளிந்திடவே யாக்கும்நா ளெந்நாளோ. (132)

ஏகாந்த மெய்ப்பொருளை யெப்பொழுதுங் கண்டுகொண்டே
ஆகங் குளிரவென் னுள் ளடங்கும்நா ளெந்நாளோ. (133)

மெய்யறுத்து மெய்யதனை வெளியாக்கி யென்னகத்துள்
ஐயமெலாம் போக்கியா ளாக்கும்நா ளெந்நாளோ. (134)

மானுர் மயக்கவலை வந்தணுகாமற் காத்துத்
தானக நின்று தவம்பெறுநா ளெந்நாளோ. (135)

அஞ்செழுத் தலிபுலாம் ஹேமீம்தா லானதிலே
பிஞ்செழுத்தைக் கல்புகொண்டு பெலப்படுமநா ளெந்நாளோ. (136)

அஞ்செழுத்துப் பஞ்சபூதம் அஞ்செழுத்தும் அல்லாஹு
நஞ்செழுத்துக் மகலமதில் நாடும்நா ளெந்நாளோ. (137)

ஹேமீம்ஜன் சீன்காபும் காபுஹே ஐ ஐன்சாதும்
காமில்முக் கம்மில்க்குருக் காட்டும்நா ளெந்நாளோ. (138)

வாசிபனி ரண்டதனில் வாரதுவும் போறதுவும்
வாசிமுனைச் சுழியி லுதிக்கும்நா ளெந்நாளோ. (139)

ராசியமா முன்னுளில் நானென்ற அட்சரந்தான்
றேசிபோற் றிரும்பவந்து தெளியும்நா ளெந்நாளோ. (140)

கூசாம லேகலிமா குதாயோது மம்மொழியைப்
பேசாமற் பேசிப் பிதற்றும்நா ளெந்நாளோ. (141)

நேசமாய் லாஅஹ இல்லாஹெஹனும் மொழியைப்
பேசாம லேபுரட்டிப் பிடிக்கும்நா ளெந்நாளோ. (142)

நேசந்தனில் நின்றிலங்கும் நிட்சயமாங் கலிமாவை
வாசிதனி லேபழக்கி வளர்க்கும்நா ளெந்நாளோ. (143)

லாஅனு இல்லாஅந்த நன்றிதரும் கலிமாவில்
லாஇலா ஹாவைநீக்கி நாடும்நா னென்னானோ. (144)

லாஇலாஹ இல்லல்லாஹு லாமலிபு காபுமல்லால்
லாஹறுபு பீக்காவில் லாக்கிடும்நா னென்னானோ. (145)

லாபா இலா இல் லல்லாஹெனு மொழியில்
லாமவுஜூ தில்லல்லாவை நாடும்நா னென்னானோ. (146)

இசாறத் தலிபுலாமீம் இலா அஹதிய் பத்தருமாய்
நிசானியாம் அலிபுலாமீம் நிரம்பும்நா னென்னானோ. (147)

பிசாறத்து காஹறுபு குவியத்திலே தானுசி
புசாரத்து நின்றதிலே யொடுங்கும்நா னென்னானோ. (148)

மந்திரமாங் கலிமாவை மறக்காம லேயெனது
சிந்தைதனில் வைக்கவருள் செய்யும்நா னென்னானோ. (149)

தன்சீஹும் தஸ்பீஹும் தன்சிகு மஹுலதுவும்
இன்சானில் நின்றே யிலங்கும்நா னென்னானோ. (150)

வாசக்க மிதுலிவைய் புன்னென்ற சொல்லதனில்
லாசக் கிரண்டுமொன்றாய் நாடும்நா னென்னானோ. (151)

மின்னொளிருங் காபதுக்கு மேவுமஃனா விடுத்துத்
தன்னொளியிற் றசபீஹைத் தரிக்கும்நா னென்னானோ. (152)

காபதுதான் சாயிதாக் கலந்திருக்கும் வேளையிலே
மாபீஹி தசபீஹாய் வணங்கும்நா னென்னானோ. (153)

ஒருவசமீ வுல்பசிறென் றோதுகின்ற வுண்மைதனிற்
பருமாய்த் தருவீலைப் பகரும்நா னென்னானோ. (154)

ஒருவச மீவுல்பசி ரொளிருகின்ற பார்வைகேள்வி
லெகுவாக வந்தே லெபிக்கும்நா னென்னானோ. (155)

ஒருபாகம் தன்சீஹு மொருபாகந் தஸ்பீஹும்
இருபாகம் ரண்டுமொன்றா யிருக்கும்நா னென்னானோ. (156)

குல்லுன்லெகுக் கானித்தூன் என்னுங் குணமானசொல்லில்
அல்லும் பகலு மமையும்நா னென்னானோ. (157)

வாசி பனிரண்டும் வகையா யொடுங்குமதில்
நேசமதி லேபருனே நிறுத்தும்நா னென்னானோ. (158)

பேசியே சொன்னதெல்லாம் பிசகாமற் றுணர்ந்து
நாசிக்குமேல் நின்றருளை நல்கும்நா ளெந்நாளோ. (159)

நானென்ப திற்பார்க்கில் நானென்ப தைக்காணேன்
தானென்ப திற்கூடித் ததும்பும்நா ளெந்நாளோ. (160)

கூடுங் குடிபதியுங் குல்லுமிவன் தானென
தேனென் பதையருந்தித் தெவிட்டும்நா ளெந்நாளோ. (161)

அல்ஹம்து லில்லாஹி யுமைநான் புகழுகிறேன்
அல்பசலாத் தின்வசலா மாலநபி மேற் சொரிவாய். (162)

நாலிகாலி பத்துடனே நல்லஅசு ஹாபிகள் மேல்
ஆல்க ளடங்கலின்மே லவன் பொருத்த மாயிருப்பான். (163)

ஈரடிக்கோச்சகப்படலம் முற்றிற்று.

ஆ படலம் 20-க்குத் திருக்கவிதை 578.

---

# இன்சான் படலம்.

## தொங்கல்.

இந்த இன்சானி லிருக்கும்நாளி, லிசைந்த கால்கைமே லுறுப்பானதும்—வந்த வொன்பது வாசல்களும், வசந்த தோல் ரோமம் நரம்புகளும்—தந்தத் தசைரத்த மென்புமூளை, தகுத்து ஓங்கிலஹில் மசிருனதும்—மூர்த்த தாத்தாகிச் சிபாத்தானது, முடுக அசுமாமுல்லு கொத்தானதும். (1)

ஆகும் அவ்வலு மாகிறது, மடுக்க ஒல்லாகிர் ஒலபாத்தினும்—ஏரும் பனுபக்கா ஹயாத்துமற்று, மிசைந்த நபியிது யாத்தானதும்-சாமுன் செத்துத்தா னேபிழைத்த, சாகா முஷாயிதா முருக்க பாவும்-போக முடனுறாஜ் றசூலானதும், பொருந்துந் தன்சிஹாம் தசபீஹதும். (2)

சொல்லும் திக்குறைந்து மூண்டானதும், தொகுத்துப் பனிரண்டு கலிபானதும்—வெல்லும் பதினெட்டுப் பங்கானதும், விரித்த ஹறுபுமூன் றுனதும்-அல்லிலெழுத் தைந்தா யிருந்ததுவு, மதின்மே லிலக்கமே ழானதும்-ஒல்லு மொளியொன்ப தானதுவு, மொழென்றும் பனிரண்டு பீமானதும். (3)

மீமா னதுஹேமீ மானதுவும், விரித்ததால் றேஹீன் வாவான தும்-ஈமான் லாமலி பானதுவு, மிசைந்த ஹேஸேறா ஹ—ள்ளான தும், கோமா னிசுலாமைங் தாறுனதுங், கொம்போ ரெழுப்த்தி ரண்டானதும்-சீமா னபியும்மத் தறியவேண்டித், திறமாய்ச் சயக் கூனில் அல்லா சொன்னான். (4)

கலிமாவில் ஹறு மானதுவும், கசடற்ற ஹலா லானதுவும்—சலியா அம்மாறத் லெவ்வாமத்துச், சார்ந்த முல்ஹிமத் முத்ம இன்னத்—மெலியா முத்தலக் கானதிலே, மேவீ நாசூத்து மலக் கூத்துவும்—பொலிவாம் ஜபறாத்து மலக்கூத்துவும், பொருந்தும் காகூத்பாகூத்து ஜெம்கும். (5)

ஷறுத்தெட்டுச் சுன்னத் பனிரண்டதும், சார்ந்த பறுலிரு பத்துநாலும்-மறுத்தும் கிபாத்துப் பறுலாப்தும், வாழு முஸ்தஹப் தொண்ணூற் றொன்பதும்—பறுலாவை யெண்ண மைப்பத் தோன்றும், பரிந்த வாஜிப்பறுல் பத்துநாலும்—பொறுக்கும் பதினறு சிபாத்தானதும், பொருந்து மவன் சிபாத்தாறுனதும். (6)

அடங்காத இல்முல் எக்கீனனதும், அறியும்படி ஐனுல் எக்கீனனதும்-இடங்காணும் ஹக்குல் எக்கீனனதும், மிசைந்த கமாலும் எக்கீனனதும் மடங்கா ஆலங் கபீறுனதும், வசந்த ஆலம் சமீறுனதும்-தடங்கில்லா ஆலம் பக்கீறுனதும், சமைந்தே இன்சானாய் வளர்ந்ததுவும். (7)

திருந்தும் ஷீதறத்துல் முந்தஹாவும், திறக்கு மக்கான் மகு மூதாவும்-பொருந்தும் காபக்கௌ சௌவதுனை, புகழாம் வாசிலா சுல்த்தா னசீறு-அருந்தும் ஹலறத்து மஹுவானதை, யருந்திரு ஷீமானிலே யிலாகும்-மருந்திங் கிஃதென்று வள்ளல் தாமும், வாகா யெடுத்துத்தானோதினரே. (8)

நிலேயா மந்தஹே மீமானதும், நினைந்த தாஹாஏ சீனனதும்-தொலேயாக் காபுஹே ஏஜன்சாதாய்த், துலங்கும் பிசுமில் லகுல மாக்கி-அலேயா அஹமதாய் அஹதியத்தா, யதிக வஹதுவா றிதியத்தாகி-நிலேயா காபுறா னிரண்டுக்குள்ளே, நிரப்பமானது தானருமே. (9)

இதுவெல்லா முள்ள கலிமாவிலே, யேவலெடுத்துத்தான் வில கல் நீக்கிப்-புதுமையாகவே மாள்வர் மீள்வார் பூண்ட சித்தெல்லா

மவர்க்குவரும்-முதுமை இளமையும் சாதிக்கவு, முன்பின் முடிந்து தந்தானறிவார்-பொதுமை யானஜன் காமிலாக்கிற், புந்திக் கலக்க மும் பயமுமில்லை, (10)

பயமில்லாமலே பண்டுமின்றும், படைத்துமழிக்கவு, மவனு னது-மயமாம் திசையெட்டுக் கோணமீரேழ், வான்மேல் நடக்குங் காரணங்க ளெல்லாம்-தபவான சிர்று தானுனபின், தனக்கு யா தொரு இணையுமில்லை-நயமாம் கமாலியத் தாக்கிக்கொண்டால், நாமாம் காலிரு முஹம்மதிய்யா. (11)

. அல்லா சொன்னதை யறியவேண்டி, யலியா ருரைசெய்த கித்தாபானதிற்-சொல்லா லறிந்துதான் ஹாலிருக்கித் தொண்டன் றாஹுதான் துலக்கச் சொன்னேன்-முல்லா வுலமாக்க ளாலீம்களு, மூமின் முஸ்லிம்கள் முக்கம்மி லோரும்-பில்லாற் சொன்னதை யறிந்துபார்த்துப், பிழைக ளுண்டானுற் றீர்க்கவேணும். (12)

பிழைகள் தீர்த்தோர்கள் நாமவாரம், பிரியா நாமவ ராகு மென்ன முளைய முன்வித்தி லிருந்தகோல, முன் அல் ஹாமூல்காக் கோவுக்காபாய், விளைவா யிருந்ததும் வளர்ந்ததுபின்னுள், விதி யாங் கலிமாவி லீமான்கொண்டு-கிளையா மவர்நாமும் வேறில்லாமற், கிருபைப் பெரியவன்கழல் சேரலாம். (13)

தூசி முளையிலே நின்றதுபோற், துய்ய நுக்தாவில் முகாசி பாவில்-மாசி மறுவில்லா மனுஹறிலே, மருட்டுந் துன்யாவை வெருட்டி விட்டு மூச்சும் பேச்சிமற் றுணவுமற்று, மும்றனு வுஜூதந் தானதிலே-காசி முஹம்மது முஹியித்தீனுங். கலந்தர் கலிறம் வந்தபிர்த மீவார். (14)

குன்துக் கன்சுல்சுகு பூவிற்பூண்டு, குன்னென் றெழுந்துகுன் பயக்கூனுண-முன்பின் வேறிணை-யில்லாமலே, முந்லக் கானநல் மகுஷுக்கிலே-உன்னு முன்னறக் காலமுமில்மு, முயர்ந்த ஹக்கா யிக்கு பகுறுக்குள்ளே-துன்னும் அல்லைஹயுல்க் கையூமான, துலங் கும் பார்வையு மிடைவிடாது. (15)

அதுனுன் கிளைவந்த முஹம்மதுவே, அல்லாசலாம் சொன் னுன் ஜிபுரீல் வந்தே-பொதுவான தோப்பின் கனிகொணர்ந்தே, பொருள் முந்நூற்றுபதின் மூன்றுவகை-இதமாக வறிந் தருந்த வேண்டி, யிறையோன் மகிழ்ந்துமக் கிறக்கிவிட்டான்-அதபா யிதை யருந் தருந்தாதவர், அல்லா நல்லும்மத் தல்லவென்றுன். (16)

முற்றாற்றுப்பதின் மூன்றுவகை, முத்லக் காணகத் கலிமா விலே தன்னூனுகவே முன்பித் சொன்ன, தானும் செயலெல்லாங் காமிலாகப்-பன்னு முற்றாற்றுப் பதின்மூன்றையும், பழுங்கனி தின்றூற் பசிதீர்ந்திடும்-முன்னு முதலவன் சொன்னு னென்றே, யுரைத்துச் சிபுக்யில் சுவனஞ் சேர்ந்தார். (17)

அறியாதவர்களு மறியமாட்டார், அறிந்த பெரியோர்கள் விள் வார் சொல்லாற்-செறியாத் தயிரினில் நெய்வருமோ, சேர்ந்த வுறையாதிற் சேராவிட்டார்-பிரியா இணக்கத்திற் பிணங்கில்லாட் டாத், பிரியாதிருக்கலா மேலுமேலும்-குறியானது மட்டும் வேலை செய்தாத், கூலி சொன்னதை வாங்கலாமே. (18)

வடிவை யறியாமல் நூற்றூண்டுநாள், வணக்கமறியாத வணக்க மதித்-திடிபாடாகவே யரைநாழிகை, பிரிய வணக்கத்தில் வாரா தென்ன மடிவாய் ரசவாதம் பொடங்கள்போட்டு, மாண்டு போனவர். கோடிகோடி நெடியோன் ஹலறத்தில் மாறுமலே, நினைவாயிருப்பது நினைவாகுமே. (19)

ஷரீஅத்தானதில்லா வொன்றைத், தரிப்பாம் தரீக்கத்திலறிய வேண்டித்-சுருக்கு ளிருக்கின்ற ஹக்கீகத்திலே, தரிதமுடன் கண்டு பேசிக்கொண்டால்-அரிச மகன்றுபோய் மஹரிபத்தி, லங்கொன்று மில்லை யானவிதைத்—தரிக்கு முதலவன் சொன்னது பார்தாஹூ மாஅன்வல் ஞவதிலே. (20)

கூவும் ஹேயுமொன் றுய்க் கலந்து, குறித்த தலங்கொண்டு பேசிக்கொண்டால்-ஹேயா மியகம்ப மேலேறியே, கிளர்ந்த நாட் டுக்குட் கூர் சமைந்து-பூவாம் நிறைந் தெங்கும் பூச்சொரிந்து, புகுந்து மேற்றுண்டிப்பூரணமாம்-மூவா னதுவட்டச் சுழிக்குள் ளாடு, மும்மலக்கடக் தப்புறமே! (21)

மண்ணூர் தண்ணீரும் பதினெருகால், மருவும் வாய்வில் முக்காலுங்கூடி-அனலி லொருகாலு வாயவிற்காலும், ஆகப்பதி னுறும் பூரணத்திலுண்ணும் வெளிநாறில் நாலுகாலு, மொட்டி வினையாயுருக்கங் கொண்டா-லென்றும் நரைதிரையில்லை யென்றே இத்துறலீருறத்தி விலை யோதினுன், (22)

சீமான் தீனூடே மீமும்ஐனுஞ், சிறந்த சபருடன் சக்கூனை யின்-ஆமா மதுக்கப்பால் ஹறுபதோன்றுர், லைடயா லம்மது றுச்

தாரண்டு-தாமா மதுக்குல்ளே ஹறுபிரண்டிற், றுனுமொரு ஹறு
புக்கொரு நுகத்து-ஈமாம் வாவுக்குள் ளறியவேண்டி, ஈவின்றுன்
காபுவல் குறுஆனிலே (23)

ஈனுப் பெருங்காட்சி கமத்துள்ளே, காரண மானகண் டிதர்
தால்-வானு லானது பிராணமானுல், வளர்ந்து பூரணம் நிர்க்கள
மாய்த்-தோனும் ஈபிபாதம் சிரசமுதற், றுன்பஇன்பமு மற்றவுர்
தான்-ஆனுல் அலாஇன்ன அல்லா சொன்னுன், அலன்ன சறகு
லெக்க குறத்தில். (24)

தாவுசாலவே பெக்கின் மாத்திற்றுனே, துன்ன நாலோடிருக்கும்
போது-லாகூ வாவென்று மணிமந்திரம், வரிசைக் கலிமாவைத்
தான் பயிற்றி-ஈாகூ மைதானில் நடுக்கிணற்லில், நாலு முங்கித் தண்
ணீருந்த-யாகூ யாறப்பில் ஆலமீன் சொன்னுன், யாஜயுஹல்மு
சம்பிலுக்கூவென்றே. (25)

வெண்ணெய் மைதுவான போற்கலிமா, விளைந்த அடிமுடி நடு
விற்குள்ளே-கண்ணு டிக்குஇனே யூடுருவிக், காமி லானதிற் காமி
வாக்கி மன்னன் கல்க்கிலே கடிவாளம்பூட்டி, மருட்டு மனமதை
யொன்று சேர்த்தே-எண்ணெய் திரிநெய்யிற் பற்றிக்கொண்டால்,
இலாஹூல் ஹக்கென்று பேர் சொல்லலாம். (26)

இன்சான்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 21-க்குத் திருக்கவிதை 604

## நுஜூம் படலம்.

அறுசீர்க் கழிலடி ஆசிரிய விருத்தம்.

அஹதா யிருந்து அலிபொன்றுதா, னருளும் பேய்ரண்டா
யெழுந்தே-உஹதாங் தலைஜீ மூன்றாக, வுவந்ததால் நாலதி னடுவே,
நுக்கத்தா காட்டம் சுக்கூனுக்குள்ளே, நடக்கும் ஹேமயைந்தா
யெழுந்து, பகுத்தாயிருந்த வாறுய்ப் பாசம்ஸேயே மானதுவே. (1)

புயமாம் ஹேயெட்டாக நின்றுபொருந்து மொழிதோ யொன்பதென
நயமாம் ஏயிரைந்தாக நடக்கும் காபு மிருபதென்று
மயமா முழங்கால் லாமுப்பது வருமீமூளை நாற்பதுடன்
பயனு மக்காம் நூனைம் பதினிற் பரிவாம் பெரிய முறைத்ததே. (2)

பரிவாம் சினறுப தென்று பாரஜுன தொழுபதினிற்
கருவாய் நடத்தும் பேயென்பது காதம் சாது தொண்ணூறு
மருவாங் காப்நூறு றேபிருநூற் மயஷீ மும்நூற்றே நானூறு
குருவா இயநல் லோர்கள் முன்னர் கூறும் நூற்க ளுரைக்கிறதே. (3)

தபூறத்தே யைக் நூறுடனே தசூல்தா கேயு மறுநூறும்
தபூறத் தாலேழ் நூறதுவாம் சாரும் லாதஃ தெண்ணூறும்
இபது லோயொன் பதுநூறு கேளும் படியப் ஜதுலக்கம்
கொபூரு மாதி நாயகன்றுன் கொய்து மதின்பெ ராயிரமே. (4)

வேறு.

அறிவினு லெட்டும்ரண்டு மங்கவர் வாராவொன்றும்
குறியினு லாறும் நாலுங் கூடுமேற் பொருளுமாகும்
விரிவினு லேழு மூன்றும் விசகளங் கேட்க வேண்டும்
சரியினு லொன்ற தாகிற் றாமுட னிருப்பாரங்கே. (5)

அங்ஙனே யைந்த தாகி யங்கவர் வழியின் மீதே
பொங்குசே ரொம்பதாகிற் போனவ ரகத்தில் மீளார்
பங்கினி லொலிகள் மாலிம் பண்புட னிந்த நூலை
இங்கித மாகச் சொன்னு ரிதுநல்ல நுஜூமே யென்றும். (6)

நுஜூமப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 22-க்குத் திருக்கவிதை 610.

---

## ஹதீது குதுசிப் படலம்.

அறுசீர்க்கழலடி யாசிரிய விருத்தம்.

ஹதீ துடன் குதுசியான காவிய கித்தாபு தன்னை
மதியுட னெடுத்தி யானு மார்க்கத்தில் விளம்பி நன்றாய்
அதிகமா யாய்ந்து புத்தி யறிவுட னெடுத் துரைத்த
மதியுடன் குதுசிக் கோர்வை மகிழ்ச்சியா யுரைப்பதாமே. (1)

உரைப்பன்யா னுலகு தன்னி லுடவது நால் வகையாத்
தரிக்கமுன் னெருப்புத் தண்ணீர் தவத்துடன் ஹறத்து மண்ணு
முரைப்பதாற் குணமும் நாலு முவந்திட மானிப மாய்த்
தரித்திட மனுவிற் பூண்டு தாயதந்தை போற் றரிக்கும். (2)

மனுடர்கள் கெர்ப்பமாகி மாய மாய்த் தரிக்கு முன்னே
அதனுட னனைவயிற்றி னகத்தினின் உரோம மெல்லா
மணியதாய்க் காற்று நின்று மகத்வதா மரை யிடத்தி
லணுவது நூற்றுப் பத்தா யாகமா கத்தின் மேவும். (3)

மேவியே நிற்கு மங்கே மைய்யேதாய் நாற்பதுநாள்
தாவியே நிற்கும்போது தவத்துடன் பேரும் அல்ஹா
மேவியே நின்று பின்னும் விரைந்துரு விரத்தக்கட்டி
காவியே பேரு முல்ஹாக் கருஞ்சுணைக் கட்டியாமே. (4)

அதுவும் நாற்பது நாள் நின்றே யப்புறஞ் சுரூப மாகி
யிதுவுடன் சிரசுதன்னி லின்பமாய்க் கலிமா நாலு
முதவியாய்ச் சொன்னான் கல்மா வோங்கிய மவுத்திரண்டில்
விதியுடன் சீதேவி மூதேவி விரைவுடன் கலிமா நாலாம். (5)

இத்தனை யிணங்க ளெல்லா மிணக்கமாய்க் கூடிவந்தால்
நற்றவ முன்பிற் சொன்ன நவிலுமவ் வொன்பான் கொண்டே
யத்தனை யெல்லாங் கூடி யழியாமல் வளருமாகிற்
சொற்ற தத்துவத்திற் பிள்ளைச் சுரூபமாய் வளருந்தானே. (6)

அந்த நல் லரூப றூஹு மழகுடன் சீவ னிற்கும்
விந்தையாம் ஹயாத்தைத் தானும் விதமுடன் மேவி நிற்கும்
அந்தமாய்ப் பேச்சுமூச்சு மகத் தொஜீபனம் விக்காது
சொந்தமாம் வாச நாவுசுகியதை நாடிடாதே. (7)

நாடுமே றூஹுதானும் நாட்டமே நின்று மேவித்
தேடுமே பருவமாகத் தெளிந்துமுன் பிந்திடாமல்
ஆடுமுன் னினிதார்கையா லறிவுட னெடுத்து நல்கத்
தேடுமுன் நாவிலேதான் திடமுடன் ஹயாத்து வாங்கும். (8)

வாங்கிடப் பின்னர் காணார் வகையினால் றாஹைமத்தானு
மோங்கிய ஹயாத்துநல்ரூ யுறுதியா யழைத்து கொள்ளும்
வாங்கியே பிரியுகின்ற வகையதை நன்றாய்க் கேளுந்
தாங்கிய மனுடர் நன்றாய்த் தரித்திடுங் குப்பாயம் போல். (9)

தரிக்கமுன் னிருந்த றூஹு தாபகம் அவ்வல் நாட்ட
மதியுடன் சிபாத்து நன்றாய் மக்றுமுன் ஹயாத்ததாக்கி
பதுக்குமுன் னாகறூஹு மறிவுக்குள் தாத்தாய் நின்ற
மதியுடன் ஆதம்ஹவ்வா மகிழ்ச்சியாய்ச் சேர்ந்தவாறே. (10)

ஹதீது குதுசிப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 23-க்குத் திருக்கவிதை 620,

# ஷஹாதத்துப்படலம்.

## தொங்கல்.

மன்னும் ஷஹாதத்துக் கலிமாவிலே, வருந்து மைம்பத்தோ ரெழுத்துண்டலீ-துன்னும் ஹூவைந்து பறுலாமலீ, துற்ற ஹூவுக்கு மப்தானவர்-நண்ணும் ஹூரூவுக்கு றசூலானவர், நாளும் ஹூவெல்லா மென்றோதினார்-எண்ணும் ஹூவல்லால் வேறொன்றில்லை, யென்றே யியம்பினார் குறுஆனிலே. (1)

காணுங் குறுஆனி லோராயத்திற், கருணையுடன் சொன்னான் ஹூவெனவே-பேணும் சல்புக்குந் தறூயிபுக்கும், பேதகமில்லாம் பல்குத் திக்கும்-தோணுங் கருசால் நுரையீரல்க்குஞ், சொல்லும் பித்துக்கு மாங்காயிற்கும்-நாணு மம்புபோற் றூமரைக்கும், நடக்கு மூச்சுக்கும் பேச்சுக்குமே. (2)

பொய்யாக வொன்றுஞ் சொல்லவில்லைப், புனித மாயதை யறிய வேணும்-உய்யார் முறைமைக்கும் றாஹூல்லாக்கு, முட லுக்கு முயிரானதற்கு-மெய்யாஞ் ஜலாலுக்கும் காள் வெளிக்கும், வெளிக்கு மேல் வெளியதற்குமே தான்-தய்யாறாகிய குதறத்துக்குந் தானாயிருக்கின்ற ஹூவிலாமே. (3)

வட்டமாகிய ஹூவதுதான் வடிவா யிருவிழி நடுவுக்குள்ளே திட்டமாகிய நாசிநுனி, திடமாய் வாவாகு மிதின் பின்னாலே-யொட்டும் பேசது புருவமாகு, மொடுக்கும் சுக்கூன்தானும் வாயா குமே-யிட்டமாகவே சொன்னவையை, யின்பா யறியுங்கள் மூமின் களே. (4)

இப்படிச் சொன்னான் யாவஸீனிலே, யில்மைப் பாருங்கா ளுலமாக்களே-செப்பிய இல்லந் தந்தஹூவாய்ச், சிறக்குந் திரு வுளந் தானேதினா-னெப்பு முவமையு மில்லாதவ, னொருவன் அவி பான கலிமாவிலே-அற்ப மாகிலுந் தவறாமலே, யழகா யோதுங் காள் ஹூவானதை. (5)

கண்ணின் மணியான நுக்தாவிலே, கருணை நால்மூலை யுண்ட திலே-யுண்ணும் ஷரி அத்துந் தரீக்கத்துவு, மோதும் ஹகீக்கத்து மஃரிபத்துந்-திண்ணமா மிந்த நாலுமிகச், சிறக்கு மீமானுக்கோர் காலுகால்-அண்ணலாகிய நடுவானதே, யான தௌஹீது முதலைப் பத்தாமே. (6)

மந்தாரமேகம்வெள்ளை மேகம், வருந்து மூரல்தான் கருமேக மாம்-சிந்துமழை ஹாஹாஹா வென்றதான், சிறக்கும் பனியப் பாலதுவும்பெய்யும்-உந்தம் வெள்ளியப் படியேதூங்கு, முயர்ந்த வானருஷூங் குறுசும்-சிந்தி லாகிய ஹலறத்திலே, கிருபை முஹி யித்தீனிப்படியே. (7)

குல்யா ஐயுஹல்க் காபிறான், குறுஆன் தனிற் சொன்ன னிந்தப்படி-அல்யா வென்னுமு ஸம்பிஹுவி, லாண்டோன் தான் சொன்னனிப்படியே-சொல்லாம் புறக்கா னுக்கானது, சுல்தான் பாத்திஹாத் தானனதில்-மல்க்கா மாலிக்கி யவ்மித்தினே, வருத் தினன் முஹியித்தீனனதே. (8)

பாத்தி ஹத்தினி லேழாயத்திற், பத்திட்டானேழு நபிமார் களைத்தாக்து சிபத்தையு மதிற்பதித்தான், தனுட்டு மிசுமுல் லகுலமென்றும்-தோற்று மும்முல்க் கிதாபாமென்றும், சுவர்க்கத் திறவுகோ லிதுவாமென்றும்-மேற்றும் பாவத்தைத் தறிக்குங், கத்தியிதுவா முஹியித்தீன் குணமானதே. (9)

செய்யும் பணிவிடை ஹாவானது, சிறக்கு மொருநாளு மொளியாமலே-யுய்யு முன்சாமமது தனிலு, முற்ற இருஜாம மானதிலுங்-துய்யபணிவிடை-யிதுதானென்றும், சுஜூது முஷா ஹிதா வானதுக்குள் எய்யும் சுரூபந்தான் வருமெனவே, யெங்கள் நபியிறசூலோதினர். (10)

முன்னே வலம்புரிச் சங்கோசையா, முடுரும் வலமிடங் கீத வோசை, என்ன வுயரத்தில் வாங்கினேசை யிவையே குத்துபாவி ஞேசையாகும்-பன்னுள் பிறப்பட்ட நவுபத்தோசை, பறக்கு மத்தள மணிபினேசை-தன்னுல் வெளிப்பட்ட வாலிபந்தான், தாங்கா தோர் பக்க மோங்கிடாமற்-கண்ணால் வெளிப்பட்ட தெழுந்தேறவே ஹபிபினெளிதன்னைக் காண்பதுவே. (11)

இந்தக் கண்ணை கண்ணுக்குள்ளே, யியல்பாய்ப் பத்துக்கண் ணுண்டுமென்ருர்-முந்தக்கண் பார்வையொன்று தோற்று, முடுகிய திற் பார்க்கிலரண்டு தோற்றும்-சிந்திமூடின லொன்று தோற்றுஞ், சிக்கிமூடின லதிலொன் ருகும்-கந்தி யிறுக்கின லதிலேயொன்று, கடைக்கண் ணிறுக்கின லொன்றுதோற்றும்.

மந்தாரக் கண்ணே யொன்ருகுந்தான், வருந்தி முறுக்கக் கண் ணென்ருகுந்தான்-கொந்தால வுண்மைமண மாகுங்கண், கொடிய

பொய்மனு மொன்றுகாணும்-தந்தாய் ஹக்கைத்தா னன்றாய்க்
காணுங், தரித்த மவுத்துக் கண்ணொன்றுகுமே-அந்தாரக் கண்ணை
வெளியிலாக்கி, யதனையடைக்கக்கண் ணொன்றுண்டுமே. (13)

இப்படிக்கொத்த கண்ணுனதை, யுயல்பா யறியாதோர் மூமி
னல்ல-துப்புர வான கலிமாவிலே, தோற்றும் ஹறூவான கண்ணுனை
திற்-செப்புங் கண்ணாடி நடுப்படவே, சிறக்கும் லைலாவின்பெண்ணுனை
தைத்-தப்பறநோக்கி யறியாதவர், தௌஹீதறியாத முட்டாள்களே.

முட்டா ளானுலு மொருகாதத்தில், முடுகி யோராசை
யுண்டோ யென்கிற்-றட்டான் கள்ளருபிருள்மழையும், ஷைத்தான்
கூட்டிமும் பெரியதாகிலும்-பட்டாங்கில்லாது சேர்ந்தொழியும்.
பண்டுகளில் சாதமுழங்காமலே-யொட்டாரில்லாத வோடை மேடு,
மொன்றுங்காணுது முட்டாளுக்குக்-கிட்டாத வாசைகிட்டுமென்று
கேணி விளித்ததங்கே யோடினுனே, (15)

இப்படிறப்பை யொருவன்றேடி, லில்மு பதினுலுங் கடலாய்
வரும்-தொந்தமாகிய மஃரிபத்துத், தொலையோ இலையோ பின்
கலையோ வென்னச்-சிந்தி டாமலுஞ் சிதறுமனுங், திருக்கையறுத்த
பின் முறிக்கிக் காண-வந்த மத்துஹூபு மஹ்பூபிலே, மவுஜூதானது
வருமதுவே. (16)

மவுஜூ தானதும் பிரானது, மஹ்மூதானதும் ஹறூவானதும்-
அவிஜத்தானதுங் காணக்கானதும் அல்ஹம் தானதும் புகழேயெல்
லாம்-தவிசைக் கைக்கொள்ளும் பிரயாணமாய்த், தனியோனுனதும்
அலிபானதும்-பவுசு முறுக்கபா யத்துக்குள்ளே, பரிந்தகண்ணாடி
மணிவிளக்கே. (17)

என்று மழியாதான் றாஹானதே, யில்லல்லாஹூ வென்றே
முழங்கப்-பண்டு பயப்பாட்டை நபியிறகுல், பார்க்கவே ஹக்குல் எக்
கீனுனைதக்-குண்டு ஹேறயான ஹறூவானது, கோமான் தானுன
ஹறூவானது-தண்டு பாடதகண் ணைனுல் எக்கீன், துல்லிபமான
தாத்துக்குள்ளே, என்று மிருக்கின்ற இல்முல் எக்கீ னிந்த மூன்று
மொன்றுனதுவே. (18)

ஆனு லறியுங்காள் மூமின்களே யவுலியாராஜா வானதையுந்
தேனுர் நபிமுஹம் மதுவானதுந் தேகம் ஆதமீ யானதையு
மானுர் குலமான ஹவ்வாவையு மணியாம் பாத்திமாவானதையும்
போனுர் வருவார்க ளானதையும் புகழும்ஹறூவானகதிரியிலே. (19)

க்திரைகிக் கைகொண்ட றாஹானது, காண வேண்டுங்காள் ரூமின்களே-அதிரக் கண்டனக்கா லடையாளந்தா, ஸன்னு ரூபிரந் தலையதுண்டு-மதுர வாயான தலைக்கே யொரு, மனு நூரு பிரம் வாயே யுண்டும்-பதறும் வாய்க்கொரு நூரூயிரம், பகிர்ந்த நாவுண்டும் நாவுக்கொரு. (20)

எதிரு பாஷையொன் றுண்டதுகே, ளிப்போலே பாஷையுண் டேயென்றூர்-சதிரப் பாஷைபோ லுண்டேயென்றூர், சாற்றும் தலைப் பாஷைஹூவானதைப்-பதறும் சரீரத்தில், வாசியென்ற, பதியில தைத்தான் வைத்தங்கேற்ற-எதிரும் நிகரென்று மில்லாதவ, னேகன் ருன்சொன்னுதிப்படியே. (21)

வண்ணப் படாதவன் வண்ணப்பட்டால், வண்ண மொன்றக்கு மடங்காதவன்-எண்ணப்படாதவ னெண்ணப்பட்டா லெண்ணுமேற் றிறை தொலையாதவன்-கண்ணுக் கடங்காதான் சமதானவன், கல் லில் நிறைந்தூறி யுறைந்தேமிஞ்சி யுண்ணி வெளியிலு மகமீதினு, முற்றபல வகைவீ னுனதே. (22)

சீன்மீமூறா னுனதுவும் தாஹாகாபு, ஹேஎ ஐன்சாதாணதும்- ஹேமீம் ஐன்சீன் காபானதும், கிருபை அலிபுமா மீமானதும்-ஆமி னுப் நின்றூன் றூனதுவும், அன்பி யாநபி யிறசூலுல்லா-பூமிதனி லிந்த சிர்ருனதைப், போத்துப் போல்நபி சறியாதென்றூர். (23)

நல்ல நபியிறசூ லுல்லாதாம், நபியும் இதுபாத்து முண்டுகேண் மோ-கொல்லப் பிறப்படும் நபியானது, கொல்லா திருப்பது மிது பாத் தென்றே-சொல்லி லடங்காதான் சுபுஹான ஹூ, துய்யோன் விரிவான காரியங்க-ளெல்லை தனில்வரு முஷாஹிதாவை, யெப் போதும் பாரும் சுஜூதாகவே. (24)

கூட்டமாகிய மோட்டுப் பாஷை, கூவுமயிலினஞ் சேவலுந்தான் நாட்டுக் கடங்காத நபியிறசூல், நல்லகெதிபெற அல்லா சொன் னுன்-சாட்டிப் போடாமல் மூட்டிப்போடு, தானே நானே யீமானே வரும் ஆட்டியலையாதே, நபுசானதை அல்ஹம்துலில்லாஹி வல்ல வனே. (25)

ஜெபறூத்தும் நல்லமலக் கூத்துடன், திங்கள் சூரியன் நாசூத் துடன்-அபறத் தாகிய கைகூத்துட, னமராதலா ஹூத்தானதும்- கமராப் பெருவழி ஜெம்கூத்திலே, கலிமாவானதே யலிமாமனே- இபுருஹீம் நபி தாமோதினு, ரிந்தவழி யைந்து முன்சாலையே. (26)

தூண்டா மணிவிளக் கானோர்நபி, சொல்லும் ஜெம்கூத்தாம் வலம்புரியா-யீன்ற வொருமுத்து மணியாகவே, யில்லல்லாஹு வென்றவ ரோதவே-யூண்ட பலவகை யானதையும், பொம்மலாகிய ஜெம்கூத்திலே தாண்டார் தாண்டினார் ஹூவினாலே, தளதளென்று நூருகினரே. (27)

ஜெபறாத் தானது பேச்சானது, சிறகு கொண்டதோர் பறவை யாகு-மவுலு மலக்கூத்துப் பயனாவது, மணியாம் பார்வையின் பிற் கண்ணாகும்—தமறும் நாசூத்துக் காற்றதாகும், தவக்குவாத் தானெல்லாம் சீற்றமாகுங்-குவியும் லாஹூத்துக் கேள்வியாகுங், கும்மி விழிக்கின்ற வெம்மியாகும். (28)

நல்ல ஜெம்ஹூத்தும் குத்துபாவும், நல்குங் தௌஹீது ஹூவானதும்-வல்லமை யான மின்பறவும், வருந்தும்படி நாலுமுண் டே யதிற்-செல்ல நபியிறசூல் நயினார், சென்றங்கேறியே குத்து பாவை-அல்ல லில்லாம லோதுமோசை, யதுவே நேராகக்காது தாழ்த்தி-வில்லைப் போல்பேணி வலைந்துகூனி, மேவிக் கேட்போர் தான் தீனவரே. (29)

இப்பா லிருக்கட்டு மப்பாற்சொல்வே, னில்மைப் பார்த்தோரே மூமின்களே-தப்பாமற் றறியொன்ற துண்டுகேண்மோ, தானாய்ப் பேச்சுத்தான் வருவதுதா-னெப்போல்முன்னுக் கத்தாவாம்வெள்ளி யென்று முச்சியி லேயிருந்து-நட்பாய் அலிவாகக் கீழிறங்கி, நல்ல தாமரை தனிலேநின்று. (30)

ஒப்பா மொருலாம திடத்தில்வந்தே, புன்னி அல்லென்று தனி லிருந்து-மெய்ப்பாய் வலதிலே யொருலாமிலே, யில்லல்லாஹுவென் றே யெழுந்து-தப்பா தவன்கண்ணி னேரிறங்கிச், சார்ந்து சமதாக நடுவுக்குள்ளே-குப்பா வெனவுச்சி யுள்நாக்கின்மேற், ஹூவாய் வந் தது பேச்சானதே. (31)

உக்காச்சிலும்பியா முச்சிமீதி, லுன்னியாங்கார வெளியாகவே-தக்க நாராசம் அலிபாகவே, தாண்டி யுக்காவில் வந்துசாடி-மிக்கா மோரைந்து தலமேற்சுற்றி, மிருந்து பின்வரும் நாராசத்தில்-ஹக் காம் அலிபொன்று மிரண்டுலாமுங், காணுமொருஹேயும் அல்லா ஹூவே. (32)

தோற்றும் ஜம்ஹூத்து மிதுவேயென்னச், சொல்லத் தொலை யாக வெளியானது-மேற்ற மாகிய திக்றுகுள்ளே, யிருங்காறெனச் சொன்னனம்மிறையோன்-பாத்தி ஹூவுங்குல் ஹூவல்லாஹூவும்,

பாருங்காளென்றார் இமாம் நால்வரும்-தேற்றுங் காணித்தங் தக்கு வாவைப், போற்றுங்கா ளென்றார் ஜம்ஹூறுத்திலே. (33)

இப்பா லிருக்கப்பின் அப்பாற்கேளீர், இல்லல்லா சொன்னான் குறுஆனிலே—யொப்பா ரில்லாத முஷாஹிதத்தி, லொருமூன் றுண்டென்று ரெம்மிறசூல்-செப்பாம் ஆதமி சூரத்துவும்; செப்பு மொளியான சூரத்துவு—முப்பா லாகித்தன் சூறத்துவும், மூன்று மொன்றாய் மூக்கிடையில் வைத்தே—யொப்போ தும்சஜூதா யிருத்தே, யிருதத்தாகினாற் காணலாமே. (34)

என்ன காணலா மிறையோதினான், இல்லல்லா வென்ற னாறு னது-மின்னுங் கோடாகோடி சூரியனும், மிகுந்த பதினாறு கோடா கோடி-நண்ணும் வடவாயுவக்கினியும், நளினமெனுங் கோடா கோடியாகி-வன்ன ஜலத்துல் கதறுங்கூடி, வந்து வளையுமே முஷா ஹிதத்தில். (36)

கண்ணை மருட்டிடும் பார்க்கப்பார்க்கக், கமலத்தான் விடும் நீக்கப்போக்க-என்னுங் கடலடித் திரையைப்போல, யிந்தப் புவி யெண்ணாந்தான் மாறியே-பண்ணை யசையான ஜலாப்பெண்ணைப், பக்கந்தனில் வெட்டுங் கட்டியெட்டி-யொண்ணுக் கடங்காதா ளேசைக் கப்பால், ஹூஹூவுஞ் ஜலால்க் காணலாமே. (36)

நாவில் லாதவன் கற்பனையும், நாம வோசையும் பாஷைகளும்-சாவில் லாதவன் தசுபீஹையும், சாற்றுந் தன்சிஹாவா தானதை யும்-கோவில் லாதவன் வாசலிலே, கோமா னீமான்தீ னானோரையு-மாவிலேவந்த முஷாஹி தத்தை, மக்காமி லேநின்றான் ஆமீனுமீன். (37)

சிர்ரும் காரிய மொன்றுகேளீர், சிறந்த நாயன்று னேதினது-பிர்ரும் குறுஆனி லோராயத்திற், பெரியோன்தான் சொன்னான் வெற்றியாக-அர்றஹ்மா னிர்றஹிமே யென்றே, யானூலேவனுடு தானேசொல்லக்-குர்றத்தாகிய முஹல்லிபிலே, குறுஆயினையத்து மஃனாவிலே. (38)

தந்தை சூழ்வித்து விளைந்ததுவுந், தாய்க்குள் ளேசித்து நுழைந்ததுவு-மூந்த அறுவாஹா யிருந்தவு, முதலோ னவன்ஞான மானதுவும்-பிந்தி வெளியிலே யாகினதும், பேச்சு மூச்சுமுண் டாகினதும்-இந்த வகையெல்லாம் யாவருக்கு, மெடுத்தோதி டவேண்டா மென வோதினார். (39)

சிர்றைப் பனுவாக்கு ஹறாமேயென்றும், சிர்றாதான் றெரியாது
போனால்-மூர்றத்து மூட னாவித, முழுதும் ஹறாமென்று
ரெம்மிறசூல்-தூர்றத் தாகிய தாய்வயிற்றிற், றரிக்க முன்னாலே
சகலபேரும்-உற்றதாகிய அறிவுகொண்டே, வூரில்வந்தாலே சொல்
லக் கேண்மோ. (40)

அனல்லாஹுல் அஸீசுல் ஹக்கீமென், றான விப்படி யிவனே
சொல்லத்-தனதால் வயித்தியந் தானாகினான், தானே மருந்தவன்
தானாகினான்-எனதால் றாஹது சொன்னதுகே, ளென்ன நபுசுக்
குள்ளிருப்பேனென்ன-மனதா லாகுமோ மனுடர்செயல், மனதா
லாகுமே செயலேயெல்லாம். (41)

சதிர்கொள்கெர்ப்பந்தா னாணுமென்றுஞ், சாற்றுங் கெர்ப்பந்
தான் பெண்ணுமென்றும்-உதிரந் திரண்டங்கே சுருபமான, வுயி
ரைத் தெரியுமோ மானார்களோ-அதிர வயிற்றினி லைந்துமாத,
மானால் வரவென்றாலதுவருமோ-எதிர நின்றவன் தந்தையுந்தா,
னிப்பால் வாவென்றால் வருமோசொல்லே. (42)

பின்னே யிப்போநான் பெறுவேனென்றாற், பேறு தெரியுமோ
பெண்ணேபெண்ணே-யுன்னி விளைந்தவன் தன்னிலேதா, னாக்க
மாகவே சாவுவந்தாற்-பன்னி யடியிலே சாவதல்லாற், பருவ மாகப்
பின் பிழைப்பதுவோ-சொன்னகாரிய மிதுவே யெல்லாந், துய்யோன்
காரியமென்பார்களே. (43)

அல்லா வெனச்சொல்லி விளித்தாலங்கே, ஆனால் மறுவிளி
கொடுப்பாருண்டோ-எல்லா மறிந்தவ னீயேயென்று, லென்றால்
நானுக்குமென்பாருண்டோ-வல்லா ருயிர்போறகாலையிலே, வாங்கிப்
போனாரைக் கண்டதுண்டோ-பொல்லார் நல்லார்க ளென்றே,
யொருபூமி தனில்வந்தாருண்டோ வென்றே. (44)

இங்ஙனே யிதுசொல்லப்போமோ, என்றாலில்முக்குத்தகுமோ
இஃ-தங்ஙனே சொன்னால் நானுபேரை, யாக்கினா னந்த நரகத்
திலே-முங்கினஷெய்கு ஹல்லா ஷைத்தான், மூட்டினா னில்லை
நரகத்திலே-பங்கினால் மாலிக்கென்பவரைப், பார்த்துச் சொல்லுங்
கள் நபியும் மத்தே. (45)

மாலிக் கென்போரே கோபமாகு, மன்றியிலே கோபஞ் செவி
கேளாது-காலிக்கா னோரே மூமின்களே, கண்ணுங் தெரியாது நரகத்

திற்கே-ஆலிமானோரே சொற் பிழைத்தா, லாவி பேசாதே வாசி தானும்-சாலி ஹானோரே திக்கிர் நுழைந்தாற், றூனே தெரியாதோ வாசந்தானும். (46)

ஒருவ ரேழுநாட் பசித்திருந்தே, யொரு காலில் வெள்ளிக் குழையின் வந்தா-ரொருவர் கள்ளர்வந் தஃதேனென்னென், றேதிப் பறித்துக்கொண் டவரோடினார்-ஒருவ ரிவரானோர் வியார முற்றே, யொன்றுந் தெரியாமற் கிடக்கும் நேரம்-பருவமா யேழு வாயிலையும், பையத் தாளிட்டுக் கையில் வைத்தார்-இருவ ரொரு வரு மொன்றாய்க் கூடி, யிங்ஙனே வந்து வளைந்தனரே. (47)

தேடின கோடித் திரவியத்தைத், திரையின் கடலிலே மரக் கலத்திற்-கூடி வைத்ததின் பின்னாலேதான், கோமா னல்கியவே வலைந்து-மூடின செய்தி யறிந்துபின்னு, மூச்சும் போகாது பேச்சும் பேசார்-றூடினமரக் கலத்தில் வைத்த, நாட்டம் போலிது நபியும் மத்தே. (48)

தவளை நாகத்தின் வாயிலானாற், றூங்குமோ சித்து விளையாடு மோ-பவளத் தேரை கண் மூடினுக்காற், பார்க்கத் தெரியுமோ வுலகை யெல்லாம்-குவமை பறையாத குறுஆனிலே, கோமான் றூன் சொன்னோர் சூறத்தி-லிவளை மறந்து பின் றுவளைப்பாரு, மென்று னறியலா மீமானையே. (49)

நாலுகாரிய முண்டானது நாவு பேசாது பேச்சு மற்று
வாலிபமான ஹேயும் வரவும் வன்னிமேலே நின்றுன்னியாடும்
பாலியானது காலியாகும் பாவமானது போய்க்களையும்
சோலியானவை யொன்றும் வேண்டாம்சோதிமஹ்பூபு சுபுஹானிலே

கெர்ப்பந் தரித்தக்கால் றாஹானியே, கெர்ப்பம் பிள்ளையாய் வெளியில் வந்தாற்-செப்பிடுந் துன்யா வார்த்தைபேசில், ஷெய்த் தானீ யாகு மெனவோதினுற்-ஒப்பு முவமையு மறியாவிட்டா, லொருவன் ஹைவானி யெனவோதினார்-மெய்ப்பை யறிந்தாக்கால் றஹ்மானியே மெய்ப்பைத் தெரிந்தக்கால் றப்பானியே. (51)

அப்போ தனியாயம் போச்சுதென்றே, யன்பியாகபி யோதி னார்கள்-ஒப்பு முவமையு மில்லாதவ, னொருவன் றூன்சொன்னா னிப்படியே-கற்பு மிகவுள்ள கருத்துக்கொண்டு, ஹாமீம் தாம் சொன்னா ரினங்கேளீர்-செப்பும் பெரியவ னிவைகளைத் தான், சேர வறியவே யோதினனே. (52)

ஒருவ ராகவே யிருக்கொணுதிங், கொருவ ராகவே யிருந்து விட்டாற்-பருவர் தப்புமச் சமயங்களும், பாக்கியம் வார சமயங்களும்-அறியப் போகாதிங் காதலினு, லாண்டோன் ஞன்சொன்னுனப்துக்கெல்லா மறியு மனத்தைப் பின் யறியாமலே, மனமும் நாவுங் கொண்டோதுவதே. (53)

தன்னை ஹாலிறு தானுக்கினுற், தன்னி லொருவழி தானே வந்து-பின்ன ரிவனேடு பேசிக்கொள்ளும், பேசினு ரென்று போரா கினுற்-கன்னி ராஜனுங் கமலராஜனுங், கருணை ராஜனு முபிர் ராஜனு-மென்னு மெப்போது மொளிராஜனு, மெங்குந் தெளியவர் துண்டானதே. (54)

நன்மை தீமையும் மனம் நினைக்கும், நன்மை தீமையும் விழி பார்த்திடும்-நன்மை தீமையுஞ் செவிகேட்டிடும், நன்மை தீமையும் நாவுபேசும்-உண்மையொரு பேச்சுத் தெரியுமல்லா, லொன்றுந் தெரியாத வொருதர்ங்காண்-வண்மை கல்க்குத்தான் ஹக்கைச் சூழ்ந்து, வல்லோன் ஹக்குத்தான் கல்க்கைச் சார்ந்தான். (55)

ஹக்கும் கல்க்கு மொன்றுயினது, கருணைக் கல்புயி ராயினது-மிக்க நபியிது பாத்தானது, மேவும் லாஹி றென்றுனதும்-ஒக்கு மாணும் பெண்ணென்றுனது, முச்சி தனிலுச்சி யுச்சிமீதில்-மிக்க வொருறானு மோரவிபு, மேவு மாணவ நாவானதே. (56)

பிறக்க முன்னின்ற கோலங்களை, பிறந்தா லறியலாம் பெரியோர் கட்கிங்-கிறந்து போனக்கா லுயிரெங்கேபோ, மென்றுந் தெரியாது சிறியோருக்கங்-குறைந்த இவையெல்லா மறியச் சொன்ஞன், ஒல்லா நபியுல்லா வும்மத்தோர்க்கே-சிறந்த சிர்ருன காரியத்தைத், தெளிந்தே யறிந்தாக்கால் மூமின்களே. (57)

பிறக்க முன்னிதா யிருந்தகோலம், பிறந்தா லறியலா மென வோதினு-லுறைந்த கல்புக்குள் நாட்டம் வைத்தா, லுடனே தெரியுங்காணந்தரூபம்-இறந்தா லுறம்பரிசுந் தெரியு, மென்றே சொல்லினுேர் சூறத்தி-லுறைந்தான் ஒஸ்ஸமாய் சூறத்திலே, ஒல்லா இப்படித்தானே சொன்ஞன். (58)

மன்னு னதின்கூறு சொல்லக்கேளு, மண்ணே பெருத்தக்கா லென்னசெய்யும்-பொன்னைத் தெரியுமோ அல்லாததைப், பூண்டகாரியந் தெரியாதென்ன-நண்ணுய் வான்கூறு மிஞ்சுகிலோர், நளி

னத் தொழுகையை விடாதவன்றான்-என்றால் நரகுபண் மிஞ்சு மாகி, விணங்கா ஹறுமிஞ்சி நடப்பனென்ன. (59)

சொன்னான் பொன்னூர்மண் மிஞ்சுகிலோர், துய்யோன் இல் முதான் ஹாலிறுகும்-என்ணு லறுஷுமண் மிஞ்சுமாகி, லேகன் மஸ்தாக இருப்பார்களே-கண்ணாற் கண்டது மறைந்தொன்றாற் காணு தொருகாரு மிப்புவியிற்-றன்னால் வந்தது போகாதொன்று, தானே யுரைத்திட்டா றுண்டவனே. (60)

கூத்தான்மை யுள்ள வுயிரைப்போலே, கொடுத்தா னுற வொன்று, மில்லையென்ற-சாத்தா மற்சாத்தும் தாளிரண்டைச், சாத்தியேபாரு முயிற்கோலத்தை-யேற்றும லேற்றி யுச்சிமீதி, லென்றால் சிர்றுதான் வெளியாய்விடும். காற்று லாக்கினன் பல வகையுங், காவல் நபியிறசூலோதினர். (61)

நபசு லெவ்வாமத் தலையேவிடு, நபுசு அம்மாறுவெனவே யொளி-பவுசு பிரமானமுல்கி மாவைப், பாராதே பாரு பின்னாலே கேள்-ஜவுச முத்துமயின் னுவென்றதி, லிருந்தோ மில்முறப் பாணி யென்றும்-தவுசு பெருந்தாத்து நபுசானதற் சார்ந்து பாரு ஹறவானதுவே. (62)

கோமான் றுன்சொன்ன செய்திபார்க்கிற், கோல மொன்றை யும் பார்க்கவேண்டாம்-சமா னிலைகொண்டு பார்வைபாரு, மிபாதத் துச் செய்யு மூமின்களே-பூமான் றனைவெல்லச் செய்திகேளும், பொம்மல் கொண்டொரு அம்பைவாங்கிச்-சிமா யெய்திடிற் பூமான் விழுசிர்றைப் பாருங்காள் மூமின்களே. (63)

அல்லா தனைநாடி திக்குறுசெய்தா, லதிலே திருவொளி வந் திறங்கு-மெல்லாக் காரிய முந்தெரியு, மென்றே யெம்மிறை தானே. தினன்-சொல்லார் திக்குறு தானேதினற், றய்ய வொளிவரும் பரிசுகேளீர்-வல்லா வலதிலே வந்திறங்கி, மாண்டக்கால் வல்லோ னொளியல்லவே. (64)

வலது பக்கத்தில் வந்துவந்து, வனுப்ப மாகவே பெருகி யார்ந்து-நிலதுநிலையாக நின்றுவீசில், நிபுணர் நபியிறசூ லொளி யைக்கலரு மேயெல்லாம் வந்துமுடிக், கருணை கொண்டடெங்கு மொன்றாகினல்-நலது நமதுயா நபினர் சொன்னர், நல்லபுறகானி னொளியிதுவே. (65)

இன்னுஞ் சொல்லக்கேளு முஸ்லிம்களே, யிடது பக்கத்தில் வர்தொளிவு-மின்னி யொழித்தது போலொளித்தால், மிருந்துமே போதேதென வோதினர்-கண்ணு மொளியி தூ நிலையேநின்று, களின முட னெங்கும் நிரப்பமாகிற்-கண்ணின் மணியான நாயனொளி, காணுங்காளிதைத் திக்று செய்தே-யென்றும் பெரும்வாழ்வு பெறு வீரென்றே, யெங்கள் நபியிறசூ லோதினர். (66)

ஆனா லின்னமுஞ் சொல்லக்கேளீ, ரருளுர் திக்கிறது செய்யும் போதும்-கான விதமாக வொளிவுவந்து, காடி முதுகிலே மறையு மாகிற்-போனன் திக்கிறு சொன்னேனும் போனன் போகாம லிது நிலை நின்றக்கால்-வானல் வாங்கிற மலக்கல்மௌத்து மன்னனொளி யிதுதாலே யென்றான். (67)

தாங்குர் திக்கிறது செய்யுங்காலஞ், சன்னல் பின்னலா யொளி வுவந்தே-யோங்கித் தான்முன்னே நின்றேடினு, லொலியா திபுலீசை யோட்டிவிடும்-வாங்கா வொளியது நின்றுகொண்டு, வன்னிக் கட்டைபோ லேபிலங்கி-யோங்கா தெங்கெங்கும் பிரகாசித்தா, லெங்கோனிறசூலுர் தீனுமாமே. (68)

என்று லிர்நான்கு திக்கிறையுர்தா, னேகநாயக னுதவி கொண் டும்-நன்றாய் நபிதீனி னுதவிகொண்டும், நல்ல முறுஷிதி னுதவி கொண்டும்-ஒன்றாய் மனந்தனில் வைத்துத்தானே, யெல்லா மீதிலே பேராசையாய்க்கண்டே ஜல்ஜலால் கண்டுகொண்டு, கரும மொரு மித்த முஸ்லிம்களே. (69)

முஸ்லி மானேரே மூமின்களே, முத்தலக் காகிய நாயனைத் தான்-தன்சீஹா செய்து முன்னேசொன்ன, தசுபீஹாகிய சொல்லி னாடே-அசிலாயதற்கு முன்சொன்ன நூறை, அஹ்மதாய் நின்ற மஹ்மூதிலே-பசியா திருந்துபார் பயஹாம்பரும், பக்கீறெலியுல்ல தமைக்காணலாம். (70)

மானமானேரே பரனிலொரு, வன்னப் புதுமையுண்ட தனைக் கேளீர்-ஏகமானதோர் வாய்வும் நீரு, மென்ற வன்னியு மீனுங் கோலும் தானமா யுள்ள வில்லுமம்புஞ், சாயாத் திருமேனி கோலும் காணும்-ஆனா லிவவெல்லா மொன்றாய்கூடி, அப்தாக்கள் மேலே வந்து சேர்ந்தார். (71)

இந்தப் புதுமையைச் சொல்லக்கேளீ, ரென்றால் ஆண்பிள்ளைக் காகவேண்டி-இந்த ஆண்பிள்ளைக் கெந்தகோ, மென்று லறிவீரோ

சொல்லக்கேளும்-சொர்ந்த மாயுள்ள மூச்சுத்தானும், சுஜூதிலே நிற்கும் வேளையிலே-அந்தயாஹூ-வென்றே, வலதிலாக நிற்கின்ற காலையிலே. (72)

மயிலே மாமயி லானோர்களே, வண்டும் பூவும்போலாகுங்காலம்-ஓயிலாய்காதந்தான் சாடியங்கே, யுற்ற கல்புக்குர் தருயிப்கடுப்-பயிரதாகவே போய்த்தா னின்று, பத்து மாதமு மானபின்னல்-செயலா ஆண்பிள்ளை யாகவந்து, செய்கை யாண்டோனுக் கப்தாகினன்.(73)

இந்தக் காரியந் தனிலேயொன்ற, தேறற் வாட்டமுண்டதனைக் கேளீர்-மூர்ந்த வந்ததில் வானில்நின்று. மூர்க்கப் பானில்லை யானதினல்-இந்த மூச்சுத்தானிடகிலான, தென்றுற் றறித்தது பெண்ணுச்சுது-கொர்ந்து வாலிப முஸ்லிம்களே, கோலமப்படி யானதுவே. (74)

விதியோவிதியென்பன் மேலவன்றன், விட்டசெயலிது தானே யென்பான்-விதியை மதியையு மறியவேணும், வில்லு மப்பையு மறியவேணும்-மூதிய தானத்தில் முன்னேசொன்ன, மும்மூன் றண்டதையறியவேணும்-பதிய இஃதெல்லா மறியவேணும், பாக்கிய முள்ளகபியும் மத்தே. (75)

ஒன்பது மொன்றுச் சொல்லுகிறே, னுண்மையாயக் கேளுநர் தோழன்மாரே-கம்புக் தலையொன்று நாசிகண்ணும், நல்ல நாவிரு செவியுடனே-யொன்பது மொன்று மானதுவு, மூரைக்கும் லெவ்குதானனதுவும்-தன்பர மில்லாக் கலமானதுஞ் தான மானதுஞ் சொல்வதுவே. (76)

லெவுகு மகுபூலி மனமாமெனும், நேர்மைக் கலம்காவு தானு மெனும்-ஐவினையில்லார் சிறியோரெனு, மன்பாலுள்ளவர் பெரியோரெனு மெய்வினை போகுமென்னேரமு, மேல்வினை தீருங்காலையிலே-யுய்வினையுள்ள நபியிறசூ, லோதினர் குறுனைய்த்... (77)

எட்டுத் தலத்திற்கு மெட்டெழுத்து மேலுமில் லல்லாஹ் சுஜூது செய்யு-மொட்டுப் படாமல்நின் றுதினவு, றென்றுதான் சொன்னன் குறுஆனிலே-வெட்ட வெளியாக மஞ்சணித்த, வேர்வைசிதறிய அங்கோமே-திட்டமாயுள்ள வெழுத்தை யெல்லாஞ், செய்கையாக்கேளீர் முஸ்லிம்களே. (78)

கருணைக் கடவான நபியிறசூல், ஹாமீமாகிய யாசீன்சொன்னார்-பரனம் பரனமென் றுயிர்கொண்டாடும். பாக்கிய முள்ள தீனவரே-இரணம் பறக்கத்தும் றஹ்மத்துவு, மிறசூல் சலாமத்தும் நிஃமத்துவும்-தரணி தனிற்றரு வானெனவே, தம்பி ரான்சத்த முழங்கியதே.

எல்ல வேளையுஞ் சொல்லக்கேளு, மென்றொலொரு சத்தந் தான் முழங்கும்-நல்லாக் கேளுங்காள் செவிகொடுத்து, நாளும் பக்கால்ஜல் ஜலாலஹூவின்-ஒல்லா நபியுல்லா வானோரையு, மொலி மாரிராஜா வென்றேதினமே-நல்லாரிவை யெல்லா நாடினுக்கால், நாயன்றான் சொன்னான் சுவர்க்கமென்றே. (80)

தந்தைதன் கூறானதுமுண்டுந், தாயின் கூறுதானது முண்டு-மூந்த விறைபவன் கூறானதையு, மூன்று மொன்றுக்கி நபு சாக்கினான்-இந்த வகையான கூறேதென்று, லித்தனை யென்று தெரியேனென்றார், சொந்தமாகிய செய்கைதனைச், சொல்லக் கேளுங்கா ளெல்லோருமே. (81)

சூட்டுந் தோல்தசை நரம்பிரத்தஞ், சொன்னான் தாயின் கூறிலவையாமொன்று-மீட்டு மெலும்போடு மூளைவிந்து, வேர்வை யிவை யெல்லாஞ் செவியின்பார்வை-கூட்டும் மிவைபதி நான்குமொன்று, கோமானபியிறசூ லோதினார். (82)

உற்ற பதினான்கு மிவ்வளவு, மூன்றும் பதினான்கு ஹறுபாக்கினான்-சித்துவிலையாடு மிறைநாமமுஞ், சிறந்த நபிபிறசூல் நாமமும்-பத்திமுகியித்தீன் றிருநாமமும், பதினான்காமிவை மூன்றுபேருங்-கத்தனிலொரு கண்ணாடியைக், கருணைக் கமலக்ககண்ணாடி யென்றான். (83)

பசியும் பசியாம லிருப்பதுவும், பன்னுங் கவலையு மகிழ்ச்சியதும் ருசியும் ருசியில்லா திருப்பதும், நோக்கும் நோக்காம லிருப்பதுவுங்-கசியுங் கேள்வியுங் கேளாமலுங், களைப்புக் களையாம லிருப்பதுவும்-குசியுங் குசியில்லா திருப்பதுவுங், கொண்டகோலங் கொண்டாடுவதே. (84)

நினைப்பு நினைப்பில்லா திருப்பதுவும், நேர்மையும் நேர்மையில்லாததும்-அனைப்பு மனைப்பில்லாத திருப்பதுவு, மழுகை யழுகாமலிருப்பதுவு-மனைப்பு மனைப்பில்லா திருப்பதுவும், வாயும் வாய்பேசா

திருப்பதுவும்-சுனைப்புஞ் சுனைப்பில்லா திருப்பதுவும், சொல்லுங் காரியமின்னங் கேளீர். (85)

கூடுங் கூடாமலிருப்பதுவுங், கோபங் கோபமில் லாததுவும்-நாடும் நாடாம லிருப்பதுவும், நாளும் வயிற்றை தனிலே யொரு-ஆடு பூத்ததும் பூவில்லாம, லுறுதிக் கெர்ப்பமுங் கெர்ப்ப மில்லாச் சாடும் நாதனும் நாதனில்லாத், தாங்குந் தாங்காமற் சாகுவதும்.(86)

நடக்கும் நடக்காம லிருப்பதுவும், நரைக்கும் நரைக்காம லிருப்பதுவும்-கிடக்கும் கிடக்காம லிருப்பதுவுங், கிருபை கிருபை யில்லாததுவும்-ஒடுக்க மொடுக்காம லிருப்பதுவு, மோயு மோயாம லிருப்பதுவுந்-தடுக்குந் தடுக்காம லிருப்பதுவுஞ், சாகுஞ் சாகாம லிருப்பதுவுமே. (87)

உன்னு முன்னும லிருப்பதுவு, மூரு மூராம லிருப்பதுவு-மின்னு மின்னும லிருப்பதுவு-மெய்யும் பொய்யுமா யிருப்பதுவு, முன்னு மாதமுப் பதுநாளையு, மூத்த ஆறு நா றுனதையும்-குன்னுன் குன்பயக்கூனுனதுங், கோமா னிதுமுப்பத் தாறே யென் றான். (88)

இந்த முப்பத் தாறுக்குமப்பா, லில்முக் கடலான றஹ்மத் திலே-அந்த அணுவணுவணுவாகிய, அழகி லழகாகி யழகாகின மந்த ரந்தரப் பார்வை மீறி, மந்திரவாணி மந்திரத்தைத்-தொந்தா தொந்தமென்றே நின்றுடுங், தூய்ய மஹ்பூபு சுபுஹானியே. (89)

நல்ல குதுபுறப் பானியைத்தா, ளுடியொருதிரு நாமஞ் சொன்னால்-நில்லுமொரு காலின் நின்று கொண்டு, நேமஞ் செய் வித்து சாமத்திலே-பல்லுபிரான வுவிரா, வதைப், படைத்தான் படைப்பெல்லாந் தோன்றிடவே-யெல்லை தெரியும்பார் குறுஆனிலே இக்கு றஃஎனுஞ் சூறத்திலே. (90)

தன்னைத் தான் போற்றுங் காலையிலே, தன்னி லொருஹறு பானதுதான்-தன்னிலே நின்றுவெளி யாச்சுது, தன்னிலேயது தன்னைப் பார்த்தான்-மின்னி மின்னியே ஹறுபானது, மேவி மேவிய கண்ணாடியால்-அன்ன கண்ணாடி யப்தாமென்று, னந்தக் கண்ணாடி தன்னைப் பார்த்தான். (91)

நின்று விளையாடும் சுருபமதை. ரத்ந மஹ்பூபு சுபுஹானி யென்றென்றி-லடங்காத ஹலறத் தென்று, முரிமை முரிஷிது மவுஜூதென்றும்-விண்டு தனக்குப் போற்றப்பில், ஆலமீனே யெனச் சொல்லித் தானேவைத்தா-னென்று மூன்றுபேர் வைத்தேயன்றே, ரமுதம் பொங்கவக் களிப்பினனே. (92)

தனக்குப்பேர்வைத்தான் ஹூவெனவுந், தனியன் தரிசித்த கண்ணாடியை-பிணக்கி யாஹூவென்றே பேர்வைத்தா, னிந்தக்கண் ணாடிக்குள்ளேகண்ட-வணக்கம் சுரூபத்தை மன்னஹூவாய், வைத் தான் ஜல்லஜலா லஹூ-வின்-கணக்குத் தவறாமல் நாலுவழி, கருணை குருவென்றுண்டாக்கினானே. (93)

இப்பா லிருக்கப்பின் னப்பாற்கேளீ, ரில்லல்லா இருபத்து நாலும் ஒப்பதில்லாத வொன்பதாகு, முயர்ந்த சிறிது தனிலே யொரு-மெய்ப்பா மெய்ப்பிலே யிடங்கள்தோறு, மெல்ல வேற்றியே சொல்லைப்பார்த்தால்-அப்போ திலைதுதபா னெப்போலாகும், அல் ஹம்து லில்லாஹி தானறிவான். (94)

இன்ன மங்கனே சொல்லக் கேளு, மிந்த வொன்பது ஹறு பானது-முன்னும் அலிபைத்தான் மூச்சில்வைத்து, மூத்த லக்கிடு, மூச்சுதற்கே-யென்னும் லாமதைச் சுல்பில்வைத்தே, எட்டு திசை யையுங் கட்டிவிடு-பன்னுமீம்தனை நெஞ்சில் வைத்துப், பாரு மனு ஹறின் றிருக்கூத்தையே. (95)

ஊறும் வட்டஹே யானதையே, யுற்ற தாமரைக் குள்ளே வைத்து-மீறும் நெடியஹே யானதையே, மேன்மை யுச்சியிலே நிறுத்தி மாறும்-சீனைதான் வாயிலிட்டு, வாலைப் புருவத்திலே யிருத்திக்-கூறுந் தாலைத்தான் தொப்புளிலே, கொண்டே யிருத்திக் கொண்டின்னும்பாரே. (96)

பாரும் பாரும்நல் றேயைத்தானும், பட்சமாகிய கல்க்கில் வைத்துச்-சேருஞ் சேருமே யொன்பதையுஞ், சேர்த்தொன் றுக் கியே கலிமாவிலே-தாருந் தாருமென் றேயோதிடுந், தருவார் நபி வரு வாரேயன்று-போரும் நீர்போது மொன்றேசொல்லும், புத்தி மான்களிற் புத்திமானே. (97)

நிறைந்திடும் லௌஹூ மஹூபூலினை, நிறைந்த காதிரி தானாக வே-யுறைந்த வெழுத்தெல்லாம் றசூல்நூறெனு, முற்ற கலந்தானே ஹக்குநூறு-சிறந்த திரையெல்லாங் காதிரியே, தெளிந்த வொளி யெல்லாம் றசூலினூறே-அறந்தரு மாதி யுதவிகொண்டே, யடியான் செய்ப்பிழை மிடிமைதீரும். (98)

மூர்திலாமிலே வரும்அலிபு, முஹம்ம தினில்வரு முதல்மீமது-
மூர்த்தி லாமிலே வரும்அலிபு, முஹம்ம தில்வந்த மீமானதும்-நத்தி

லாச்சூலில் வந்தேயும், நலமாம் இலாஹிலே வந்தஹேயும்-சொந் தாறெழுத்துமே தலையில் நிற்குந், தோற்று மபூபக்கர் ஜிபுரீ லுடன். (99)

சொல்லும் இலாஹிலே வருமலிபுந், துலங்கும் இல்லாவில் வந்தலாமும்-வெல்லும் இல்லாவில் முதல் அலிபும், விரைந்து முஹம்மதில் வந்தஹேயும்-நல்லிற சூலில்வந்த வாவும்-நலமாம் அல்லாஹுவில்வந்த மீஹேயும்-வல்லா றெழுத்தும் நெஞ்சதனில் நிற்கும், வணங்கு மும றுடன் மீக்காயீ லும். (100)

அறியும் அல்லாவின் முதலின்லாமும், ஆன இல்லாவில் ரண்டாம் அலிபும்-செறியும் இல்லாவில் இரண்டாம் லாமுஞ் சேர்ந்த றசூலுல்லாவில் நடுஅலிபும்-பிறியும் இல்லாவில் வந்தலா மும், பேசு முஹம்மதில் வந்தமீமும்-நெறியா றெழுத்துமே யிருப் பதிலே, நிற்பா ருதுமானு மிசுறாபீலும். (101)

முழங்கும் அல்லாவில் வருமலிபு, முறையாம் றசூலிலே வந்த லாமும்-விளங்கும் றசூலுல்லாவில் வந்ததேயும், விரைந்த முஹம் மதில் வந்தநூனும்-பழகும் றசூலுல்லாவில் முதலிலாமும், பதிந்த அதற்குள்ள ரண்டாம்லாமும்-தளங்கா றெழுத்துங்காற் குழற்சிக்கு மேற்சார்ந்த அலிபுடனிசுறாயீலும். (102)

இப்படிச் சேர்ந்தே கலிமாவிலே, யிருபத்து நான்குஞ் சடத்திற்குள்ளே-யொப்பமுடன் சொன்ன வகையினைத்தா, லுவர் திங் கறியவே பறுலாமென்னச்-செப்பமுடன் சொன்னார் நபியி றசூல், இருவாரும் ஹதீத் குதுசியிலே-தப்பில்லா நூஹு தா னறிந்து, தருமாயுரைசெய்தே னுலகத்தோர்க்கே. (103)

மனுடரெனுமாஞ் ஜெம்ஹூத்துவாம், வசையில்லா வித்துப் யாஹூத்துவாம்-அனிச மெனும்பூடு ஹாஹூத்துவா, மலங்காரக் கொப்புவா ஹுத்துவாம்-தனசில்லா இலைஜபறாத்துவாம், தாங்கும் பூவது மலக்கூத்துவாம்-பனசில் லாப்பழம் நாசூத்துவாம், பலன் கொள்ளும் வகை பறியுமென்றார். (104)

ஷஹாதத்துப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 24-க்குத் திருக்கவிதை 724.

---

# முரீதுப் படலம்.

## விருத்தம்.

ஆவென் றெவருந்தான் போற்றவல்லா, னல்லா திருத்தூதர் முஹம்மதருக்-கேவென் றேவினான் புறக்கானதை, யேவல் பணி விடை செய்யவென்றுங்-கோவன் றமரர்க்கோ மானானவர், கோமான் கொடுத்திட்ட குரூனயத்தை-ஊவென் றுமக்குமுன் னிருந்த வாழ்வே, யுடையோ னுமக்கருள் சலாமுரைத்தான். (1)

அல்லா தான்சொன்ன சலாமையுமோர்த், தமரர் மாராயந் தனையுமோர்த்து-வல்லான் தான்சொன்னான் சூறத்தையும், வலி யோனாயத்த தானதையும்-நல்லான் தந்திட்ட ஆயத்திற்கு, நலமா மஃனாவை நோட்டமிட்டுச்-சொல்லா லெமதும்மத் தானவரே, துணையாம் பீர்முரீ தாகுமென்றார். (2)

ஒருவன் தான்சொன்ன ஆயத்திலே, யுறுதிப் பிரிட மேதே தென்னக்-கருவி னுருவாகு முன்னிருந்த, கருணை யுடனின்று மறியவேண்டிப்-பருவமுடன் கல்பிற் றரித்ததுவும், பாங்காத் தருபிபில் வந்தபின்பு-மருவி விழாமலே வளர்த்துவந்த, வாறை யறியுங்காள் மூமின்களே. (3)

சல்பென்று சொன்ன முதுகெலும்பிற், றூற்று மொருபக்க மாணுமென்றும்-வல்லென் றொருபக்கம் பெண்ணுமென்றும், வருந் தும் நடுவினி லொன்றுமில்லை-இல்லென் றிருத்தும் ரண்டெழுத் தானதும்; இல்லல்லாஹு-வென் றானதுவும்-சொல்லி லடங்காத தருபிபுக்குட், டொகுத்த மணிநுகத் தானதுவும். (4)

நுகத்தா வுயிரொக்க நபுசோவென்ன, நலமா முயிருகும் நுகத்தாவுமே-ஒகுத்தோ டதைவளைந் திருந்தஜம்கி, லொக்கவும் நபுசாகுமது-தொகுத்திங் கறியவே பறுலாமென்று, தொகுப்பாய்ச் சொல்கிறேன் கேளுமென்றார்-பகுத்திங் கறியாம லிருப்போ ரெல்லாம், படைத்தோன் தனையறி யாதவரே. (5)

ஷப்சு வடிவாக இருந்ததுவுந், தங்க வடிவாக இருந்ததுவும் ஹப்சத் தொன்றாகி நின்றரூபம், காணலாமென்றே குறுஆனிலே-றம்சின் படிபாரும் சூறத்திலே, நலமாய் ஒல்ஸமா வானதிலே, கும்சகூடின அலிபும்லாமுங், குதறத் தானவன் கூடினானே. (6)

பிருத்தனம் பெற்றமூமினுக்குப், பெரியோன் கிருபையா யுரைத் தானென்றும்-ஆருமறி யாமலவனுக்குமுன், ஞதியாத மொன்றுனது வும்-சேரும்படி காண வேண்டுமென்று, செய்பிதி றசூல்தாம் சொல் லினர்க-ஞரிலோ ரூரு அம்மாறத்தா, முடையோன் பணிவிடை கொள்ளார்க் குங்கோன். (7)

பக்காவா மெழுத்தேழும் வணக்கத்திலே, வைத்தான் சுஜூ திலே மறுலாகவே-லிக்காவா முறப்பேழும் சுஜூதுசெய்ய, நெடி யோன்தான் சொன்னன் பறுலாமென்று-மக்காமாம் நடுவினிலோ குறுப்பு, மன்னன் பணிவிடை செய்யுமதிற்-றம்மா வெனவொரு நாட்டத்திலே, தண்ணே யறியலா மெனச்சொன்னன். (8)

முரீது கொடுக்கத்தான் பறுலாமென்று, முஹம்மது நபி தமக் கோதினன்-முரீது வாங்குதல் சுன்னத்தென்று, முஸ்தகின் முஸ் தபா வோதினர்-முரீதை யறியாமலிருக்கவேண்டா, மூமினுேரே முஸ்லிம்களே-முரீது வாங்கினுற் பீர்சொன்னதை, முழுதுங் கேட் கவே பறுலாமென்றுன். (9)

பீரா மூரீதுக்குப் பிறப்பறுக்கப், பேசினனல்லா நூற்றைம் பது-பீரா முரீதுக்குப் மகப்பறுவு, பெரியோன் ரூன்சொன்ன நூற்றைம்பதென்-ரூராகிலு மில்முர் நூறுபறு, லறியாமல் முரீதாகி ணுக்காற்-சேர்வார் கையிற் சேதப்பட்டிடுவார், ஷெய்கோவுலமாவோ வெனிஞுந்தானே. (10)

அந்த நாளேயி லிருந்ததுவு, மதைவிட்டே கெர்ப்ப மானதுவு மிந்தப் பூமியிற் பிறந்ததுவு,மினிமே லிதைவிட்டே யேகுவதும்-சொ ந்த மாகவே யிருப்பதுவும், துய்யோன் தீகாறுகாண்பதுவும்-விந்தை வித மெல்லா மறியப்பறுல், மெய்யின் பீர்முரீ தானவர்க்கே. (11)

ஆக இஃதெழு பறுலானது, மறிய வேணுங்காண் பீர்மூரீதே யோகமானசொல் அல்லா சொன்ன, னேங்கினல் நாலிற் ஹாவுரு குட்-ஏகமாய் முன்னே யிருந்ததுவு, மிப்போதிருப்பது முன்னில் நபி-தோகை மயிலாக முன்னிருந்த, துன்னையே பணியாக்கு மென வோதினன். (12)

வாஹிது றப்பில் ஆலமீனே, வணங்கு முஷாஹிதா முருக்கபா வைத்-தாவித் தூங்கினல் காலிருக்கும், தானேஹ்ராலிரும் ஹாலிரு ணுல்-ஆவிச் செய்கின்ற கோலமெல்லா, மறிய லாகுமே யெவ்வெவை யுங்-கோபித்து கோபித்து முல்ஹிமா வைத்தான்டிக், கூடலாங் கூடிக் கூடலாமே. (13)

எந்த வணக்கமுற் கபூலதாகு, மென்றால் மூன்றுண்டு முஷா ஹிதாவில்-மூந்த ஹறுபுலா மானதில்லை, மூறைபது ஷத்ததானதி லே-அந்த முஷாஹிதா வானதொன்றங், கருளைக் காண்பித்த பீர் குறத்தை-இந்த வகைமூன்று முஷாஹிதாவு, மேகனாயகன் பறுலா மென்றான். (14)

வந்த கிப்படி குருனாயத்தில், வள்ளலிறை சொன்னான் பக றுவிலே-கொந்து வீசிய மருபூவுகாண், கோமான் முருக்கபா ஏழு வகை-அந்த வகையறியாத பேர்கட், கருனாந் தெரியாது மூரீது ஹறும்-சிந்தை யிஃதெல்லாந் தானோதினான். திறமாய்ப் பகறுவின் ஜூசுவுக்குள்ளே. (15)

கூறு முருக்கபா வானதுதான் குறித்த எல்லைகயே நேர்கொள் ளவுப்-வீறில் லாமலே யிருப்பதுவும், வீரும் பாங்கொண்டு பாரா மலும்-ஊறும் வாய்வைத்தான் புசிப்பதுவு, முற்ற மூச்சைத் தம்மாக் குவதும்-சீறுக் கோபத்தை யடக்குவதுங், தீன்தீன் முஹம்மதைக் காண்பதுமே. (16)

இந்த எழுவகை யானதையே, யேகனாயகன் பறுலா மென்றான் சொந்தமாகிய இறுஷாதிலே, தோற்றும் வெளியாகு மட்டுமாக அந்தப் பார்வையில் ஐனுல்எக்கீ, னாகவேனுங் காண் மூமின்களே-பிந்த முன் சொன்ன ஹாலிறுவைப், பேரின்ப மாக நபி யோதினார். (17)

கணக்கு நிலைகொண்டு கருணை நபி, ஹாலிறு னாக்க லிப்புவி லிணக்க மறந்திடும் றப்புடைய, இல்மு வெளியாகும் இல்மு போகும்-பிணக்கம் வாராமல் ஹாஸிறுவைப், பெரிய வோர்மை கேள் மூமின்களே-மணக்குந் திருவாயிற்றிறந்துவெளி, வருங்காண் இல்முல்எக் கீனானதே. (18)

நபுசு ஹாலிறு தாயுமானால், நாலைந்து வாயி லடைபடுங்காண்-பவுசு ஹக்குல் எக்கீனானது, பறந்து வெளியாகும் பக்கானக்காப-கபுசை னிளை அதுனாவிலே, கலந்து காணலாந் திடந்தெரிய-முரு சின் திரு நபு சானதுசேர், மூஸ்த பாநபி யோதினாரே. (19)

ஆண்டோனருள் கொண்ட ஐனுல் எக்கீ, னாகு மிவையெல்லா மூஸ்லிம்களே-தூண்டா மணிவிளக்கானதுகாண், தொகுத்து நிலை கொண்டு சிர்றைப்பாரு-மாண்டார் மீளுவார் வரம்பில்லாமல், மையத் துமாறி ஹசாத்ததாகி, ஏனாரிவை யெல்லாம் ஐனுலெக்கீ-னென் கோமான் பறுலென வோதினான். (20)

ஹக்குல் எக்கீனெனக் கற்பித்தவன், ஹக்கா னவனம்மை நன்மை செய்ய-மிக்கநிலை கொண்டே னெக்கீனெனவு, மிருந்த சதுமறை குறுஆனிலே-யொர்களுஞ் சொன்னான் முரீதுக்காக, வொருவன்றனை நாடும் இல்முல் எக்கீன்-தக்க அறிவினு விம்மைப் பாருக், தரித்த எக்கீன் கொண்டே யிருந்துபாரும். (21)

இந்த விட மூன்று தலமாவதும், இருதத்துச் செய்யுந் தாலிபுக்கு-முந்து மிருபது செந்தாமரை, முருஷித் திருப்பது கல்புல்லாவாம்-சிந்தை யுடன்கண்ட மூமின்களே, தெளிவின் பறு லான கலிமாவிலே-அந்த மவுஜூதும் உஜூதஃது, மாகப் பறு லென்றான் குறுஆனிலே. (22)

இல்முல் எக்கீனென ஹக்குல் எக்கீன், இருதத்துச் செய்யும் ஹக்குல் எக்கீன்-வல்லமைத் தனங்கொண்ட மவுஜூதிலே, மத்துஹூ பானநன் னுத்துபானதைச்-செல்வ மூடனதை யடக்கிக்கொள்ளுஞ் சிறந்து மறைந்திடும் புவனமெல்லாம்-இல்மைப் பயன்கொண்ட இரவை விட்டு, மிரவு பகலெல்லா முச்சியிலே. (23)

வேனு முறக்கமு முண்டுநாளு, மொன்று மில்லாம லுவைசுல் கர்னின்-வேனு மொருவனென் றிருக்குமந்த, வேளை நபிபிறசூல் விரைந்தே-யானு வமவிட்ட அவுலியாவே, அல்லல் விடவேணு மெனவோதினார்-காண வேணுமென் றிவர்கூறதே, ஹாகி லான தைக் காணுமென்றார். (24)

இல்லென்ற பக்கா வானதுக்கும், இல்லல் லாஹுவென் றான துக்கும்-சொல்லென்ற சொல்லை மூட்டியிரு, தோற்றம் காலிரு ஹாலிருகு-மல்லுப் பிடித்துக்கொண் டுறக்கமாற்றி, மயக்கந் தனை மாற்றி நபியிறசூல்-அல்லும் பகலாக வோர்நேர் கொண்ட, அறி வைக் காணலாமென வோதினர். (25)

நாட்டம் இல்லல்லாஹு வெழுத்து, நலமா யேலையும் வெளி யில் நாட்டி-யூட்டும் வாய் வைத்தா னாட்டி மூட்டி, யோதும் ஹுவென்ற வோசைகேளுங்-சாட்டு மிவ்விடத்தாத் மறையுந், தானேன் தாத்துத் தான் வெளியாமென்றும்-கூட்டி நபியோடு தானுரைத்தான், குறுஆன் தும்மன் அல்சல்னுவிலே. (26)

ஹுறுபொன்று காணார் ஹாலிருனல், காலும் ஜல்லஜலா லஹுவே-அறபு நபியிறசூ லோதின, ரமலையுடையோரே மூமின் களே ஷுறகு மிதுவாக்கு மிபாதத்துக்குத், தௌஹீ தாருக்கா

னுலமாக்களே-இறையவன் சொன்ன னங்காளேயி, லென்னே யறிய நன் ருகப்பாரும். (27)

முத்தி லானது நபுசுக்குள்ளே, முஸ்த பாஹாவி றெனவோதி ளுர்-ஆத்துமா வான மீமுக்குள்ளே, அலிபை லாமுக்குள் ளாட்டிப் பார்க்கக்-காற்றுக் கடலுமாங் காரவெளி, கடந்துப்றந்தருள் முஸ்த கீமில்-ஏற்ற மானவன் மூத்திலாதோன், இருந்து விளையாடுங் தௌ ஹீதிலே. (28)

இதை யெல்லாம் சிர்றதெனவோதினு, னெங்கள் யாறப்பல் ஆலமீனே-பதுக்கத்தான் சொன்னன் பதுக்காமலும், பறையத் தான் சொன்னன் விதியுள்ளோர்க்கு-விதிக்க சிர்ருன காரியத்தை, வெளியாய்ப் பறையவும் ஹறுமாமென்னத்-ததிர்க்கும் வெளியான காரியத்தைத், தானே சிர்ருக்க ஹறுமா மென்ருன். (29)

ஈமா னென்பதிங் கிறைநபிக்கே, யிசைந்த கலிமாவை யோது வதும்-ஈமா னென்றது நிலைதப்பாமல், விறசூல் நபிசொன்ன படி கேட்பதே-ஈமா னென்றதி லாகு இல்மை, யிசைந்து தெரிசித்துப் பார்ப்பதுவாம்-ஈமா னென்றது பேரொளியின், றில்லல்லா சொன் னுன் குறு ஆனிலே. (30)

ஈமா னென்றதிங்க லேந்து விடா, தீமானென்றது மறைந்து விடா-தீமா னென்றது மூலேந்துவிடா, தீமானென்றது மொழுந்து விடா-தீமா னென்பது பலப்படாதிங், கீமா னென்பது நிலேபடா தென், றேகன் குறு ஆனி லோதினுனே. (31)

இப்பா லிச்சொல்லே யப்பாற்கேளுப், ஈமானிலேகொண்ட மூமின்களே-தப்பாத மொழி மெய்ப்பாகவே, தரித்துப் பார்க் கின்ற வுலமாக்களே-எப்போதுஞ் செப்புங் குறு ஆன்படி, யென்னே ரமுங்கேளு முஸ்லிம்களே-யொப்பாரு மில்லா னிணேயுமில்லா, தொருவன் குறு ஆனி லோதினனே. (32)

இசுலா மானது நபியுடைய, இல்மைப் பாருங்கள் நெறியான தின்-இசுலாமானதும், இபாதத்துச் செய்யுமவுலியாகவே-இஸ்லா மானது தீனுடைய, இயல்பாங் கோலங்க ளானதுவே-இஸ்லா மானது தசிலீமென, விசைந்த பறுலான காரியமே. (33)

இஸ்லாம் நெறிகொண்ட மானிடருக், கெங்கோ னெனும்பிரா னேதினதோ-ரிசுலா மொடுமீமான் றெளிந்துகொண்டே, யிலங்கும் கலிமாவைத் துலங்கும்நல்ல-அசலா முரீதுக்குப் பீருரைத்த, அருளைச் சொல்லவோ தாலிபாகு-இசுலா மைக்கொண்டே யாடுவோர்க்கு, மொருவன் முரீததின் வழியேபாரும். (34)

இஞ்சொலுடன் ரண்டு காரியங்கொண், டிபாதத்துச் செய்யு முசிலிம்களே-அஞ்சுமாறுங் கொண்டாடினதோ, ரதபு நெறியுள்ள முஸ்தபாவு-மிஞ்சு முரீதினுல் சலாமத்தாக, வேண்டுமெனச் சொன்னுர் சொன்னபடி-கொஞ்சம் பீர்முரீ தானவர்க்குக், கொடுப் பானிறைசொக்கப் பெரும்வாழ்வையே. (35)

நாலு காரிய மறியவேணும், நபியுல்லா சொன்னுர் பீர்மார் கட்கு-நாலு காரியம் யாதெனவே, நாலி யார்களுங் கேட்டதற்குக்-காலல்லா சொன்ன னெனவே சொல்லிக் கண்ணின் மணியான நபி யோதினுர்-ஆலமறுவாஹூமறுவா ஹூக்குள், ளமைந்த நால்வகை யறியப்பறல். (37)

றாஹூ சுல்தானி றாஹானியும், றாஹூ இசுமானி றாஹூ தானும்-ஆக விவைநாலும் பேச்சுமூச்சும், ஐனும் கேள்வி மறியப் பறல்-தோகை மயிலான் நபியோதினுர், தோத்திரஞ் செய்யும் பீர் மார்களே-ஏகநாயகன் பேச்சானதை, யின்சா னறிவதற் கறி யதுவே. (37)

மின்னில் லாக்குழி யுச்சிதனில், வீசி நுக்தாவை அலிபாய் வைத்தே-அன்ன நடப்பறி மூலமதி, லதிலே நின்றொரு விலாசம் செய்து-பன்னி யெழும்பிப்பின் தாமரைக்குட், பரிந்து மேற் கொண்டு நெஞ்சில்வந்து-தன்னுள் கல்கினில் வந்துநின்று, தரித்து நாவினிற் பேச்சானதே. (38)

மட்டுவிழ அவிழ் நுக்தாவினில் வருந்தி, முன்சொன்ன மூல மொன்று-தொட்டு விளைவாக்கி யதுநேர்கொண்டு, தொகுத்து வலத்திடந் தன்னிற்சுற்றி-யெட்டிக் கடந்துபின் வந்துசேராய். இயல்பாம் பேச்சான காரியம்போ-லொட்டி விளையாடிப் பார்வை தானு, முறுதி யிருவிழி யானதுவே. (39)

முன்னே வந்தது நுக்தாவினில், முழுதும் பேச்சாச் சுறாஹா னிதான்-பின்னே வந்தது நுக்தாவினிற், பெருப்ப மாயுள்ள கேள்வி யாச்சு-வன்னம் பலவாக நுக்தாவினில், வந்தது பார்வை கண்ணுச் சுதே-என்னு ளளவிலே வந்ததுதா, னிரவு பகலான மூச்சானதே.()

றாஹு மூச்சுறா ஹானிதானும், றன்னி தாகியபேச்சாச்சுது வேக சல்தானி கண்ணுச்சுது, வேந்தன் கேள்விதான் இசுலாமாச்சு-ஆகும் றஹமானி றப்பானியும், அருளும் சவாதானி புறக்கானியும்-தாகம் அபுஜனி சுரியானியும், தானே கொபரானி அறபானியும். ()

இந்த வகைப்பாஷை றாஹானிக்கி, இசைந்து தெரியாது றாஹதுக்கு-கொந்து நறைவீசும் நபியோதினர், குத்துப் பீரான மூரீது மார்க்கே-அந்த யாசீனென் றுனதிலே, யருளும் சுரியானிப் பாஷைகொண்டு-விந்தைப் பதினெட்டு இசுமோதினன், இசுமை யறிவது பறுலாமென்றான். (42)

பதினெட்டான தும்பரிந்தஇசும், பாரும் பீர்மாரே மூரீது மாரே-அது திட்டமதாகத் தெரிசித்தாக்கா, லந்த யாசீனை யறிய லாகும்-இதனா படுங்கண்ணு மூக்கும்நாக்கும், இசுமை யோதினல் விரணமாகு-மதின நபியந்த ஹேமீமென்று, மஃனு சுரியானிப் பாஷை யென்றார். (43)

அந்த யாசீனென் றுனதுதா, நகமும்புறமுமா யலங்கரிக்கும்-சொந்த ஹவாவான வும்மத்தோடும், தொடர்ந்தே யின்வரு மூச்சினூடே-விந்தை யானமீ மானதுதான், வெளியிற் புறப்படு மொளிவாகவே-இந்த வகைஇசும் ஹூவேயென்ன, எங்கள் நபி யிறசூ லோதினர். (44)

அலிபுலாமீ மென் றுனதுதா, ஞல மடங்கலு மாண்டபிரான்-ஒலிகள் தான்மஃனு விள்ளாம, லொருவ னறிவா னென் றேயோதி னர்-வலிய மஃனுவை ஷாபி யிமாம், வருத்தி னனெனக் கல்லாதர் தான்-அலியாம் ஹலறத்துப் புலிமாமனு, ரவர்கள் முன்னல்லா வோதினனே. (45)

உம்மில் கித்தாபிலே யோதினதை, யுலமா வரியுங்கா ளொலி மார்களே-செம்மி இருக்கின்ற லாஹிறிலே, சிறந்தே யிருக்கின்ற மஹுஹறிலே-கும்மி விளையாடும் அலிபுலாமீம், குதறத் துப்பெற்ற அலிபாம் கலாம்-பம்மி யறியாத மஹாபூலெனும், பலகையாகுங் காணலா மாமது. (46)

தாமே தம்மினில் விளையாடச்சாக், தேமீம்யெனச் சொன்னு ரிருபேர்களும்-லாமை வருத்தின தாஹிறிலே, நிலையும் வருத்தி

னுன் பத்தினிலே-சாம மறியாமற் சாஹிபுபீர், தம்மை யறிவதே அலிபாமென்று-கோமா னிவையெல்லாங் குறியாகவே, கொண்டு வரவுமே பறுலா மென்றான். (47)

சேயமாகவே சொன்னது பார், தெறியா மிவையெல்லா மறியவே தான்-ஏயும் நிலைகொண்ட தஸ்வீஹிலே, யேயை நிலை கொண்ட பக்காவானதும்-சேயும் நிலைகொண்ட சீனுனதும், நெடியோனிலை கொண்ட ஏசீனென்றே-காயம் பலகோலம் படைத்த கோமான், கல்புதனில் கன்றுயறியச் சொன்னான். (48)

தன்வீ ஹதனில் ஏயாவதுவுந், தசபீஹாக்குள் ஷீனுனதுவு மஞ்சுருடையிடு கபியோதினர், மன்னன் றூன்சொன்னான் தன்னா னெனக்-கெஞ்சி மவுத்துக்கும் ஹயாத்திற்குந்தான், கிருபை நடுவான நூனுனதும்-அஞ்சி யருளெனும் இல்முல்க்கபீ, றருளாங்கித் தாமினி லோதின்பதே. (49)

இன்னுஞ் சிலதுள துரைக்கக்கேளு, மென்று லறியதே யறியவேதான்-பன்னுங் கல்புகொண் டறிந்துகொளும், பகரு மதிலுள்ள பயனுனதை-நண்ணும் வகையாகச் சொல்லுகிறே, னல்கு மதிலுள்ள பொருளானதை-யெண்ணு மெழுவகைத் தோற்றமாக, இசைந்து நாயன்றுனோதினதே. (50)

சாதினடுவிலே யானதுதான், சாதுகபிப்பட்ட மானதுவும்-ஸாது மஃனுவை யுமில்கித்தாபிற், சாற்றி னுனல்லா வுண்மையாகச் ஸாதிலிறையவன் றசூல் பாதத்தைத், தாங்கி னுன்சிங்கா சனமானதைச்-ஸாதின் மஃனுவால் கபியை யேந்திச், சாலே சமதாக நிறைந்ததுவே. (51)

தன்னா னடுவாச்ச மக்காமாச்சுது, தன்னானே கிபு லாவாச்சுது தன்னான் தாமரை தானுச்சுது, தன்னான் தரிபட்ட கல்பாச்சுது-தன்னான் ஷிதுறத்துல் முந்த ஹாவாம் தன்னான் மஃனுவால் கபியை யேந்தித்-தன்னா னொளிவுதான் ஜலாலாகவே, தக்கள் ரிலையக் கொண்டேறினதே. (52)

அருளாங் காபுதான் சிரமாச்சுதங், காண்டோன் ஹலறத்துத் தலமாச்சுது-பொருளா மஃனுவை இசுமுல்க்கபீர், பொருந்த இருத்தினுன் பதியிலென்றும்-வெருளாம் பயப்படாம் காபானது, வேந்தன் ஹறுபுதா னொளித்திராது-மருளாம் பெண்ணுக்கு மாணுக்குந்தான், மஹ்பூபு சுபுஹா னோதினன். (53)

உச்சர் தலையாச்சுக் காபானது, முன்னும் நடுவாச்ச நூனைது வச்ச பதமாச்சு லாதானது, வரிசை அலிபுலா மீமானது-மெச்சு இடத்தினின் றேதிரும்பி, இயல்பாம் அவ்வலாம் லாகிறுவாம்-சகச்சு வடஞ் செய்யும் பீர்முரீதே, ஹாமீம் பறுலென்று காமில் சொன்னான். (54)

அந்த ஹாமீமென் றானதுவும், அந்த யாசீனென் றானதுவும்-அந்த தாஹாவென் றானதுவு, மந்தவொளியினு பூசானது-அந்த நீயல்லால் வேறில்லையென், றான மூமினில் அன்று சொன்னார்-அந்த மவுலாகா வுயர்ந்தவரென், றப்படிச் சொன்னார் ஜிபுரியீலே.()

இங்ஙனே சொன்ன மூமினென்று, மிபாத்துச் செய்யு மிபாதத்தைக்கொண்-டங்ஙனர் கொண்ட பதினெட்டிலு, மல்லா சொன்னும் மில் கித்தாபானதில்-முங்கி னூற்காண்பார் முஹம் மதுவே, முஸ்தபா சொன்னார் வஸ்துவாக எங்கே பார்க்கவும் வேண்டுமென்றே-யெங்கள் கோமான்பீர் மவுஜூதல்லா. (56)

அலிபு லாமும் மவுஜூதென்னு, வறுமூன் றானதி லாராய்ந்து பார் அலிபு லாமுமீ மானதிலு, மறுநான் கினிலும்பாறாறைந்திலும்-அலிபுலா மீம்கபீ றனசீனும், அலிபுலா மீம்சஙீ றனமீமாம், அலிபு லாமீம் தாலானதிங், கலிபுலா மீமின்சா லையம்பத் தொன் றும்-அலிபுலா மீமறு வாஹானதும், அலிபுலா மீமறுவாஹானதும் அலிபுலா மீம்தம் மானதுவே. (57)

ஆத மானது சூறத்தாச்சிங், கல்லா தாத்திலே சிபாத்தாச் சுது-ஜீவத மானது மோஸையாச்சு, பிசிமில் அஸ்லம் விலாயத்தாச் கப்போதமானது மில்மாச்சுது, புகழே அல்ஹம்துலில் லாகியாச்சுப்-சாத மாச்சுது சாறத்துல்லா, தந்தை யானது விந்தானதே. (58)

இதுகள் யாவுமே பறுலாமென்றே, யீஸாநபிசுரி-யானியிலே-வதுவாயாடிப் பொன் னூரினிலே, வல்ல நபியிறசூ லோதினார்-முதுமையானவர் நபியாமென்று, முறுஷிதானவர் மூமினென்றும் புதுமை யினமொன்று லபுலின்படி, புகலக் கேளுங்காள் நபி சொல்லையே. (59)

அவ்வலானதும் ஆகிறுவும், அஹ்மா தானது முஹம்மதும்-எவ்மல் லாகிறும் பாத்தினியு, மேகநாயக னபியானதும்-கொவ்மன் தன்ஸீஹாவுந் தசுபீஹாவுங், குறுத்தா நபியிது பார்த்தானதும்-செவ்விலே வந்த பஞபக்காவும், செப்பு மிவ்வகை மெய்ப்பாகவே.

இரவ தானதும் பகலானதும் இருளே யானதும் வெளியான தும்-குருவை விடுவதும் ஆணும்பெண்ணுங், கூடிஹயாத்தாகி மவுத் தானதும்-பறவை வித்தான மூத்தானதும், பாவி யடியார்கள் பிழை பொறுத்துச்-சருவபீரோடு தாலிபுவைத் தங்கள் நபிஷபா அத்தானதே. (61)

இந்தப் பனிரண்டு பறுலானது, மியல்பா யோதினுர் பெரி யோர்நபி. சந்தப் பெரும் அவ்வல் காயானதும், தரித்த ஆகிறு மீமானதும்-எந்தன் படியென்ற அல்லாசொன்னுன், ஏகன் லாகிறு ஏயானதும் வந்தவஹீனுச்சு பாத்திலெனும், வழமை பொறுத்துள்ள காரணமே. (62)

கண்ட குறுஆனி லோர்சூறத்திற், கண்டேனெனச் சொன்னுர் ஆலநபி-விண்டார்-அவ்வல்ஹா மீமானதில், மேலோன் ருன்சொன் னுன் ஹேமீமுக்குள்-ஒன்றுக் கடங்காத தன்சிஹிலே, யோதும் காபுஹே ஏஐன்சாது-விண்டார் ஹேமீம்ஐன் சீன்காபையும், வேந்தன்தான் சொன்னுன் சூறத்திலே. (63)

நல்லஆகிறு தாயுமாக, நபியா மூஹம்மதுதாமோதினுர்-இல்லை அவ்வலும் ஆகிறவும், இதமா யிருக்கின்ற எழுத்துப்பத்தும்-சொல் லில் நிரம்பிய தௌஹீதைதச், சொல்லத் துணிவது மூமின்களே- வல்லமையான கலிமாவிது, வருடிப் பாருங்கள் மூமின்களே. (64)

மன்னு மனுஹறு மிருளாகியே, வருமாம் நுக்தாவை அலிபு மாக்கி-யுன்னு மதில்மட்டாய்ச் செலவாக்கியே, யுடலுக்குள்ளொரு தறுயிபுவை-என்னு மதினுட கல்க்கை யெல்லாம், இன்சா னுக்கியே இணமாக்கினுன்-நண்ணு மதினுடமல்னுவைத்தா, னுயனில் மான திலே சொன்னுன். (65)

ஹூவென் றேகாடி யிருப்பதற்கு, ஹூவென்றேயிறை சொன் னதுகேள்-ஹூவென் றேயிரு விழியடைத்து, ஹூவென் றேயிரு செவியடைத்து-ஹாவென்றே யிருவாயடைத்து, ஹூவென்றே மூச்சை வாங்கியோங்கி-ஹூவென் றேயோசை கேட்கக்கேட்க, ஹூவென்றேயொளி வெளிக்குமேலே. (66)

அந்த வெளியான காலேயிலே, அஹது நாயனை யறிந்துகொண் டே-அந்த ஹேமீமாம் துயில்விரித்தே, அச்சமாகவே தூங்கி நாக்கால்-அந்த யாசீனே வெளியாய்வந்தங், கரூப ரூபமாய்ச் சரூப மாக அந்தத் தாஹாவைப் பேரூக்கி, யானு லெனவேண்டு மெனக் கேட்குமே. (67)

அப்படிக்கேட்ட காலத்திலே, யதிலேதான் கேள்வி கொடுத் திருக்கத்-துப்புர வான சமதானது, தோற்றுமொரு பட்சியாக வந்து-மெய்ப்பாம் காலமுல்லா தனக்குவரு, மேலோனில் மெழுத் தாக்குமஃ-தொப்பு மூவமையு மில்லாதவ, ஞேடு மிடமது தெரி வருமே. (68)

அந்தவேளையிற் றாக்காஃ, தாகா திரியுங்கள் மூமின்களே-அந்த வேளையில் மயங்கினுக்கா, லான பயித்தியந் தான்பிடிக்கும்-அந்த வேளையிற் கேட்டதெல்லா, மான நாயகன் கிருபைசெய்வான்-அந்த வேளையில் மனுஹறுகும், ஆனுலறியுங்காள் மூமின்களே. (69)

நுகத்தா வுயிரோகண்ணபுசோவது, நுக்தா வுயிரோடு நபு சாபஃ-தொகுத்தோ டதைவனைப் திருந்தஜமமி, லொக்க வும்மது தானுமது-பகுத்தங் கறியாத பேர்களெல்லாம், படைத்தோன் றனையறியாதவரே-மிகுத்த பிரமாண மிதுவாமென்று, வேதாம் பார்க்கிதை விண்டோதினுன். (70)

அல்லா வென்றசொல் லானதுக்கிங், கான இருபது சிபத்துண் டென-ஒல்லா முன்சொன்னுன் பகுமுண்டென, வுயர்தோன் ருன்சொன்னு னில்முண்டென-வல்லோன் தான்சொன்னுன் அக் கிலுண்டென, வண்மை யாகவே குறு ஆனென்றும்-நல்லோன் ருன் சொன்னு னில்லுண்டென, நாடுங் கண்ணுடி யிதுவேயென்றும். ()

மூனு நுக்தாகவே குறுஆனுக்கு, முற்றுர் தேய்க்கும்சீ ஞன துக்கு-ஆனில் ருதுவான ஆனுக்கென்றும், அல்ஹம்து லில்லாஹீ யானது-காணுப் பெண்ணுக்கே இல்லையென்றுங், கண்டா லறியுங் காள் பெரியோர்களே-தோனச் சொல்கிறே னின்னமொன்று, சொல்லப்பாருங்காள் யாசினிலே. (72)

ஆதம் பரிசாகு மெனவோதினு, னறிவு முஹம்மதன் றேபேசினுன்—வேதம் யப்தமாய் இறையோதினுன், விளங்கும் விண்ணொளி தானேதினுன்-போத மிறசாதென் றேயோதினுன், போஜனர் வித்தென்லே சொன்னதாத்-சாத மறிந்ததும் இசாறத் தெல்லா, தனக்குச் சஜூதிட்டா ரிப்படியங்ஙனே. (73)

அல்லா சொன்னது காலமுல்லாவாம், அதிலே திருந்திய திறகு லுவாம்-ஒல்லா சஜூதுக்கங் கிடமுண்டாச்சே, பொருவன் றனக் காகப் பறுலுமாச்சே-எல்ல சன்னத்தும் நபிக்காச்சுதிச், இல்முக்

இடமாச்சு ஷெய்குமார்கள்-வல்லா னிஃதிலோ செழுத்தாச்சுது, வகுத்துச்ச யக்கூலில் வகுத்தனனே. (74)

ஹாவென் ஞெருமூச்சுப் புறப்பாகவே, கவனுர் தாலென்றே யுள்வரவே-ஆவென் ஞெருமூச்சங் ககம்வரவே, அல்ல வொருமூச் சுப்புறம்போகவே-ஈயென் ஞெருமூச்சு யுள்வரவே, ஊவென் ஞெரு மூச்சுப் புறம்போகவே-மேவென் ஞெருமூச்சை யுள்ளேவாங்க, மேன்மை யாகுமே மூமின்களே. (75)

யாவென் ஞெருமூச்சு யுள்வரவே, யாசீ னெருமூச்சுப் புறம் போகவே-ஹாமீவென் ஞெருமூச்சு துள்வரவே, ஊஅனுவென்று புறம் போகவே-ஹாவென் ஞெருமூச்சுப் புறம்போகவே, ஹமீ மொரு மூச்சு துள்வரவே-ஹாமீவென்ற மூச்சுக் கோடாகோடி-குருவி னிலையான வழியாகுமே. (76)

கோடானுகோடிச் சம்சுகளுங், கோடானு கோடிக் கமறுகளுங்-கோடானுகோடி நஜூமுகளுங், கோடானுகோடி மின்னிலையுங் கோடானு கோடிக் கதறுகளுங், கொண்டாடு மந்த வெளியானதிற், கோடானு கோடிப் பாஷைவருங், குருவின் மொழியான பாஷைகளே

ஆவென் றலிபுதான் தானனதே, அலிபில் மூன்றுதான் வகை-யானது-சோவென்ற ராஜன் கூப்பிட்டது, ஹாவென்றே முஹம் மதுவானது-மேவென் றேசொலி விண்டதுவு, மிகுரு ஜிலன்றங் கழைத்ததுவும்—தாலில் வகுத்தானே முஹம்மதுக்குத், தானு யிருந்ததங்கிம் மூன்றுமே. (78)

கண்கொண்டே பார்க்க மூன்றுவகை, கமலும் கல்புடன் கமல வுச்சி-முன்கொண்டு பார்க்கச் சொல்லுகிறேன், முறுக்க பாவென்ற மூலமது-பின்கொண்டே பார்க்குஞ் சமதானதை, மின்கொண்டு பார்க்கு மூமின்களே-மன்கொண்டே பார்க்கும் ஷெய்குமார்கள், வகை கொண்டே பாரு மூலமாக்களே. (79)

காபு ஹேஎஜன் சாதானதுங், கருணை யெழுத்தைந்தும் சாதானதும்-கோவும் கஃபத்துல் லாவிலேயும், கோமான் பயித்துல் மகு மூறிலு-மேவு மறுஷோடு குறுசிலேயும், மேலோன் மகாமேரும் வானத்திலும்-ஆகும் படியிந்த ஐங்தெழுத்தை, அறியுங்காள் நல்ல மூமின்களே. (80)

காபு நின்றிடம் கண்மேருவாம், ஹேயும் நின்றிடங் கஃபத்துல் லா-ஏயும் நின்றிட மகுமூறுதா, னேகன் ஐனுமே அறுஷதாகும்-மேவும் சாத்து குறுசதாகு, மேலோன் குறு ஆனிலோதினனே-யாவும் நின்றிட மிப்படியாம், நாலாம் பாதையி லோதினனே. (81)

இந்தப் படியேதானீர் தெழுத்தை, யீமா னுள்ளபே ரறிய விதி-அந்தப் படிசொன்னான் குறுஆனிலே, அல்ஹம் தைந்தெழுத் தானவைவைச்-சொந்தப் படிசம்சில கமறிலேயும், தொகுத்த நஜு மிலும் வானிலேயும்-சந்தப் படியன்ன வகையைந்திலும், தானாய் நிற்பதும் வெளியாகுமே (82)

ஆனலிவைகட் கோரிசுமோதின, னதுவே தௌஹீதுக் காணி மூலம்-தேன லதுகாதி ருகவேணுந், தேகந் தனை மூன்று நாளேக்குத் தான்-மானுருறக்கமு மூனுமாற்றி, வருந்தி முருக்கபா வொதுக்கங் கொண்டு-கோமான் பதின்மூன்று மெழுத்தைநாடிக், குறித்துப் தாருங்கள குதறத்தினல். (83)

அலிபு லாமீமும் காபுஹேயும், ஐனும் சாதும்யா சீனதையும்-அலிபு லாமீம் தேயானதுவும், ஆனல்தா ஹாநூன் காபானது-அலிபு லாமீம் ஏயானதுவும், அந்த ஹேமீமே யானதுவும்-அலிபு லாமீமில் நின்ற கோலம், அல்லா ஹுவதை யறியச் சொன்னன். (84)

அலிபு லாமீமே யானதின, லதுவே தௌஹீதுக் கச்சாரமாம்-அலிபு லாமீம்தன் குதறத்தின, லன்று கூறிருள் நுக்தாதது-அலிபு லாமீமே வெளியானது, அஹது அஹமது முஹம்மதாச்ச-அலிபு லாமீமே யதிலேநின்றும், அஃலம் ஆதமென் றானதுவே. (85)

தன்னூ னுனதுத் தம்மீமையும் தன்பேபானதும் தன்தம்மதும் மூன்னூ னுனது சர்றதுவாம், முதமா வாகிய நானதுவும்-பின்னூ னுனதி லுயிர்நிற்பதும், பேரும் பிறப்புமுண் டானதுவே-மின்னு னுனதில் விளங்குகின்ற, வேத நாயக னேதினனே. (86)

அறிவைக் கொண்டு தானறிவு தன்னை, யறிந்திமா மத்துச் செய்ய வேணும்-செறியு லாமினி லொளிவு வந்தாற், சிறந்த நபியி றசூ லொளிவாம்-மறியா தலிபினி லொளிவுவந்தால், மன்னன் தானவ னொளிவா மென்றுங்-குறியாம் ஹேயினி லொளிவுவந்தாற், கோமான் ஹலறத்தி னொளிவாகுமே. (87)

ஆனா லிருக்கட்டு மப்பாற்கேளு, மாகு மொளிவுதான் முன்னே வந்து-கோனா னவனது முகத்தை முத்திக், குறித்தே நடுவுச்சி தன்னை நோக்கித்-தேனா னிருவிழி நடுவில் முத்திச், சிறக்கு மிஃ தென்னைப் பார்த்ததென்று-தானாய் மொழுந்திடில் நபிநூறது, தாங்கு மபூபக்கர் மொழிந்ததுவே. (88)

மத்தே நெடிதாக நின்றதுவு, மத்தே சுல்பாத வுறைந்ததுவு-முத்தே ஜெயமாக வுறைந்ததுவு, முதலே னுக்தாவு மிருந்தது வுங்-குற்றே பிரமாண மாக்கிக்கொள்ளு, கோமான் சவருசேர் கிடஞ் சொல்கிறேன்-உற்றே யிதனோடே சவர்சேராகு, முண்மை யாய்ச் சொன்னான் யாசீனிலே. (89)

ஆனாலது கேளுமுமின்களே, யருளு முள்ளீர் லிஃதேயெல் லாம்-ஆனா லிராலும் பித்துமாக, அருந்து நுரையீல் கருவிராலுந்-தேனார் சிறுகுடற் பெருங்குடலுஞ், சேர்ந்த தாமரை யானதுவுங்-கோனான் பதின்மூன்று ஹறுபுதனிற், கொண்டாடிக் கொண்டு நின்றிடுமே. (90)

அல்லா தனக்கிரு பதுசிபத்தும், அன்பியா நபிக் கைந்தைந்து நா-லெல்லா மிஃதெல்லாம் கமறுஷம்சும், ஏகும் ஹேறயினில் மூன்று வனக, வல்லான் முதல் வீட்டில் ஹாவெனவு, மன்ன னடுவீட்டில் ஹூவெனவும்-நல்லான் சுல்புக்குள் ஹீயெனவும், நாய னுமத்தை யோதுவதே. (91)

இல்லென் றனதை சுல்புக்குள்ளே, இருத்தி இருகலை தன்னை வாங்கி அல்லென் றனதைக் கமலத்துள்ளே, யடைத்தே திறந்திடு மப்போதிலே-நல்ல ஹூவான ஹூவானதை, நடுமக் காமிரு விழி நடுவிற்-சொல்லிச் சொல்லாமல் நோக்கினுக்காற், றோற்றும் நபிநூறு துலங்கிடுமே. (92)

இந்த வகையினாற் றண்டானது, மிமிர்தக் கலிமாரண் டெழுந்தானதும்—சொந்தப் பார்வையில் ஷாஹூதானதும், சுபுஹா னோன்சொன்ன படியானதும்-வந்து ஷம்சிலே முகத்தை மூட்டி, மலுஹறுப்பார்வை மனதினாலே, சிந்தை தெரியவே பார்த் திருந்தால், ஷெய்கைக் காணலாந் திருநாமமே. (93)

சங்குவலம்புயு காதிரியாந், தானுமுத்து றசூலுல்லாவாம்-பொங்கு மயிலது றசூலுல்லாவாம், பொருந்தும் எக்கீன்மாங் காதிரிய்யாம்-எங்கு மிருந்ததும் றசூலுல்லாவாம், மேக மானதுங்

காதிரியாம்-தங்குங் கலிமாவே றசூலுல்லாவாம், தானா யிருந்தது காதிரிய்யாம். (94)

உயிராம் ஹறுபுதான் காதிரியை, யுற்றே யதிற்போட்டு முஷா ஹிதத்தைப்-பயிராக் கிடிலது பெருப்பமாகும், பவ்வக் கடலது மூமின்களே-தயிராகும் வெண்ணெய் தானுமாகுங், தன்னை நெய் யாரு முகந்தெரியுங்-கயிறு கும்நல்ல பறக்கத்தாகுங், காதிரியத்தைப் பிடித்துக்கொண்டால். (95)

குறுஆனி லிஃதுண்டோவென்று,கூர்மை யுலமாவோ டெதிர்த் துக்கேளுங்-குறுஆனி லிஃதெங்கே யுண்டுங், கோர்வை நாயகன் சொன்னதெங்கே-குறுஆன் றனக்குத்தாய் பாத்திஹாவிற், குற்ற மின்றியே நித்தஞ்சொன்னான்-குறுஆன் தபுசீறுங் கமாலியத்தைக், கூர்க்கவறிந்தவர் கூறுவாரே. (96)

பாத்தி ஹாத்தனி லெங்கேவரும், பரிந்த வுலமாவே கேட் டாற் சொல்லும்-எத்தமாகிய ஸவ்மித்தினென், றெவர்க்கும் பெரி யவன் தானோதினான்-சாற்றுங் கலிமாவி லெங்கே வருங், தானே தன் சிஹாக் கலிமாவிலுஞ்-சூத்திர மான ஷஹாதத்திலுந் தொல்லை யில்லாததையிபிலும். (97)

ஆத்ம தவ்ஹீதுக் கலிமாவிலும், அல்லாதன் சொன்னான் காதிரியைப்-பார்த்த பேர்க்கது தெரியுமென்றும், பாரா தவர் கட்குத் தெரியாதென்றும், நேர்த்தியாகவே அல்லா சொன்ன னினைவில் யாகவ்துல் அஃலமதை-யூற்றும் றஹ்மத்தால் பறக்கத் தினால், ஒல்லா இல்லாத இடமில்லையே. (98)

எல்லா ஷெய்குமார் போலல்லவே, யெங்கள் ஷெய்குயா கவ்துல் அஃலம்-வல்லான் றனக்குள்ள சிர்றுகளை, வருந்தும் சிர்றிற் சொல்திக்கிறானது-நல்லான் கலிமாவில் லாமானவர், நலங்குந் துனியாவிற் பேரானவர்-எல்லா பறக்கத்து முள்ளஷெயகா, மிவை ரத்தான் ஹாலிருக்கிக் கொள்ளே. (99)

இந்தச் சடலத்திற் புதுமைகேளீ, ரேக னருட்படி யிறசூல் சொன்னார்-வந்த படிமூன்று வாயிலுண்டு வரப்பி லெழுத்துண்டு மெழுத்திருக்கும்-அந்த எழுத்துக்கோ சவருமில்லை, யதுக்குச் சேரில்லைப் பேச்சுமில்லை-எந்த வகையாலே ஹிச்சிடுவே; னியம்பி ஹிச்சிட இயல்புதந்தான். (100)

ஏழு வகையான தௌஹீதிலெ, தெல்லோர் கட்கூமே தெரிய வொண்ணு-தாளும் பெரியோர்க்குத் தெரியுமிலெ, தானு லொசிய்யத்தை யரிந்தவர்க்கு-நாளும் நபியுல்லா தமையறிந்து, நாலு யார்களோடுடன் பேசியே-வாழி முகமான தௌஹீதிதை, மன்னு மென்னவோதிக் கொள்ளே. (101)

நண்ணுங் கலாமுல்லா வானதிலே, நாளோர் வர்த்தகன் ஹாசிலாக்கி-லென்னு மவர்குள்ளே பிரியமாகு, மேகனபி யிறசூ லோதினர்-கண்ணின் மணியான கிலாமுல்லாவிற், கட்டை யொடுநெட்டை படாத வண்ணம்-அண்ணல் அஹதான வஹதியத்தை, ஆகும் நபி யிறசூ லோதினர். (102)

மூந்த முதலான கலிமாவிலே, முஸ்தபா சொன்னர் குறுனயத்தில்-விந்தை யாகிய ஷரீ அத்துடன், வேந்தன் தரீக்கத்து ஹக்கீகத்துடன்-அந்தமாகிய மஃரிபத்தும், அவ்வலாகிறது மதினுடனே-சொந்தமாகிய ஹயாத்துமுண்டுங், துல்லிப மான மவுத்துமுண்டு. (103)

இன்னஞ் சொல்கிறேன் கலிமாவிலே, யியல்பாம் பனுபக்காவானதுவும்-உன்னுங் தன்சீஹா தசுபீஹாட, ஹுறுதி லாஹிறு பாத்தினுவும்-பன்னுங் காபிறு மிசுலாமுமே, பகர்ச்சை யாகிய ஹறாம் ஹலாலும்-பின்னும் இதுபாத்து நபியுடனே, வேந்தன் கலிமாவி லுண்டே யென்றார். (104)

ஊட்டு மங்கூசு, மம்கூசுட, ஹுண்மையாகிய பறுலுகளும் நாட்டும் சுன்னத்தும் வாஜிபுவும், ஈளின மாகிய அதபுடனே-கூட்டுங்கலாவுடனுயனுக்கும், கோமான் திருத்தூதர் முஹம்மதுக்கு மூட்டு மீமானைக் கொண்டதற்கு, முற்றும் நபுசைந்த துண்டா மென்றார். (105)

கருணைக் கலிமாவி லம்மாறுவும், கனதி லவ்வாமா முல்ஹிமாவும் பொருந்து முத்ம இன்னுவானதும், போற்றுங் தாத்தான நபுசானதும்-விரண மில்லாம லுண்டானதும், விஸ்தீ ரணமான சிபாத்தானதும்-தருணந் தனக்குள்ளே மலக்கு வந்து, சாற்றினுனயன் சாற்றினதை. (106)

வீறு நாயகன் சொன்னதெல்லாம், வேந்தன் நபிபிறசூல் கேட்கவே-ஆறு நான்குள்ள கலிமாவிலே, அழகார் நாசூத்து ஜபறூத்தும்-ஊறு மலக்கூத்து லாஹூத்துட, ஹுற்றஹாஹூத்து பாஹூத்துடன் மீறும் ஜெம்ஹூத்து, இன்னஞ் சொல்ல, விபரம் ஜமாலுடன் ஜலாலேயுமே. (107)

துய்யவன் சொன்ன கலிமாவெல்லாந், தொடர்ந்து நாயகன் குறுனயத்தில்-ஹையுல் கையூமோ டேழாயத்திற், கற்பித்தா னின்னஞ் சொல்லக்கேண்மோ-மெய்மை யாகவே சொன்னனென்று, மேலாம் நபிசொன்ன ருண்மையாக-வையம் புகழ்ஹபீப் நபியிறசூல் வருத்தே யதிலுள்ள வகை சொல்வதாம். (108)

இதுவெல்லாம் ஆமம் கபீறிலேயும், இன்ஸான் அறுவாஹு சகீறிலேயும்-பதிவா யறயத்தான் கலிமாவிலே, படைத்தோன் சொல்லினன் குறுஆனிலே-மநியா லறியாத பேர்களுக்கும், வணக்க முண்டுமோ வணங்கினலும்-விதியார் படும்பாடு மேலுண்டென, வெற்றி நாயகனேதினனே. (109)

தந்தன் றிருக்கையா லமைத்ததிலே, தன்னிலொரு நுகத்தாவை வைத்து-அந்த நுக்தாவை ரண்டதனில், அவ்வ லில்வாயிசல்பில்வந்து-சொந்தமாகிய லாமில்நின்று, தூராய் வரவேனுமிருலா மொன்ருய்க் கொந்ததாகிய சல்பில்ஹாவைக், கோமானெழுத்திது தானுமொன்ரும். (110)

கல்பில் நின்றொரு அலிபெழுந்து, கருணை நெஞ்சினில் ஹேபில் வந்து-வெல்லு மீமானுக் கல்பில்வந்து, விரைந்து நாவானதானதைச்-சொல்லுஞ் செயலான சொற்செயலைச், சுற்றி வருவது சூரியனும்-வெல்லுஞ் செயலான சந்திரனு, மன்னன் வெள்ளியும் வகையஞ்சுமே. (111)

அஞ்சு முன்சொன்ன எழுத்தானது, அவ்வல் தையிபு பனுவாச்சுது-கொஞ்சு மேமெழுத் தானதுவே, குறித்துப் பகாவாச்சுதின்னஞ்சொல்ல-மிஞ்சு தாய்தந்தை வீஜையும், மேலோன் றனக்கெல்லாம் பயமானதும்-பஞ்ச மீதினில் நான்குவகை, பனுவான இன்சா னறுலாஹிலே. (112)

இன்சா னறுவாஹு சகீறுக்குள்ளே, இஃதெல்லாம் பனு பகாவானமூலம்-துஞ்சாஹபாத்தினுக் கேமெழுத்துத், துய்யோன் தான் சொன்னன் பகாவாய்ச்சுது-துஞ்சான் அலிபாச்சு இதுபாத்தெஹுங், தூயோ னபியாச்சுக் காபானது-மன்று கெஹுமொரு மீமாச்சுது, மநுஷக் காச்சுது யேயச்சுது. (113)

ஆறு வகையான காரியத்தில், அல்லா முஹம்மது வானதுவும்-மீறும் சுபுஹானி மவுஜூதென்னு, மிகுந்த தாலிபு மஹாபூபென்னும்-ஹறும்பதினென்கல்வெழுத்தானதுவு, மொருவன்குத்துபாவை

யோதினதும்-கேறிடும் ஜம்ஆ வானதுவுங், கேள்வி மஹ்ஷக்கி லோடுவதே. (114)

வன்ன மஹ்ஷரிக்க ளைந்தெழுத்து, வருத்தினா னிசுக்கைந் தெழுத்துச்-சொன்னான் ஆஷிக்க ளைந்தெழுத்துத், தொகுத்தும் பின்னுந்தான் சொன்னானல்லா-மன்னன் படைக்கமுன் னைந்தெழுத் தும், மத்லூ பாகவே சொன்னதுபார்-பின்னர் படைத்தைந்த தெழுத்தாக்கினான், பெருத்துப் பறந்துபோ மைந்தெழுத்தில். (115)

ஆகப் பதினைந்தாய் வந்ததுவும், அதனாற் பதினைந்தாய்ப் போனதுவும்-கோகப் படும்பதி னைந்தானதுங், குதாய்தன் னடிமை கள் பிழைபொறுத்துப்-போகப் படும்பதி னைந்தெழுத்தாற், பொன் னார் தந்தல்லா தீதாறெனும்-நோகவல் லாவேலை செய்தானென்றும் நோக்கினார் நபி பாக்கியமே. (116)

பூரண முண்டான பதினாலைத்தான், போத மறிந்திடவேணும் பரி-பூரணமென்றார் பதினைந்தையும், புதியோன் திருத்தூதர் பயஹாம்பரே-ஆரும்பூரணம் பதினைந்தையும், அவ்லி யாக்களுக் கல்லா சொன்னான்-சேருந்திருமீதில் வரும்வணக்கச், செய்கை யாவுமே யறியவேணும். (117)

சொந்தப் பதினைந்தா மெழுத்தானதிற், றோற்றும் பதினைந்திற் பரிபூரணம்-இந்தப் பதினைந்து மானபின்னர், ஈயும்பீர்வெளி தன்னிற் றோற்றும்-அந்தம் பதினைந்தும் பதினைந்துந்தான், ஆண்ட வன் சொன்னான் பீறெனவே-மூந்திப் பதினைந்து கூடுவது, முழுதுங் குறைவராதோதுவதும். (118)

ஒவ்வொன்றாய்ப்பதி னைந்தையுந்தா, னொருவன் ஹலறத் திலொவ் வொன்றாக்கி-வவ்வி யவரவர்பரிபூரணர், வந்துவளைந்தது சந்திரன்றான்-எவ்வியிறையவன் ஹலறத்திலே, யேகிபிறைமுன்னே வணங்கியவன்-செவ்வின் படியேதான் சேருவது, சேர்ந்த படி கேளுஞ் சந்திரனே. (119)

இதுவே பதினைந்து பதினைந்துதான், இறையோ னொருமாத மெனவோதினான்-சுதியார் பதினைந்து பதினைந்துதான், சுபுஹான றப்பில் ஆலமீனே-மதியால் மனுடர்க்கு மூச்சானதில், வைத்தான் பதினைந்து எழுத்தாகவே-விதியாம் படியறிவாளருக்கு, விதித்தான் வணக்கத்தின் மூச்சுமிதே. (120)

அஞ் செழுத்தாலே யிருந்ததுவும், அஞ் செழுத்தாலே பிறந் ததுவும்-அஞ் செழுத்திலே பறந்ததுவும், ஆகப் பதினெந்து எழுத்த தினுற் கொஞ்சி விளையாடு மிரவுபகற், கோமா னின்முப்ப தெழுத் தான தும்-நெஞ்சி லிருந்து றாறுமுன்னே, நிறித்திக்கொள் மூச்சை வணக்கத்திற்கே. (121)

வணக்கம் படியாத மாபாவியார், வணக்கம் படித்துக் கொண்டிறைையவனே-மணக்குங் கலிமாவால் வணங்கிநின்று, மஹாபூ பெணும் நபீரைத் தொடர்ந்துகொண்டே-அணக்கி முஃமிகீம் பாலத்திற்கங், கருளாம்பீர் கையைப் பிடித்துக்கொண்டே— இணக்கஞ் சுவர்க்கத்திலேற வேண்டு, மென்றே முஹம்மத ரோதினுரே. (122)

ஆனுற் பதினெந்து மறியாதபே, ரவர்களைக் கேட்பே னென வோதினுன்-தானுற் பதினெந்து மறிந்தபேரைத், தனித்துப் பேசுவேனெனவோதினுன்—மானேர் குருவான முஸ்லிம்களே, வண்ணம் பதினெந்து எழுத்தானது-கோனு னறியவும் படிக்கவுந் தான், கோமான் தான்சொன்னுன் பறுலாமென்றே. (123)

குன்னென் றெருநாம மொருக்காற் சொன்னுன், கோமான் பலவகை படைத்தானதிற்-குன்னென் றுங்கிக்கொள் ளெனவோ தினுன், குறுஆன் வரிவசையைப் பார்த்துங்கேட்டும்-குன்னென்ற பானஷ் குதறத்தாச்சுச், கோலா கோலங்கள் பலவாக்கினுன்-குன் னென்ற சொல்லில் முந்தக்காபு, கொஞ்சி யிருப்பது பொன்னுச் சுதே. (124)

குன்னென்று சொன்ன இசுமாவது, குறித்த காபுக்குக் பின்னே வந்த-அன்னு நூனென ஆனுச்சுது, ஐம்பதுவகை வகை யாச்சுது-மன்னர் தாம்சொன்ன பேச்சானதும், வள்ள லாகிய சுக்கூனுனதும்-திண்ணம் ஆணல்லைப் பெண்ணுமல்லைத், திசையில் ரண்டெனு மிஃதருமே. (125)

ஆக எழுபத்தி ரண்டானதும், அழகு சப்பாக இன்ஸான தாப்க்கோவு கொடுமுன்னே வருத்திக்கோமான், கோமா னுனவன் பலவகையாய்-ஆவென் றுக்கினுன் பலபண்டப்பை, அருளும் வகை யின்னுஞ் சொல்லக்கேளும்-ஏக நாயகன் தனையறிந்தே, மியல்பு செய்யுங்காள் முறுஷிதுக்கே-ஆகு மிவ்வகை யெல்லாத்தையும், அறிந்து நடக்கவும் விதியாகுமே. (126)

இருபது பெண்ணுக் கிணையாவது, எழு இரவொரு கலைவாவெ ளும்-மருவி விளையாடும் நபியுடனே, மன்னன் பொன்னூர்க ளெட்டானது-குருவி னபியோடே கூறுல்ஹீன்கள். கோமான் குமரோடு மூசியு மென்றும்-திருவின் புவிக்காவி லலமத்தானெனூர், திண்ண மதுக் குத்தான் சொல்வதுவே. (127)

வானேழ் புவியெழ்பைத் துல்பலிமுறில், மருவு மிருபத்து நாலானதும்-தானேன் பகலேழுஞ் சிங்காசனந், தரித்த ஆறுதான் அறு ஷாகுறுசு-ஆனே னைம்பது ஆணினமும், அன்றான் குன்னென்ற பேச்சானதில்-ஆனேன் ஈமானை நிறுத்திவைத்தான், மூஹம்மது நபியிதி லிருந்தார். (128)

பூமான் தனமான புதுமைகளைப், புகலக் கேளுங்கா ளெல்லோரு மே-கோமானுனவ னுக்கினதைக், குன்பயக் கூனிற் கேட்பதுவே-ஆமாமஃதுண்மை யாகுமென்றே, யறிந்து கடக்கவும்விதியாமென்றே சிமான பியும்மத் தானவரே, திடமாயறிந்துதா னடப்பீர்களே.(129)

இஞ்ஜீல் தௌறீத்தா மிதுவாமென்றும், இன்ன படியாகும் காபும் றானும்-அஞ்சியஞ்சாம லருளாமென்றும், ஆபத்துபோனால் வருமா மென்றும்-கொஞ்சி விளையாடுந் தவுசானதிற், கோமானை வன் காண்பா னென்றும்-கொஞ்சி லறிந்தாபீர் மூசீதாவதும், சிபுணர் நபியுடன் கூடுவதே. (130)

உறுதியிவையெல்லாம் நூற்றைப்பதி, னுள்ளபறுலாகு முஸ்தாதுக்குப்-மறதியில்லாத முறுஷிதுக்கும், வைத்தா னபிஷபா அத்துப் பெற-அறுதி குறையாத புறப்பறுனும், ஆக நூற்றைம் பதானதையும்-பொறுதி தருப்புறக் காணுனதைப், போற்றிம் வகையதிற் சாற்றியதே. (131)

நல்ல ஷரீ அத்து வித்தாச்சுது, நலமாந் தரீக்கத்து மரமாச்சுது-எல்லை ஹக்கீக்கத்துப் பூவாச்சுது, இலங்குங்கனியாச்சு மஃறிபத்து-சொல்லும் ஷரீ அத்துத் தோலாச்சுது, தோற்றுந் தரீக்கத்துத் தசையாச்சுது-செல்லும் ஹக்கீக்கத்து எலும்பாச்சுது, வெண் மூளையுமேலு மஃறிபத்தே. (132)

அலிபு முதல் ஹேயும் ஷரீ அத்தாச்சு, அருளும் தாலமுதல் சாது மட்டும்-மெலிவில் லாமலே தரீக்கத்தாச்சு, மேலோன் லா தொடு காயு மட்டும்-லுலியின் ஹக்கீக்கத்துத் தானாச்சு உற்ற காபு

டன் ஏமட்டாக-வலியோன் மஹரிபத் தாச்செனவே, மத்தோ டிஷீரூபு முஹறப்பத்தாமே. (133)

அண்டர் புரியில் ஷரீ அத்தாச்சு, அருளு மீக்காயில் தரீக்கத் தாச்சு-விண்டாரி சுரூபில் ஹக்கீக்கத்தாச்சு, மேன்மை யிசுரூயீல் மஹரிபத்து-தொண்டர் பணிவிடைச் சொல்லானது, சுஜூதிடும் பெரியோர்க ளோத்தான்-கொண்ட நாயம னல்லாவென்றால், கூவே முஹறப்பத்துத் தானதுவே. (134)

ஆனல் முஹம்மது ஷரீ அத்துக்கு, ஆதார மாமிந்த ஆலநபி-தேனர் தரீக்கத்து ஆதம்பாவா, செம்ம லாகினு ருண்மையாகத்-தாஞேனிபுரூஹீம் ஹக்கீக்கத்துக்குத், தரித்த காரணத் தனமுடை யோர்-ஈன மில்லாத மஹரிபத்துக், கேவினன் புலியலி யாரைத்தான்.

பேச்சு ஷரீ அத்து மூச்சானது, பெரியோன் தரீக்கத்து கேள் விதானும்-ஆச்சு ஹக்கீக்கத்து கண்ணனது, அருளு மஹரிபத் தென வோதினர்-பேச்சும் பல்க்குத்தி ஷரீ அத்தாகும், பேறு பெற் றத்தான் தரீக்கத்தாகும்-வாச்ச ஹக்கீக்கத்துக் கருஈரலாம், வள் ளல் தாமரை மஹரிபத்தே. (136)

அந்த ஹேமீம் ஷரீ அத்தென்றும், அந்த யாசீன் தரீக்கத் தென்றும்-அந்தத் தாஹா ஹக்கீக்கத்தென்றும், அந்தநெறிாளி யுன் னூபூசல் முவ்மினத்தி-அந்த மஹரிபத் தாகுமென்றும், அல்லாதான் சொன்னன் குறுஆனிலே-அந்த மவுலாகப் முஹறப்பத்தென்றும், அருளோடமைத் தன்னுள்ளுடையவனே. (137)

தவ்றாத் தானது ஷரீ அத்தாகும், தாங்கும் சபூறுதான் தரீக் கத்தாகும்-எவ்வில் இஞ்ஜீல் ஹக்கீக்கத்தாகும், எங்கள் முஹம்மது நபி தமக்குச்-செவ்வி தாகவே சொன்னனென்று, செய்தி யறியுங் காயென்று சொல்லி-பவ்வா றுலகத்தோ ரறியவிதி, யேவும்பீருக்கு மற்று ளோர்க்கும். (138)

தகும தாகிய முஹம்மதுக்குத், தங்கும் புறுக்கானைத் தகும தாக்கிப்-பகுமதாகிய இல்முக் கெல்லாம், பாங்காய்த் தாயாகும் குறு ஆனது-மகாா ஜன்புறுக் கானதுவே, மஹரிமத்தென்று பின் னுஞ் சொன்னன்-மிகுறு ஜானதும் உம்முல் குறூன், மிகுத்த முஹறப்பத்த தென்றேதினன். (139)

அன்னக் கொடையிடுங் கருத்துடையா, ராலி முஹம்மது நபினருக்கு-மன்னன் ஷரீபத்துப் பகுர்துவைத்தான், வல்லோன் பறுலான காரியத்தை-மின்னும் சுஜுதுலாம் தரீக்கத்தென்று, மிகுந்த ஹக்கீக்கத்து வாஜிபென்றும்-உன்னும் சுன்னத்து மஃறிபத்து, மோதும் கூவெல்லா முஹப்பத்தென்றும். (140)

உன்னு முஸாஹிதா ஷரீ அத்தாச்சு, உற்றமுறுக்கப்பா தரீக்கத்தாச்சு-அன்ன இருஸாது ஹக்கீக்கத்தாச்சு, அரிய காமிலே மஃறிபத்தாம்-துன்னுர் தைபிபு ஷரீ அத்தாச்சு, சொல்லும் ஷஹாதத்துத் தரீக்கத்தாச்சு-மின்னுங் தன்சீகு ஹக்கீக்கத்தாச்சு, மிகுந்த தசுபீகு மஃறிபத்தே. (141)

லா இலாஹா இல் லல்லாவென்று, நாடிச் சொல்திக்கிர்ஷரீ அத்துக்கும்-ஒய்வில்லா மல்இல் லல்லாவென்று, மோதுர் திக்கிறு தான் தரீக்கத்தாகும்-ஆயுமுமினல் லாவெனவே, அருளுர் திக்கிறு தான் ஹக்கீக்கத்தாகும்-நாயகனல்லா அருளுதிக்கிர், நளின மஃறிபத் தாகுமென்றார். (142)

கூவென்ற திக்கி றூனதுதான், கோமான்முஹப்பத் தாகுமென் ருர்-காவென்ற பனு வானதிலே, காணும்காசிலாகிய காரியம்-ஏவென்றதாலி லிருப்பதுவும், இல்மு நளினங்கொண் டிருப்பதும்-ஆயும் கலிமாவில் வணங்குவதும், அல்லா தான்சொன்னுன் பக்கருவிலே. (143)

மன்னுங் கலிமாவில் தன்சீகுண்டும், வரிசை யருளுண்டுர் தசுபீ குண்டும்-உன்னும் பனுவுண்டும் பக்காவுமுண்டு, மூறுதி இதுபாத்து நபியுமுண்டு-மின்னும் ஜமாலுடன் ஜவாலுமுண்டு மிகுர்த கமாலுடன் கருணையுண்டும்-பின்னி விளையாடப் பிறவியுண்டும், பிறவியதை நீக்க முறையுமுண்டும். (144)

அவ்வல் ஆகிறுவுமுண்டும், அல்லா முஹம்மது தாமுமுண்டும்-செவ்வின் மன்கூஃ மருக்கூசுண்டும், சீமான் குதறத்துஸ் தாது முண்டும்-கொவ்வுமு லாகிறு பாத்திலுண்டும், கோமான் ஹயாத் துண்டு மவுத்து முண்டும்-பவஷ அடியார்கள் பிழை பொறுக்கப் படைத்தோன் பணிவிடை தானுண்டுமே. (145)

ஆறு திசையுண்டு மமரருண்டும், அவலி யாவானோர் தாமுமுண்டும்-மேவு-மியார்களு முசல்லிலுண்டு, மிருந்த பலபல நூல் களுண்டும்-ஊறு மறிவையாய்த் தறிவதாகு, முற்ற முறுக்கபா

முஷாஹிதாவும்-தேறுந் தெரிசனைக் குணமுமுண்டும், செய்கை பெண்ணாள் முத்தலக் குண்டே. (146)

உற்ற ஹலாலுண்டும் ஹறாமுமுண்டு, மோசையுள பாவைஷ தானு முண்டும்-செத்துப் போகவும் பிழைக்கவுந்தான், திரு முன்னே நின்று றகுமானைத்தான்-மெத்தம் புகழவு மேதுண்டென, மீண்டு பேசவு மிடைவிடாமல்-அத்தந் தரும் பிறப்பில் ஆலமீனை, யல்லும் பகல்காண அருளுமுண்டே. (147)

நஞ்சு கோபமுந் தீமையுண்டுப், நல்ல பறலுண்டும் சுன்னத் துண்டு-மிஞ்சும் ஷறுத்துண்டும் வாஜீபுண்டு, மிக்க ஷாஹிது ஹக்கு முண்டும்-கெஞ்சிப் பிறவிகண் கருவிதங்கள், செடிகள், மலைகடல் வான்புவியும-விஞ்சும் பார்வை யெழுத்தினாலே, விசை கொண்டிருத்திமெய பார்ப்பதுவே. (148)

கேட்கு மோசையைக் கலிமாவிலே, கிருபையுடன்வைத்தக் கேட்பதுவும்-கேட்கும் வேளையில் ஹாலிருக்கும், கேட்குங் கேளாம லிருக்க வேண்டாம்-கேட்கு மொரு நேரமந்நேரமே, கிபுலாத்தனை நோக்கி யிருப்பதுவே-கேட்கு மிவ்வகை யாவையுமே, கிருபை வைக்கவும் விதியாகுமே. (149)

இதுதானே யொன்றுண்டானதுவு, மில்லா மல்நபி யானது வும்-அதுவு மல்லாம லப்பாற்சொலவே, ஞதி யாஷக்க தானதுவும்-பொதுவா மகுஷமிக்க தானதிலே, போது முஹம்மதுநபியைப் பார்த்துச்-சதுமா மறைகொண்ட கலிமாவிலே; தானுய் முஹம்மது சொன்றதுவும். (150)

உறக்க மானது மவுத்தாமென்று, முன்னும் விழிப்புத்தான் ஹயாத்தாமென்றும்-சிறக்கும் றகூலென்ற எழுத்தினாலே, சிறந்தே யிருந்தது ஹயாத்தாச்சுது-பறக்கு முறக்கந்தான் ஜம்ஆகிய, பார்வை விடாமலே முஹம்மதுவைவிற்கப் பாருங்காள் மூமின்களே, நீங்கள்தீன்கலி மாவ மாவதிலே. (151)

நேர்மையென்பது முஸ்தகீமாம், நேர்மைக்கெட்டதங் கொயி லோடையாய்ப்-நேர்மைக் கொண்டது ஹலாலதுவாம், நேர்மை கெட்டது ஹறாமதுவாய்-ஓர்மை யென்பது நிலையானதாம், ஊறும் நிலையது மகு ஷறுவாம்-கூர்மை யென்றது மோர்பார்வையாம், கூர்மை யொருநெறி நேர்மையமே. (152)

முன்னே சொன்னது முறையான சொல், முற்று மறுஷுக்கு மதுவே யாகும்-பின்னே ஷாபரென்ற சொல்லானது, பெருத்துப் பூமியி லிவைகொண்டாக்கும்-தன்னை அக்துபறென் றதுதனையே தரித்தங் கறிந்தவ னெடிதாகவே, அன்னை தந்தைக்கு முன்னான வனதுவே றுக்தார்வா மழகாகவே. (153)

வெளியா விருளாகும் பகாவானதை, வேந்த நபியிறசூல் கேட்கவே- அழிவில் லாதவைத் தெழுத்தாமஃ, றகுதே பனு வாகுங் கலிமாவிலே-தெளிலா இலாஹ இல்லல்லாவென்ற, சிறந்த வொளியிஃதென வோதினன்-அழிவில்லான் றாதர் ஹபீபான வர்க் கானு மாண்பிள்ளை முஹம்மதுவே. (154)

வழியாம் அவ்வலே முன்சொன்னது, வரிசை நாயகன் அஹமதென்றான்-எளியோர்க் கிரங்கிய இறசூ லென்றான், இதுவே மேலாம் லாவு மென்றான்-பழிபோகச் சொன்னான் பளபளெனப் பார்க்கப் போகவும் சுவானதை-யொளிவீசுந் தாஹா முஸ்தகமி, லொரு நிலை கொண்டார் கலிமாவிலே. (155)

ஒலிமா ருலமாக்க ளிடந்தனிலே, யுவந்தே யறிவுகள் படிக்க வேண்டி-மெலிவாய்ப் பயந்தஞ்சித் திறைகட்டியே, பீலிமார் பலர் சொல்லல வவர்-சலியா மனத்துடன் சந்தோஷமாய்த், தனித்து மூடுகியே கொல்கிறது-அலிமாம ரைவர் ஹதீதின்படி, யழியா வமானதச் செயலாகுமே. (156)

மிச்ச மாகவே மஹருவைத்து, மேலோன் விதிப்படி நிகாஹு செய்து-வச்ச புருஷனைக் குருவுமாக, வரிசை யறிவாளர் பீருமாக-அச்ச மாகவே யறிவுகேட்டே, அல்லாதனை நித்தம் வணங்காமலே-பிச்சை வாங்கிற பக்கீறுகளைப், பிடித்து நடப்பது மடிப்பாகுமே.

கண்கள் காணாத காட்சிகளைக், கண்டபேர் சென்று கவலும் போது பெண்கள் கிடைக்காமற் பெருமூச்சிட்டு, பிச்சை வாங் கியே -இன்போர்கள்தா-னுஜீவத்தோ பணங்காசியி, னுதவியா லுடல் கொழுத்தே யுங்கள்-பெண்கள் தனியே வருவது பார்த்துப், பெருமூச்சுத்தீர் அமல்கள் செய்வார். (158)

ஷறஹில் நடவாத ஷெய்கெடத்திற், றையல் கைநீட்டி முரீது கேட்டால், விறகில் நெருப்புபோற் பிடித்தவளே, வேண்டுங் கருமங்கள் செய்திடுவார்-உரவு போனாலு மவளைவிடா, ருடனு முயிரும் போற் கலந்து கொள்வார்-பறவை படகண்ணி வைத்த வேடன் பாய்ந்தே யமுக்கல் போ லமுத்திக் கொள்வார். . (159)

தனித்த பெண்கள்தான் கிட்டவந்தாற், சறகுசறுகிய ஷெய்குமார்கள்-நினைத்த நினைவுகள் தான்தவறி, நீலிகோலத்தைப் பார்த்துப் பார்த்தே-இனித்தே யிருக்குமென் றவள்தனையே, வெட்டிப் பிடித்துத் தான் கட்டிக்கொள்வார்-கனைத்த குர்லாற் பெண் குதிரையது, காந்து வழிசெல்கி லாண்குதிரை-நினைத்துக் கனைத்துத்தான் துரத்தியோடி, நேரே யொன்று போற் கூடுமென்றார்.

மஹறி பத்தான மாணிக்கத்தை, வண்டப் பெண்டுகள் இருவிக்கவே-பயிரு பற்றியே பயன்கொள்வதின், பருவ மறியாமற் கிரமந் தப்பி-வயது பத்துக்குள் தேடிக்கூடி, வலிய இருபேரும் வினைவிலாவார்-சயிரும் ஷறக்குள்ள ஷெய்கைத்தேடி, ஹலாலா முரீதுகள் வாங்கு மென்றார். (161)

மந்திரவாளன் மஹறிபத்தன், வகையை யறிந்துபே ரேர்க்க வேண்டும்-தந்திர மில்லாப் பேரெடுத்தாற், றவறிக் காயங்கள் பட்டுச் சாவார்-அந்தர மான அறிவதுதா, மழகா மொலிமார்கட் காகுங் கண்டீர்-இந்தக் காலத்தில் மூடப்பெண்க, ளெல்லார்க்குஞ் சொல்ல ஆகாதென்றார். (162)

ஆணி முத்தான மாணிக்கத்தை, யறிந்த பீரிட மடுக்காமலே-தோணி தனிலேறி மீன்பிடிக்குந், தொள்ளை நாளையர்க்குக் கல்வியீந்தாற்-பேணி வைக்கவுந் தெரியாமலே, பெரிய கடைதனில் விலை கூறுவார்-காணிக்கை யான மாணிக்த்தைக், களவுகொண்டா ரென் றெட்டிப்பாரே. (163)

தொட்டா பேர்சிலர் கெட்டுப்போவார், தொடாத பேர்சிலர் கெட்டுப் போவார்-திட்ட மறிந்தவர் லட்சத்திலே தெரிந்த பேர் தேடி யெடுத்துக் கொள்வார்-மட்டிலாப் பெரும் வாழ்வுடையோன்-வரிசை முஹம்மது போனோர்-வெட்டியிபுலீசை வெல்லுமந்த, மெய்யா முஹியிதீன் வழிதனையே. (164)

ஆதி யிறக்கிய வேதந்தன்னை, யறிந்த முஹம்மத ரவர்க்குப் பின்னர்-ஓதி யிருக்கின்ற ஆலிமவ, ருண்மைச் சாலிஹா யிருந் தாலுமாம்-பேதை மடவார்கள் தனித்தேகாமற், பெலமாய்ப் பல பேருங் கூடிக்கொண்டு-காது தலைமுகங் கால்கையுடற், காணுமற் பேணிஹதீது கேட்பீர். (165)

கொடிய குபிரேது பாவதுமேது, கொத்தவ னேவல் விளக்கே தென்றும்-கொடியோன் பறுலுகள் தானுமேது, நீண்ட நபி சுன்னத்தே தெனவே-அடியார் ஷெய்ஹறு மேதெதனவே, ஆன ஹால்மக்றா ஹேதெனவே-வடிவாய் ஹதீதுகேட் டேகடர்தால், வல்லோன் தனக்கான ஷுரீதுதானே. (166)

அறுஷு தலையாகும் குறுசுநெற்றி, ஆபுறுக் காபக் கபுசைனி தான்-புருவ மிடையது மகுமூதாகும், பொங்கு மூளையும் நசிருவா கும்-நெறியும் காசியே தூறாசினு, நிறைந்த தந்தமும் அறுஷுதின் பாம்-கருத்தானது பைதுல் மகுமூறெனக், காட்சிக் குருவிதைக் காட்டினரே. (167)

ஓதும் நெஞ்சது சுவர்க்கமாகு, மொளிவாம் பைத்துல்லா கல்ப தாகும்-தீகின் வயிறுமே நரகமாகுந், திரண்ட நாவியு மக்கமாகும்-போது மிருகையும் லெவ்குகலம், புல்சிறுத்து மேல்வயிற தாகும்-பாதர் தருத்தத ருவுமீசான், பாழ்பின் வாழ்வுமுன் பரமாகுமே. ()

பாரி லாறுக ளருவிகள்போற், பார வுடலிலே நரம்புகளாம் தேறு மெலும்புகள் மலைகள்போலே, தேக ரோமங்கள் செடிகள் போலே-வாரி கடலது மூதுகேயாகும், வைத்ததினுலு நரம்பு காலே-தாரி லுயர் போகளிவையறிந்து, தவங்கள் செய்யவுங் கடனுகுமே. ()

நாவி லெலும்புநெல் ளெவிலுண்டும், நயனமதிலெலும் பெள் ளளவாம்-தாவும் கல்பிலே திணையளவாம், தக்கறி லெலும்பு கோதும் பை போலாம்-மேவும் ஜடத்திலே வலதுபாகம், மிக்க மகுமூதின் பாங்காகுமே-ஏவு மிடதுபால் அஜாவஸீலாகும், எங்கு மிருபங்கென் றியம்பலாமே. (170)

வான மேமழையு மதனுடலில், வகுக்கக் கேள்தாழ்வாய் நாசி யுடன்-காணுங் கண்ணுடன் புருவம்நெற்றி, கனத்த வுச்சியு மண்டை

யோடாம்-தோணும் புவியேழில் முதலாவது, தோள்மார் பிடை வயிறொடு துடையாம்-பூணுஞ் செவியோடு காமுடனே, பூமியிலீ தேமென் றியம்பலாமே. (171)

ஹைய்யுல் கையூமான அமாவதிலே, கன்சுல் மகுபியா யிருந்ததுவும்-ஐந்து விதமான திக்கிறதிலே, ஹையுல் கையூமா யிருந்ததாலே-சையி திறசூலுர் திருவொளிவுஞ், சகல வஸ்துவுஞ் சதுர் வேதமும்-வைய மதிலுள்ள வகைபலவும், வாகாய்ப் படைகோலமானதுவே. (172)

அந்த விதமைந்து ஜல்லிக்கல்பி, லடக்க மாம்றாஹி சிர்றிகபீர்-எந்த விதமிதைச் செய்வதென்ன, இயல்பாம் ஷெய்கிடமிணங்கிக்கேளு-மூந்த கபீயினில் நஜமிலாகிய், மூர்க்க ஜல்வியில் முழுக்கமான விந்தை யறிவதா லுன்ஜடலம், வீணி லழியாதே யுண்மை பாரே. (173)

ஆதி யொளியலீ தாதமிய்யாய், அமைத்த வகையலீ தருளக் கேளீர்-சோதி அஹதியத் துஹதத்தாகித், தூக்கமானவா ஹிதியத்தாகி-நீதி ஆலமுல் அறுவாஹென்றும், மிழலா மிதாலென்றும் அஜிஸாமென்றும்-சாதியறிவுபி ரின்சா னென்றும், சாற்று மறுத்தபா ஏழாகுமே. (174)

தாத்துப் பொங்கியே இசுக்குண்டாச்சு, தக்க இசுக்கினல் நூறுண்டாச்சு-சாற்றும் நூறெனு மொளிவதாலே, சருவ ரகசியச் சிர்றுண்டாச்சே-தோற்றும் நபுசினல் றாஹுண்டாச்சு, துய்ப றாஹினல் ஜடலமென்றார். (175)

சோதி யொளியான றாஹுடைய, சொந்த வீடறு பத்து நாலாம்-பாதியதி லேந்து பூதமதின், பாரக் குணங்களு மக்காமும் ரண்டாம்-சாதி நபுசுடல் கல்புமன்சில், சருவ அக்கிலவை வகைக்கைந்தாகும்-ஆதி யான சிபாத்தேழுட, ஞக அறுபத்து நான்குமிதே. (176)

சொல்லும் நூஹதில் நாலுவிதம், கபுஹா னமைத்ததோர் பங்குகேளீர்-கல்லு மலேமண்ணுஞ் சமாலியத்தில் கலந்து றாஹதுதபக்கியத்தாம்—நல்ல தபாக்கியாம் கேவும்வேலே, நாட்டமுடன் செய்ய அடுமைரண்டாம்—வெல்லு மதின்பேரு கிப்பாதென, விளையும் திலீலெனவிளம்புவாமே. (177)

இரண்டாவது றாஹூகபாதியத்தாம், இருககும் புற்பூடு வர்க்கமதி-லென்று விசைந்ததோர் முவ்வெட்டுட, னிருநாள் கருமைமே லதிகமாகும்-கொண்ட ஜாதிபா மாசிக்காவுங், கொல்லுங் காமாவும் தாபிக்காவும்-விண்ட முமைபிசா முசவ்விறுவும், விளங்கு முனமியா மு அல்லிதாவும். (178)

மூன்றாவது றாகுஹைறவானியத், மூன்றுன்கடுமைமூன் சொன்னதுடன்-பானு லாமிசா ஷாமிஷூவும், பாசிறுஷாமி தாபிக்காவும்-ஊனும் ஹிபுனுடன் பிக்குதரும், உற்ற கியானுடன் முஸ்தரிக்கும்-காணும்கோப முங்சகு வத்துடன், ஹைறவா னியத்த தடுமையாகும்.

இன்சானிய்யத்தாம் நாலாவதிங், கிசையும் நாத்திக்கா பஷரியத்தாம்-முன்சொல் அறுவாஹூம் அடுமைகளு, மூவெட்டோடொன்று மிதுக்குள்ளாகும்-துஞ்சும் அமலது கலரியத்துங், துலங்கும் அமலேயும் சொந்தமாக்கும்-இன்சா னிதுவகை இருபத் தெட்டும், இதமாயறியவே பறுலாமென்றார். (180)

என்றே யுடல்தானும் மத்துலே, மிலங்கும் சுக்கூனஃ திருப்பாமென்றும்-நின்றஹறுபது நுகத்து றாஹாம், நிறையும் வட்டமே கண்ணடியாம்-கொண்டல் குடைமேவும் நபியிறசூல், கோமானுரைத்ததைக் கூறினரே-என்று மிவ்வகை யறியவேணு, மேவல் பிருக்கும் குருமார்க்குமே. (181)

ருஹீதுப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 25-க்குத் திருக்கவிதை 905.

# யோகமூலிபுனுகு கரந்தைப்படலம்.

தொங்கல்.

ஆக்கும் வகைகேளு மூமீன்களே
யானல் வாசியைத் திறப்படுத்த
நோக்குஞ் சரீரத்தைக் காமிலாக்க
நுண்மை யாகிய வோரெழுத்தைப்
பார்க்கப் பார்க்கவே வெளியாமது
பராக்கொன் றில்லாமல் நிலைநிறுத்த
ஏரக்கு நத்துபுதான் வெளியிற் போகா
தென்று லொருமொழி சொல்லக்கேளும். (1)

நோக்கு நத்துபுதா னேபாதென்றும்
நோய்கள் வந்துதா னடாதென்றும்
சேர்க்கு மருந்தொன்றும் வேண்டாமென்றுஞ்
செய்யும் வினைசேர மூறியுமென்றும்
பார்க்கு முஷாஹிதா வெளியா மென்றும்
பரிந்த மூமின் தா னுவானென்றும்
ஆர்க்கு மிதுபோது மென்றூர்நபி
யானு லிதுதின்னுங் கருவைக்கேளீர். (2)

தண்ணி னிழலதிற் படவொண்ணாது
தனக்கு மதினிழற் படவொண்ணாதிங்
கெண்ணி முப்பஃ தாயத்தினை
யிதமா யோதிககொண்டே முடிக்கச்
சொன்ன படியந்த ஆயத்திற்குத்
துலங்கும் அலிபுலா முன்னேவரும்
அன்னபடி சொன்னான் குறாஆனிலே
அலா இன்ன ஒளலியா ஆயத்திலே. (3)

நல்ல கரந்தையாம் புனுகரந்தை
ஞாய முட்சையிற் சூரியனு
மெல்லை யுடனேதா னுதிக்கு முன்னே
யேக நாயனைத் தொழுது கொண்டே

யல்ல லறச்சமூ லத்தினுட
    னுகப் பிடிங்கிக்கொண் டேயுலர்த்தித்
தொல்லே யறப்பொடி யாக்கிக்கொண்டு
    தொகுத்துத் தின்னத்தான் சொல்லக்கேளீர். (4)

புமூகு காந்தையைப் பொடித்தபொடி
    புதிய பாண்டத்தில் வைத்துக்கொண்டு
வமூவறுந் தேனலைதக்குழைத்து
    வைத்துச் சூரிய னுதிக்கும்போது
தொழுது தீர்த்தக்கா லதையெடுத்துத்
    தொகுத்தே யேழுநா ளேழ்களஞ்சி
பழகித் தின்னுங்காள் நபியும்மத்தே
    பகரும் லுக்குமானுல் ஹக்கிமோதினர். (5)

இதையே யிப்படி யேழுநாளு
    மிதமாய்த் தின்றபோ தன்னபுசு
பதிவாய்த் தெளிவாகி நோய்கடரும்
    பகரு நுத்துபுதான் திரண்டுகொள்ளும்
அதமாய்ப் பெண்மாயை யகற்றிவைக்கு
    மதுவே போதுமென் றருளிச்செய்தான்
கரியா னிப்பாஷை யிருபத்தெட்டாம்
    தும்முன் றனக்குள்ளே அல்லா ஹுக்கே.

புத்தி வருங்காலஞ் சித்திவரும்
    புகமூங் காலேயி லிரக்கம்வரும்
சத்தி வருங்காலஞ் சீவன்வருந்
    தனக்கு மறிவான காலேயிலே
முற்றும் பக்கமுவில் அல்லாசொன்னன்
    முழுது மோரெழுத் தானதையே
யெந்தக் காலமும் வாசிலாக்கில்
    இல்மை யறியலா மூமின்களே. (7)

யோகமூலிபுனுகு கரந்தைப் படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 26-க்குத் திருக்கவிதை 912.

வேதபுராணம் முற்றிற்று.

---

Printed at Shahul Hameedia Press, Madras 5

TAMIL NADU ARCHIVES ... CHENNAI

# சுல்தான் இப்ருஹீம் இபுனு அதஹம்

## காரணமாலை.

இதில் சுல்தான் இப்ருஹீம் இபுனு அதஹம் அவர்கள் சக்கரவர்த்தியாய் அரசுசெலுத்தியும், அது நிலையற்றதென்றுணர்ந்து உடனே அரசாட்சியைவிட்டு நீக்கி ஆண்டவன் பதத்தைவேண்டித் தவஞ்செய்து எண்ணிலடங்கா அற்தபுங்களையெல்லாம் நடத்தி முடிவில் நற்பதவி யடைந்த சரித்திரமெல்லாம் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இது பெண்களும் கூடப்படிக்கும்படியாக இனிமையான தொங்கல் முதலிய பாடல்களால் செய்யப்பட்டிருப்பதால் எவருக்கும் மிகுந்த ஆனந்தத்தையும் நல்லறிவையும் ஆண்டவன் அருளையும் உண்டாக்கும். முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கி அவசியம் படிக்கவேண்டும்.

இதன் விலை ரூ. 1—9—0

# புஸ்த்தானுன் அஹ்றக்கம் பீதிக்ரி கிஸ்ஸதி இப்ருஹீமிப்னி அதஹம்.

இத்தக் கித்தாபாகிறது நாயகம் சுல்தான் இப்ருஹீமிப்னு அதஹம் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரமாகவிருக்கும். இதில் அவர்கள் அவதரிக்குமுன் அவர்கள் தாய் தகப்பனார்களுடைய சரித்திரத்திலிருந்து ஆரம்பித்து அவர்கள் அவதரித்துப் பிறந்து, வளர்ந்து, இராஜாங்கஞ்செய்து அப்பால் அவ்விராஜாங்கத்தைவிட்டு விலகி தக்வாவென்னும் பாதையிற்றிரும்பிப் பேரின்பக் கடலில் மூழ்கிப் பெரும்பதவி பெற்று இப் பூலோகத்தைவிட்டும் உபாத்தென்னும் பிரயாணமாகிய வரையிலுமுள்ள சரித்திரங்களை யொன்று சேர்த்துப் பத்துப் பசுல்களாகச் சேகரிக்கப்பட்டிருக்கிறது.

இவை கிளேஸ் காகிதம் விலை ரூ. 1—4—0

ஷை அறபு தமிழ் விலை ரூ. 1—9—0

---

இவைகள் பெற்றுக்கொள்ளுமிடம் :—

**ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,**

ஹமீதிய்யா பில்டிங்க்ஸ், நெ. 20, ஹைரோட்,

திருவல்லிக்கேணி, மதறாஸ், 5.